www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
15 - 21.08.1993 ரூபா 8/50
දිනමුරසු වාරමලර්

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 12



சன்னதம் கொள்ளும் சிறிமாவோ அம்மையார்!



களத்தில் பெண் புலிகள்
எக்ஸ்ரே ரிப்போர்ட்



ரஜனியின் வண்ணப்படத்தோடு சினிவிசிட்

உலக ரவுண்டப்

கதை
பாப்பா முரசு
விடுகதை

கூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புடன் உங்களுக்கு
வணக்கம்.

எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சனைக்கு
தீர்வுகளைத் தேடவேண்டிய நேரத்தில்
எண்ணெய் எடுத்துக் கொண்டு வருகிறது
இனவாதம் நிறைந்த தீவிரவாதம்.

கொழும்பில் போஸ்டர் போடுகிறார்கள்:
"இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை கிழி
மாகாண சபைகளை கலை"
கையோடு-
நாட்டையும் பிரித்துக் கொடுத்துவிட்டால்
போஸ்டர் போடும் சிரமம் இருக்காது.

அவலை நினைத்துக் கொண்டு
உரலை இடிப்பதையே
வாடிக்கையாகக் கொண்டதால்தான்
தீராத அவலமாய்
யுத்தம் தொடர்கிறது.

கிழித்துப் போடப்பட்ட ஒப்பந்தங்களும்
கழித்து விடப்பட்ட தமிழர்களின் அபிலாசைகளும்
கொதித்தெழ வைத்ததின் விளைவுதான்
வடக்கு-கிழக்கில்
வெடித்துக் கிளம்பிய ஆயுதப் போராட்டம்.

இப்போது நிலமை கொஞ்சம் மாறியிருக்கிறது.
தமிழ் அமைப்புக்கள் பல
ஜனநாயக பாதைக்கு திரும்பியிருக்கின்றன.

ஈ.பி.டி.பி- புளொட்-ஈ.பி.ஆர்.எல்.எப்
ரெலோ போன்ற அமைப்புக்கள்
ஐக்கிய இலங்கைக்குள்
இனப்பிரச்சனைக்கு தீர்வு
என்பதை வலியுறுத்துகின்றன.
தமிழர் விடுதலைக் கூட்டணியும்
அதே நிலைப்பாட்டையே
கொண்டிருக்கிறது.

சிங்கள மக்கள் மத்தியிலும்
மனப்போக்கில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.
இனவாத உணர்வுகள் தூண்டி
சொந்த நலன்காக்கும் சக்திகள் குறித்து
விழிப்பான பார்வைகள் ஏற்பட்டுள்ளன.

மீண்டும் இனவாதத்துக்கு
உயிரூட்டும் முயற்சிகள்
யாவரையும் சினமூட்டவே செய்யும்.

ஜனநாயக பாதைக்கு வந்துள்ள
தமிழ் அமைப்புக்களைக்கூட
தமது முடிவுகள் பற்றி
சந்தேகம் கொள்ள வைக்கக்கூடும்.

அரசும்-பாதுகாப்புப் படைத்தலைமையும்
இனவாதம் முறிப்பதில்
தமது ஆர்வங்களை வெளிக்காட்டியுள்ளன.
தகுந்த முயற்சிகளும் மேற்கொண்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா
மறைந்ததின் பின்னர்
கொழும்பில் உள்ள தமிழர்கள் மத்தியில்
முன்பிருந்த
பாதுகாப்பு உணர்வுகள்
சற்றுக் குறைந்துள்ளதைக் காணமுடிகிறது.

எனினும்- புதிய அரசுத் தலைமையும்
தெற்கே தமிழர்களது பாதுகாப்பில்
அக்கறை கொண்டுள்ளதை மறுக்கமுடியாது.
அதேசமயத்தில்-
பாதுகாப்புப் படையினருக்குள் கீழ்மட்டங்களில்
தமிழ் பேசுவோர் தொடர்பான
சந்தேகப் பார்வைகள் இன்னமும் உண்டு.

புலிகள் தவிர்ந்த
ஏனைய தமிழ் அமைப்புக்கள்
குறித்து
வேறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம்.
ஆயினும்
கொழும்பில் அவற்றின்
பிரசன்னம் இருப்பதும்
புலிகளுக்கெதிரான அவற்றின் செயற்பாடுகளும்
இனவாத உணர்வுகளும்
இனவாத சக்திகளும்-மீண்டும்
தலையெடுக்காமல் இருப்பதற்கு
ஒரு பிரதான காரணம் என்பதை
மறுத்துவிட இயலாது.

யார் குத்தியும் அரிசியாக வேண்டும்.
எப்படியோ
அப்பாவிகள் பாதிக்கப்படாமல்,
அங்கும் வாழ முடியாது
இங்கும் வாழ முடியாது
எங்கு போவது என்று
அம்மக்கள் பரிதவிக்காமல்
இருந்தால் அது போதும்.

அதற்கான முயற்சியில்
யார் ஈடுபட்டாலும்
அவர்களைப் பாராட்டலாம்.
முயற்சிகளை வரவேற்கலாம்.

அதே நேரத்தில்
அந்தத் தமிழ் அமைப்புக்கள்
அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தவும்
தமிழ் பேசும் மக்கள்
எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு
தமக்குள்ள வாய்ப்புக்கள் மூலம்
தீர்வுகாணவும்
போதுமான அக்கறை செலுத்த வேண்டும்.
வெறுமனே
புலிகளுக்கு எதிராக பேசுவதும்
புலிகளுக்கு எதிரான செயல்பாடுகளிலும்
மட்டுமே
அவை தம்மை மட்டுப்படுத்திக் கொண்டால்
அவை வரவேற்கத்தக்கதல்ல.

அன்புடன்
—ஆசிரியர்—

**தினமுரசு
போன்: 820265**

## கவிதைப் போட்டி இல-9

திரண்டு வந்த கவிதை மடல்களில்
தேர்ந்தெடுக்கப்பட்டவையும்-
பரிசுக்குத் தெரிவான கவிதை ஒன்றும்-

### பரிசுபெற்ற கவிதை

**விண்ணப்பங்கள்....!**

அகதிகளானோம்
அன்புத் தாயே!
வயிற்றுக்கு
உணவிடு-
நிர்க்கதியானோம்
பூமித்தாயே!
வாழ
இடம் கொடு.

செல்வி ஐ.பர்வீன்
வத்தேகம.

**சனத்தொகை**
பொங்கிவரும் சனத்தொகையும்
பொருளாதார நெருக்கடியும்
பற்றிக் கொண்ட வாழ்க்கையில்
தொற்றிக் கொண்டோம்-நாம்
நடராசா கலையரசி
கொழும்பு-2

**"உண்ணவிடுங்கள்"**
"குண்டு வெடிப்புகளில்
நாங்கள் குற்றுயிராய்
போகும் முன்
இந்த ஒரு கணமாவது
எங்களை ஒற்றுமையாய்
உண்ணவிடுங்கள்"
செல்வி ஜெயகௌரி சின்னையா.
கம்பளை.

**பசி**
நாங்கள்
இதுவரை
இழக்காத
ஒன்றே ஒன்று!
எஸ்.ரி.சதீஷ்
பெரியகல்லாறு-03

**விடை எது?**
மொட்டை மாடியா
போரில் அமர்ந்த வீடா
போகமான
நிலாச்சாப்பாடா
சோகமான அகதி
வாழ்வா
சொல்வதெவ்விதமோ?
றோஸ் பேர்னாட்
பண்டாரவளை.

**அமைதி போனபின்**
அமைதி சமாதியானதால்
அனாதரவானவர்கள்
அள்ளி உண்ண
முடியாவிட்டாலும்
கிள்ளி உண்கிறார்கள்- ஆம்
அகதிதான் இவர்களும்!
சாந்தினி
அல்வாய்.

**அகதியின் நிலை**
குண்டு வெடிக்கும் நாட்டிலோ
குஞ்சுகள் எப்படி இருப்பதோ
உயிரை காத்த அன்னையோ
தஞ்சம் இன்றி கிடக்குதோ
அள்ளி அணைத்த அன்னையோ
அன்புடன் ஊட்டுவது உணவையோ.
ஏ.எம்.கஸ்ஸாலி சர்மிளா
புத்தளம்.

**ஒன்று போதாதா?**
இன்னுமொரு
சோமாலியா
உருவாக
ஆயுதம்
அகதிகளை
உருவாக்கியதோ?
பி.ரமேஸ்
மட்டக்களப்பு.

**அகதிகள்**
ஸ்ரீமுக வருஷ
சிருஷ்டிப்புகள்;
உலகம்
உமிழும் சக்கைகள்;
எங்கிருந்தோ
துரத்தி விடப்பட்ட
இவ்வார அகதிகள்.
அக்குறணை
ஹரீரா அனஸ்.

**நிச்சயமற்ற வாழ்வு!**
இன்னுமின்னும்
தருகிறேன்
இயன்றவரை
உண்ணுங்கள்
இருப்பதை
முடிப்பதற்குள்
உயிரோடிருப்போமென்று
எப்படிச் சொல்வது?
ஏ.ஆர்.ஏ.வாஹிட்
கல்முனை.

## கவிதைப் போட்டி இல-12



உங்கள் உணர்வுக் குதிரைகளைத் தட்டிவிடுங்கள். வேகமாய் வந்து விழும் எண்ணங்களுக்கு கவி வடிவம் கொடுத்து- சுருக்கமாய் - சுவையாய் தபாலட்டையில் பதிவு செய்து அனுப்புங்கள். அனுப்பவேண்டிய கடைசித்திகதி: 21.08.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:12
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5



**விருந்தாளிகள்!**
இனவாதம்
முடமாக்கிய
மனிதக்
கிளிஞ்சல்கள்
இந்த
வெய்யிலின்
விருந்தாளிகள்!
ஏ.அமீர்
சம்மாந்துறை.

விஞ்ஞான யுகத்தின்
விந்தைகள்.....
உலகில்
விதைத்ததோ
எம் போன்ற
'அகதி'விதைகள்......
செ.அம்பலவாணர்
மறவன்புலோ.

விரைவாக
சாப்பிடுங்கள்
யுத்த விமானத்தின்
சத்தம் கேட்கிறது.
கே.ஜெதீஸ்கரன்
கொட்டகலை.

ஆ!
என் சோற்றில்
துப்பாக்கிரவை.
செ.செந்தமிழ்ச் செல்வன்
கொழும்பு-06

**இவர்கள்!**
இனவெறி
வேடர்களின்
ஈட்டியிலிருந்து
தப்பிய
இளமான்
கூட்டமொன்று.
எ.எச்.ஸல்மா
கம்பளை.

கூரையின்றிக்
குடும்பம் நடாத்தும்
ஜீவன்கள் யாரோ.....
மனித வேட்டையில்
தப்பி வந்த
மான்கூட்டம் தானோ.....
ஸியானா ரோஷன்
அனஸ் மொகமட்
வவுனியா.

## வாசக(ர்)சாலை

*அறிவு முரசு தினமுரசு*
*அறிவுத் தென்றலாய்*
*அவனிலே வலம் வந்து,*
*தித்திக்கும் தேன் தமிழில்*
*திகட்டாத சுவை தந்து,*
*தமிழ் மணம் பரப்பும்*
*அறிவு முரசு தினமுரசு.*
*இலைமறை காயாக இருந்திடும்*
*இளையதலைமுறைதனை*
*விருப்புடனே ஊக்குவிக்க,*
*வீறுநடை பயிலும்-உந்தன்*
*இலக்கிய சேவைதனை*
*இனிதே வாழ்த்துபவர்கள்*
**எஸ் சண்முகராஜன், எஸ்.சுபத்திரா
நாவலப்பிட்டி**

**போதாது பிரதிகள்**
*வாராவாரம் வெளியாகும் "தினமுரசு" வாசகர்கள் பெருகி வருவதால் பிரதிகளை சற்று அதிகமாக வெளியிடும் படி அன்பு கட்டளையிடுகிறோம். காரணம் கடந்தவார பத்திரிகை எமது பகுதியில் பெரும் தட்டுப்பாடாக இருந்தது.*
**எம்.அம்ஜத் யூசுப், எம்.பசால், சிராஸ்தீன்- தெகிவளை.**

*தினமுரசே! உன்னை சுவைக்க முடியாமல் நான் பட்ட பாடு அப்பப்பா. கடந்தவாரம் நீ என்னை தேடி எங்கள் பகுதிக்கு வந்த உன்னை கண்டதும் வாங்கி வாரி அணைத்துக் கொண்டு என் ஆனந்தக் கண்ணீரை உனக்கு சமர்ப்பணம் ஆக்கினேன். இனி என்றும் உன்னுடன் நான்.*
**கலையரும்பு -செல்வி சரவணேஸ் டெயிசி
கலவாணை.**

*குறுகிய காலத்திற்குள் பல்லாயிரம் இதயங்களை கொள்ளை கொண்ட தினமுரசே! உன்னில் இடம் பெறும் கவிதை, கட்டுரை, சினிமா என்பன பிரமாதம். ஆனால் சிறுகதைகளை நீ பிறநாட்டு எழுத்தாளரிடம் இருந்து எதிர்பார்ப்பதுதான் என் போன்ற வர்களுக்கு மன வேதனையை அளிக்கின்றது. ஏன் நீ நம் நாட்டு எழுத்தாளரின் சிறுகதைகளுக்கு முன்னுரிமை கொடுக்க மாட்டாயா?*
**முபீனா ஹமீட்-கல்முனை-06**

*அரசியல் என்ற ஐந்தெழுத்தில் நடக்கின்ற கோளாறுகளை வெளிச்சத்துக்கு வாரம் தோறும் வடிகட்டும் தினமுரசே நீ வாழ்க வளர்க!*
**சி.தமிழ்செல்வம்-பொகவந்தலாவ.**

*ஹா....ஹா....ஹா...."காதுல பூ" வை வாசித்த்வுடன் திறந்த வாயை இன்னும் மூடமுடியாதபடி நமக்குள் ஒரே சிரிப்பு. பல புதிய சுவையான அம்சங்களை "முரசுடன்" இணைத்திருப்பது வரவேற்கத் தக்கது. சிறுகதைகள் யாவும் இனிமை தருகின்றன. "கண்ணே மதுமிதா" சுவை தருகிறாள். "தேன் கிண்ணத்திற்கு" இடம் நிறைய கொடுங்கள் ஸார்.*
**ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி.**

*"தினமுரசு வாரமலர்*
*தித்திக்கும் தேன்முரசு*
*பல்சுவைகள் கொண்ட*
*நல்முரசு*
*அறிவுக்கு விருந்தாகும்*
*அன்பு முரசு"*
**துரை-மணி-புத்தளம்.**

**இத்தாலியில் இருந்து.....**
*எனதினிய முரசே எனது முதல் வணக்கம்;*
*மக்கள் வாரத்தில் ஒன்று காண்கிறார்கள். ஆனால் நானோ வாரங்களில் -நோ! இதிலும் இல்லை. எத்தனையோ மாதம் கழித்து எனது நண்பன் மூலம் திருமுகம் காட்டியது. இருப்பது ஒரு முரசு. தினத்தில் 1440 நிமிடம். நான் படிப்பது 2880 தடவை.*
**எஸ். தயா-இத்தாலி.**

*இன்ப முரசே,*
*இனித்திடும் இதழ்கள் இனிதாய் தந்திடுவாய்*
*இன்பத்தை யாவர்க்கும் பகிர்ந்தளிப்பாய்*
*இளையவர் முதியவர் சிறியர் என்றும் பாரா*
*இது வென்று வாய்ப்பளிப்பாய்*
*இன்று மட்டுமல்ல இறுதிவரை*
*உன் உதயம் காண இதயம் மலரும்*
**ஆ.ம. நவநீதன்- புஸல்லாவ.**

*சென்றவார தினமுரசில் என் இதயத்தை பறி கொடுத்துவிட்டேன். அனைத்து அம்சங்களும் தேன். எங்கள் ஊரில் எல்லோரும் தினமுரசைக் காத்துக் கிடக்கின்றனர். அக்கரபத்து எம்.ஏ.றியாஸின் கவிதை எனக்கும் நண்பிகளுக்கும் மிகவும் நன்றாய் பிடித்துவிட்டது.*
**சுயஸ் மேரி-ஹந்துக்கல.**

*திக்கெட்டும் நிலவும் செய்திகளைத் திரட்டி*
*தீந்தமிழ் சுவையமுதுடன் திகட்டாமல்*
*தீரத்துடன் வழங்குவதென்றால் அது தினமுரசே!*
**ஆர். சந்திரசேகர்- கொழும்பு-13.**

*தினமுரசின் முதலாவது இதழிலேயே சின்னவள் யான் முரசின் அபிமானி ஆகிவிட்டேன். அந்த வகையில் இதுவரை முரசுக்கு பல ஆக்கங்கள் அனுப்பி உள்ளேன். தொடர்ந்தும் அனுப்புவேன். என் ஆக்கங்கள் முரசில் இடம் பெற தாமதித்தாலும் நான் மனம் தளர்ந்து விடமாட்டேன்.*
*ஏன் தெரியுமா? காலதாமதமானாலும் வாசகர்களின் படைப்புக்களை நீங்கள் நிராகரிக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. பட் ஒரு டவுட்! இஸ்லாமிய சிறுகதைகளை எழுதி அனுப்பினால் சேர்த்துக் கொள்வீர்களா? முடிந்தால் "முரசம்" வாயிலாக பதில் தாருங்களேன் பிளீஸ்!*
**கவிப்பிரியா நிஷா-கொலன்னாவ.**

**இஸ்லாமிய சிறுகதைகளுக்கும் முரசில் இடமுண்டு. அனுப்பலாம். (ஆ-ர்)**

**டபிள்யூ.எம். ஜவாஹிர்-ஹொரவபொதானை, ஆர். ராஜ்மோகன்-குண்டசாலை, யாழூர் ரஹீம் ராஜி- தர்கா நகர், இரான்ஜீவன்- நுகேகொடை, றயீஸ்தீன்- சிலாவத்துறை, எஸ்.எம். மனாப்தீன்- வத்தளை, ஸ்ரீஹரி- இரத்தினபுரி.**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## மட்டுநகர் வைத்தியசாலையும் மக்கள் சொல்லும் குறைபாடுகளும்!

மட்டுநகர் வைத்தியசாலையில் நிர்வாகச் சீர்கேடுகள் நிரந்தரக் குறைபாடாக நீடித்துவருவதாக பரவலாகப் பேசப்படுகிறது.

அண்மையில் பிரசவத்திற்காக மட்டுநகர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணி ஒருவர் மரணமானார். அவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டதில் பிள்ளையை மட்டுமே காப்பாற்ற முடிந்தது.

நிர்வாகக் குறைபாடுகளால் கவலையடைந்துள்ள சிலர் குறிப்பிட்ட சத்திரசிகிச்சை பற்றியும் குறை சொல்லுகின்றனர். மரணமானவரின் தாயாரும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு வரும் மருந்துப் பொருட்கள் விடயத்திலும் மோசடிகள் நடைபெறுவதாகவும் பலர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இது பற்றிய உண்மை விபரங்களைக் கண்டறிந்து வைத்தியசாலையின் பெயரைக் காப்பாற்ற வேண்டியது சம்பந்தப் பட்டவர்களின் பொறுப்பாகும்.

## இலக்கிய செய்தி ஒன்று

(கண்டி நிருபர்)

மலையக கலை இலக்கியப் பேரவையின் 13ஆவது வருட நிறைவு இவ்வருட இறுதியில் நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டு பேரவை பல இலக்கிய நிகழ்வுகளை நடாத்த உள்ளது. நூல் வெளியீடு, கருத்தரங்கும் கவியரங்கும் மலையக எழுத்தாளர் ஒன்று கூடல் போன்ற பல நிகழ்வுகளை நடாத்தவும் உள்ளது. நாடு எங்கிலும் உள்ள மலையக எழுத்தாளர் இதன் பொருட்டுத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

அந்தனி ஜீவா
செயலாளர்
57, மகிந்த பிளேஸ்
கொழும்பு-06

## "ஆயுதக் கொள்வனவில் அரசு தீவிரம் ரஷ்யாவிடமிருந்து ஹெலிகள் வருகின்றன"

## புலிகள் அமைப்பு கூறுகிறது

(யாழ். நிருபர் வர்மா)

இலங்கை அரசு யுத்தத்தை நடத்துவதில் தீவிரமாக இருப்பதாகவும் ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டுள்ள தாகவும் புலிகள் அமைப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினர் விடுத்துள்ள செய்தி அறிக்கை ஒன்றில் இக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

விமானப்படையினருக்கு உதவியாக மேலும் மூன்று எம்.ஐ.8 ரக ஹெலிகொப்டர்களை ரஷ்யாவிடமிருந்து அரசு கொள்வனவு செய்யவுள்ள தாகவும், ஏற்கனவே மூன்று ஹெலி கொப்டர்கள் வாங்கப்பட்டு விட்டதாகவும் அந்த செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வுவனியாவில் இராணுவ நடவடிக்கைக்காக வர்த்தகர்களிட மிருந்து இராணுவத்தினர் லொறிகளை பெற்றுள்ளதாகவும், தாக்குதலுக்கான முன்னேற்பாடுகளை செய்து வருவதாகவும் புலிகள் அமைப்பினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

புலிகள் அமைப்பினர் திருமலை; வவுனியா மற்றும் அநுராதபுரம் பகுதிகளில் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரு தரப்பினருமே தாக்குதலுக்கு தயாராகி வருகின்றனர். 'அவர்கள் தயாராகிறார்கள் அதனால்தான் நாம் தயாராகிறோம்' என்று ஒவ்வொரு தரப்பும் கூறுவதைக் கேட்க முடிகிறது.

தாக்குதலுக்கான தயாரிப்புக்கள் பொதுமக்களிடையே அச்சவுணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

## "கைதிகளின் உயிருக்கு ஊறு நேர்ந்தால் நல்லெண்ண முயற்சி பற்றிய கூற்றுக்கள் அர்த்தமிழக்கும்"

யாழ் குடாநாட்டில் புலிகள் அமைப்பிடம் உள்ள பொலிஸ்-இராணுவ பணயக் கைதிகளின் உயிருக்கு ஏதாவது ஊறுநேர்ந்தால் அதன் விளைவுகளை புலிகள்இயக்கம் ஏற்க வேண்டிவரும்.

கைதிகளின் உயிருக்கு ஊறு நேரும் பட்சத்தில் பின்னர் நல்லெண்ண முயற்சிகள் பற்றிய பேச்சுக்களுக்கு அர்த்தமிருக்காது. இவ்வாறு கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகப் பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்டன் வணசிங்க தெரிவித்தார்.

உண்ணாவிரதமிருந்து மரணமான திலீபன், பூபதி போன்றோருக்காக அஞ்சலி விழாக்கள் நடத்திவருவோர் தம்மிடமுள்ள பணயக்கைதிகளின் உண்ணாவிரத விடயத்தில் அலட்சியமாக இருக்கின்றனர். அவர்களது உயிரோடு விளையாடு கின்றனர் என்று மற்றொரு பாதுகாப் புப்படை அதிகாரி தெரிவித்தார்.

## காலடியில் வெடியிருக்கும்! ஐ.சி.ஆர்.சி. எச்சரிக்கை!

யாழ்ப்பாணத்தில் சமீபகாலமாக வெடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

இராணுவத்தினரால் ஏவப்படும் ஷெல்களும், விமானத்தில் இருந்து போடப்பட்டு வெடிக்காதிருக்கும் குண்டுகளும்தான் வெடி விபத்துகளுக்கு காரணம் என்று புலிகள் அமைப்பினர் கூறி வருகின்றனர்.

புலிகள் அமைப்பினர் கவனக் குறைவாக போட்டுச் செல்லும் வெடி பொருட்களே வெடி விபத்துக்களை உருவாக்குவதாக பாதுகாப்புப் படை வட்டாரங்கள் கூறுகின்றன.

வீதிகளில் புதிதாகக் கிடக்கும் பொருட்களை ஆச்சரியத்தோடு எடுத்துப் பார்த்து பரிசீலிக்கும் சிறுவர்கள் அப்பொருட்கள் வெடித்து விடுவதால் பலியாகிய சம்பவங்கள் பல வட பகுதியில் பரவலாக இடம்பெற்றுள்ளன.

சமீபத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் வடபகுதியில் சுவ ரொட்டிகள் போடப்பட்டுள்ளன. வெடி பொருட்கள் குறித்து கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்று சுவரொட்டிகளில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## ஓட்டைக் கடலையாம், அதிலும் கல்லாம். சமைத்துண்ண முடியாமல் தவிக்கிறார்கள் அகதிகள்!

கொழும்பில் உள்ள தமிழ் அகதி முகாம்கள் மூடப்பட வேண்டும் என்று சமூக சேவைகள் திணைக்களம் வற்புறுத்திவருகிறது.

ஏற்கனவே கொழும்பு விவேகானந்தா அகதிகள் முகாம் மூடப்பட்டது. தற்போது பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் கோவிலில் இருந்த அகதிமுகாமும் மூடப்பட்டு விட்டது.

சொந்தப்பகுதிகளில் சென்று மீளக் குடியேறுங்கள், உதவி வழங்கப்படும் என்று சமூக சேவைகள் திணைக்களம் கூறிவருகிறது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு அனுப்பப்படுவோர் நாவலடி அகதிமுகாமில் தங்கவைக்கப்பட்டு பின்னர் தமது சொந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

நாவலடி முகாம் அடிப்படை வசதிகளே இல்லாத நிலையில் ஆரம்பிக்கப்பட்டு இப்போதுதான் ஓரளவு சீர் செய்யப்பட்டுள்ளது. கூரைக்குப் போடுவதற்காக கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட தார்போலின் இன்னமும் முகாமுக்கு கொடுக்கப் படவில்லை. இராணுவத்தினர் அதனை தமது உபயோகத்திற்கு கேட்பதாகவும் அதனால் தாமதம் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.

இது தவிர மட்டக்களப்பில் உள்ள ஏனைய மூன்று தமிழ் அகதிகள் முகாமிலும் அடிப்படைப் பிரச்சனைகள் பல தீர்க்கப்படாமல் உள்ளதாக அகதிகள் எமது நிருபரிடம் தெரிவித்தனர்.

மண்டூர் கந்தசாமி கோவில் அகதிமுகாமில் 1990 ஜூன் மாதம் தொடக்கம் அகதிகள் முகாம் ஒன்று இயங்கிவருகிறது.

இங்கு அம்பாறையைச் சேர்ந்த 59 குடும்பங்களும், மட்டக்களப்பைச் சேர்ந்த 103 குடும்பங்களும் இருக்கின்றன. அவர்களுக்காக ஆறு ஓலைக் குடில்கள் போடப்பட்டுள்ளன. ஆனால் கூரைகளில் ஓலைகள் இல்லை. மழைக்காலம் அவர்களுக்குச் சோக காலம்தான்.

மலசலகூட வசதியும் இல்லாத நிலையில் அவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இதே வேளையில் எரியும் வீட்டில் பிடுங்கிக் கொள்வது வரை லாபம் என்ற ரீதியிலும் சிலர் செயற்படுகிறார்கள். அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களின் நிறையில் அகதிகளின் பெரும்பாலானோர் அதிருப்தியும் சந்தேகமும் தெரிவிக்கின்றனர். அது மட்டுமன்றி வழங்கப்படும் கடலையில் கூட கல்லும் மண்ணும், ஓட்டைக் கடலையும் பாதிக்கு மேல் இருப்பதாக அகதிகள் குறை கூறுகின்றனர்.

மட்டக்களப்பு கல்லடியில் இருக்கிறது ஆட்லைன் அகதிமுகாம்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களை தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்பிச் செல்லுமாறு கூறப்பட்டுள்ளது. மறுப்புத் தெரிவிக்கும் குடும்பங்களுக்கு இம்மாதம் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படமாட்டாது என்று கூறப்பட்டது.

உலர் உணவை நிறுத்துவதே அகதிகளை வெளியேற்ற சாத்தியமான வழி என்று சமூக சேவைகள் திணைக்களம் கருதி வருகிறது.

அகதிகளைப் பார்வையிட மாதம் தோறும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு செல்கிறது. மாநாடுகளும் நடைபெறுகின்றன. மட்டக்களப்புக்கென்று தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றனர். ஆனாலும் அகதிமுகாம்களின் அடிப்படைப் பிரச்சனைகளைக் கூட இதுவரை தீர்க்க முடியவில்லை என்பதுதான் பெரிய உண்மை. ●

## கமம், கமுவ ஆனது எப்படி? ஆச்சரியத்தில் ஊர் மக்கள்!

(திருகோணமலை நிருபர்)

தம்பலகமம் என்ற பூர்வீகத் தமிழ்க் கிராமம் தம்பலகமுவ ஆனது எப்போது என்று மக்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

பரம்பரையாக தமிழ் மக்களே வாழ்ந்து வரும் இக்கிராமத்தின் பெயர் தமிழிலும் ஆங்கிலத்திலும் தம்பலகமம் என்றே அழைக்கப் பட்டு வருகிறது.

இவ்வாறிருக்க தம்பலகமம் பிரதேசச் செயலகத் திறப்பு விழாவுக்கு அடிக்கப்பட்ட அழைப்பிதழில் தமிழிலும் ஆங்கிலத்திலும் தம்பலகமுவ என்றே அச்சிடப்பட்டுள்ளது.

# வேட்டி அவிழ்ந்தது - புடவையும் போனது! கட்சிச் சண்டை கலைஞர் முன் நடந்தது!!

**தமிழகச் செய்தி - தருவது ஏழுமலை**

தமிழகத்தின் கட்டுக்கோப்பான கட்சியின் தலைவர் என்றும், கட்சி நிர்வாகத்தில் வல்லவர் என்றும் கலைஞர் கருணாநிதி பற்றி முன்னர் கூறப்படுவதுண்டு.

இப்போது அந்தக் கூற்றிலே பழுது ஏற்பட்டுவிட்டது.

கடந்த மாதக் கடைசியில் நெல்லை, மதுரை மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் போனார் கலைஞர் கருணாநிதி.

மதுரை மாவட்டத்தில் தி.மு.க.வில் இரு கோஷ்டிகள் நீயா, நானா போட்டியில் மல்லுக் கட்டிக்கொண்டு நிற்கின்றன.

ஒரு கோஷ்டிக்கு தலைமைத் தளபதியாக இருப்பவர் கலைஞர் கருணாநிதியின் மகன் மு.க. அழகிரி.

மற்றைய கோஷ்டிக்கு தளநாயகர் மதுரை மாவட்ட தி.மு.க.செயலர் பொன். முத்து ராமலிங்கம்.

பொன்.முத்துராமலிங்கம் வை.கோபால சாமியின் தூண்களில் ஒருவர். எனவே அந்தத் தூணை அசைத்து சரித்துவிட அழகிரி கோஷ்டி தீவிரமாக வேலை செய்கிறது.

மதுரை ரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்த மு. கருணாநிதியை அங்கிருந்து அவர் தங்கும் மதுரை பாண்டியன் ஹோட்டல் வரை அழைத்து வந்தது அழகிரி கோஷ்டி.

ஹோட்டல் வாசலில் வரவேற்புக் கொடுக்க காத்து நின்றது பொன். முத்துராமலிங்கம் கோஷ்டி.

அதே நேரத்தில் அழகிரி ஆதரவாளர்களும் அங்கு வந்து கூடினார்கள். பரஸ்பரம் முறைப்பான பார்வைகள், விறைப்பான பேச்சுக்கள்.

கலைஞர் கருணாநிதி வந்திறங்கியவுடன் இரு கோஷ்டிகளும் முண்டியடித்தபடி மாலை போடப் பாய்ந்தனர்.

அப்போது திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. செயலர் பெரியசாமியும் கலைஞருக்கு மாலை போட வேகமாய் முன்னேறினார்.

அவ்வளவுதான். பொன் முத்துராமலிங்கம் கோஷ்டிக்கு கோபம் வந்துவிட பெரியசாமியின் வேஷ்டியை பிடித்து உருவினார்கள்.

கலைஞர் முன்பாக வேஷ்டி உருவப்பட்ட பெரியசாமியின் ஆட்கள் தாங்களும் பதிலுக்கு பதிலாக முத்துராமலிங்கத்தின் வேஷ்டியை பிடித்து உருவ முற்பட்டனர். அதைப் பார்த்து கோபப்பட்ட மதுரை மாவட்ட மகளிர் அணி முன்னாள் தலைவி பாண்டியம்மாள் பொன் முத்துராமலிங்கத்திற்கு ஆதரவாக கோஷமிட்டார்.

ஆத்திரம் கொண்ட அழகிரி கோஷ்டியினர் பாண்டியம்மாளின் சேலையை பிடித்து இழுத்தனர். அதிர்ச்சியடைந்த பாண்டியம்மாள் கீழே விழுந்த சேலையை தூக்கியபடி ஓடினார்.

இச்சமயத்தில் மதுரை நகரச் செயலாளர் காவேரி மணியத்தின் சட்டையை கிழித்த சிலர் அவரது வேஷ்டியில் குறிவைக்கவே அவர் ஹோட்டலுக்குள் தலைதெறிக்க ஓடினார்.

அந்த சந்தடிக்கிடையிலும் பொன். முத்துராமலிங்கம் கலைஞருக்கு சால்வை அணிவித்துவிட்டார்.

தனக்கு முன் நடந்த கோஷ்டி மோதலை தடுக்க முடியாத நிலையில் கலைஞர் பாண்டியன் ஹோட்டலுக்குள் சென்றபோது அவர் பின்னால் ஓடினார் காவேரி மணியம்.

"அண்ணே அண்ணே பாருங்கண்ணே" என்று பனியனுடன் நின்ற தன் கோலத்தைக் காட்டினார். கலைஞர் திரும்பிப் பார்க்காமல் மாடியில் ஏறிச் சென்றார்.

கட்டுக்கோப்பான கட்சி என்ற கருத்தையும், கலைஞருக்கு கட்டுப்பட்ட தொண்டர்கள் என்ற கூற்றையும் பொய்யாக்கிவிட்டது மதுரையில் நடந்த கோஷ்டி மோதல்.

இதே வேளையில் வை. கோபாலசாமி தனது ஆதரவாளர்கள் ஓரம் கட்டப்பட்ட நிலையிலும் மௌனம் காத்துவருகிறார்.

மதுரைக் கூட்டமொன்றில் நாஞ்சில் மனோகரன் வெளியேற்றப்பட்டமை அவசர முடிவு என்று கூறியதைத் தவிர வேறெந்த முயற்சியிலும் அவர் ஈடுபடவில்லை.

தி.மு.க.வுக்குள் இருந்து வெளியேறவும் கூடாது. வெளியேற்றப்படவும் கூடாது. பொறுமையாக இருந்து கலைஞருக்குப் பிறகு கட்சியைக் கைப்பற்றுவதே அவரது நோக்கம் என்று தெரிகிறது.

அதனால்தான் மன்னிப்புக் கடிதம் கொடுத்தார். மனோகரனை கட்சியில் சேர்ப்பதாக கூறிவிட்டு கலைஞர் வாக்கு மாறியபோதும் கோபப்படாமல் இருக்கிறார்.

கலைஞர் உள்ளவரைதான் அவரது மகன் மு.க. ஸ்டாலினுக்கு மரியாதை, அதிகாரம் எல்லாம்.

கலைஞருக்குப் பின் கட்சிக்குள் உள்ள இளைஞர்கள் கூட ஸ்டாலினை ஆதரிக்கமாட்டார்கள் என்பது வை. கோவுக்கு தெரியும்.

கலைஞருக்கும் வை.கோவின் திட்டம் தெரியும்.

நெல்லை, மதுரை மாவட்டங்களில் வை. கோவுக்கு ஆதரவு இருப்பதால் சகித்துக் கொண்டு இருக்கிறார்.

மன்னிப்புக்கடிதம் வாங்கி அதைப் பகிரங்கப்படுத்தியதின் மூலம் வை. கோபால்சாமி தவறு செய்தவர்தான் என்ற கருத்தை கலைஞர் கட்சிக்குள் ஏற்படுத்தியுள்ளார்.

அண்மையில் நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற இசைமுரசு நாகூர் அனிபாவின் 70வது பிறந்ததின முத்துவிழாவில் கலைஞரும், வை.கோவும் கலந்து கொண்டனர். வை.கோவை 'தம்பி' என்று விழித்து கலைஞர் உரையாற்றினார்.

என்றாலும் உள்ளே நெருப்பு இருக்கிறது. சமயத்தை எதிர்பார்த்து போட்டியாளர்கள் காத்திருக்கிறர்கள்! ●



கோஷ்டிகள் மோதலின் நடுவே பாண்டியன் ஓடடல படியேறி மாடிக்கு போகிறார் கருணாநிதி. சட்டை கிழிக்கப்பட்டது பற்றி முறையிடுகிறார் காவேரி மணியம். பின்னால் வீராசாமி, முத்துராமலிங்கம்.

## தினமுரசு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறை அமைச்சர் அஸ்வர் உடனடி நடவடிக்கை!


(புத்தளம் நிருபர்)

"தினமுரசு" வெளியிட்ட செய்தியினால் உடனடி பலன் கிட்ட ஆரம்பித்துள்ளது. இதன் காரணமாக புத்தளம் மக்கள், குறிப்பாக ஏழைகள் "தினமுரசி"ற்கும் தேவையை பூர்த்தி செய்த உதவிய புத்தளம் தொகுதி நியமன எம்.பியும் முஸ்லிம் சமய, கலாசார இராஜாங்க அமைச்சருமான அல் ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வருக்கும் தமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

தற்போது நிலவும் கடும் கோடை காரணமாக புத்தளத்திலுள்ள பிரதான குளமான "நெடுங்குளம்" முற்றாக வற்றிவிடும் கட்டத்தை அடைந்திருப்பதாக "தினமுரசு" கடந்த 18.7.93 ஆம் திகதிய வாரமலரில் செய்தி வெளியிட்டிருந்தது.

மேலும் அச் செய்தியில், இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் நீராடுவதற்கு இக்குளத்தையே நம்பியிருப்பதாகவும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இக்குளத்தை ஆழமாக தோண்டினால் எதிர்வரும் காலங்களில் மக்களுக்கு பெரும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக்குளத்தை ஆழமாகத் தோண்ட வேண்டியதின் அவசியத்தையும் அவசரத்தையும் இப்பகுதி மக்கள் "தினமுரசு" மூலம் கோரிக்கையாக விடுத்திருந்தனர்.


கோடையால் வளையும் கேடு
(எமது புத்தளம் நிருபர்)
தற்போது நிலவும் கோடை காரணமாக புத்தளம் பகுதியிலுள்ள கிணறுகள், குளங்கள் என்பன வற்ற ஆரம்பித்துள்ளன.
புத்தளம் நகரிலுள்ள பிரதான குளங்களில் ஒன்றான நெடுங்குளம் முற்றாக வற்றிவிடும் கட்டத்தை அடைந்துள்ளது.
இப்பகுதியிலுள்ள ஏராளமான மக்கள் இக்குளத்திலேயே நீராடி ... வழக்கம்.
அல்லது ஐந்து மைல்களுக்கு அப்பாலுள்ள ஆற்றுக்கு செ... வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்...
இந்த சந்தர்ப்பத்தைப் பயன்... இக்குளத்தை ஆழமாக தோண்டி... எதிர்வரும் காலங்களில் ஏரா... நீர் சேகரிக்கப்பட்டு அதிக கால... பொதுமக்களுக்கு பயன்படும்.
எனவே அக்கறையுள்ள இ... கழகங்கள், முற்போக்கு சங்... அபிமானிகள் கூடிய... மேற்கொள்...

இந்தக் கோரிக்கைக்கு தற்போது பலன் கிட்ட ஆரம்பித்துள்ளது.

குளம் ஆழமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொண்ட புத்தளம் தொகுதி நியமன எம்.பியும் முஸ்லிம் சமய, கலாசார இராஜாங்க அமைச்சருமான அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வரும், வடமேல் மாகாண சபையின் புத்தளம் மாவட்ட உறுப்பினருமான அல்ஹாஜ் எம்.ஐ.பிஸ்ருல் ஹாபியும் உடனடி நடவடிக்கையில் இறங்கினார்கள்.

இவர்கள் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சி காரணமாக உடனடி பலன் கிட்டியது.

இவர்களது கோரிக்கைக்கு இணங்கிய பிரதேச செயலகங்களின் ஆணையாளர் (வடமேல் மாகாணம்) உடனடியாக ஐம்பதினாயிரம் ரூபாய் பணத்தை ஒதுக்கீடு செய்தார்.

புத்தளம் நகர சபையும் ஐம்பதினாயிரம் ரூபாய் பணத்தை உடனடியாக ஒதுக்கீடு செய்தது.

மேலும் இப்பகுதி மக்களின் பூரண ஒத்துழைப்பும் கிடைக்கவே குளத்தை ஆழமாக்க இராஜாங்க அமைச்சர் உடனடி நடவடிக்கையில் இறங்கினார்.

புல்டோசர் இயந்திரமும் உடனடியாக வரவழைக்கப்பட்டு குளத்தை ஆழமாக்கும் வேலையையும் அமைச்சர் அஸ்வர் ஆரம்பித்து வைத்தார்.

தற்போது குளத்தை ஆழமாக்கும் வேலை மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கோரிக்கை விடுத்த "தினமுரசி"ற்கும், அதனை செயற்படுத்திய அமைச்சர் அஸ்வருக்கும், வடமேல் மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ்.எம்.ஐ.பிஸ்ருல் ஹாபிக்கும் மக்கள் மீண்டும் தமது மனமார்ந்த நன்றிகளை "தினமுரசு" மூலம் தெரிவிப்பதாக இப்பகுதி மக்கள் எமது நிருபரிடம் தெரிவித்தனர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—11

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | 3 |
| | 4 | 5 | | ■ | 6 | |
| 7 | | | | | ■ | |
| ■ | | | | ■ | 8 | |
| 9 | ■ | | ■ | 10 | | ■ |
| | 11 | ■ | 12 | | | 13 |
| 14 | | | ■ | | ■ | |

### இடமிருந்து வலம்

1. பெண்ணின் நெற்றிக்கு இதுவும் ஒரு அழகு.
6. சில குதிரைகளின் உடலில் இது இருப்பதுண்டு.
7. இதனால் பெரிய பயன் ஒன்றுமில்லை.
8. இராமாயணத்தில் ஒரு பாத்திரம்.
10. திருடர்களுக்கு இதனால் தொல்லைதான்.
12. பிரச்சனைகள் ஏற்பட்டால் இப்படியும் சொல்வதுண்டு.
14. இல்லாளுக்கு இன்னொரு பெயர்.

### மேலிருந்து கீழ்

1. கூடையிலே இந்தப் பூவும் இருப்பதாக ஒரு பாடல் இருக்கிறது.
2. சாப்பிடுவதற்கு ஏற்ற நேரம்.
3. மூத்தோரிடம் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியது.
4. இதையும் சிலர், ஒரு தொழிலாகக் கொண்டுள்ளனர்.
5. தினமுரசுக் கதையொன்றில் இவர் பெயர் இருக்கிறது.
9. படையே நடுங்கும் பாம்பும் இதைக் கேட்டால் ஆடும். (தலைகீழாக உள்ளது)
10. வளைந்து கொடுக்கும் இயல்பு கொண்டது.
11. தானியங்களில் ஒன்று.
13. பதுங்கிக் கொள்ள வசதியானது.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டை ஒன்றில் வெட்டி ஒட்டி 21.8.93 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல.-11**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு -05.**

சரியான விடையை எழுதி அனுப்பும் பத்து அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-09க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | ச் | சா | 2 ணி | ■ | 3 கொ | ■ |
| ழ | 4 சா | 5 ப | ல் | ல | க் | 6 கு |
| ண் | த | ள் | அ | ■ | கு | டி |
| ம | னை | ளி | ■ | சி | ■ | கை |
| னை | ■ | 7 வா | லி | 8 ப | ம் | ■ |
| ■ | 9 மோ | ச | டி | ■ | ட | 10 பா |
| 11 வ | ய | ல் | ■ | 12 வி | 13 த | வை |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.09ல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. இ. இந்துஜன் புத்தளம்.
2. வி. ஜெயானி கொழும்பு-13.
3. எம்.டீ. சிபான் முகமட் படுகொட.
4. தங்கராஜா இராஜசேகர் திருகோணமலை.
5. எஸ். கந்தையா பதுளை.
6. எஸ். சந்திரமதி மட்டக்களப்பு.
7. வி.எல். ஹசன் கண்டி.
8. திருமதி. விமலா குணசேகரன் நீர்கொழும்பு.
9. எஸ்.என். அனீபா நுவரெலியா.
10. சி. கோணேஸ்வரன் புத்தளம்.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/- வழங்கப்படும்.

## வேண்டும் எமக்கு புதிய நூல்கள்!

பண்டாரவளை நகரில் தமிழ் மக்கள் ஏராளமானோர் வாழ்கின்றனர். இங்குள்ள பிரதான நகர வாசிகசாலையில் பல தசாப்தங்களாக பலராலும் வாசிக்கப்பட்ட பழைய நூல்களே பெரும்பாலும் கிடைக்கக்கூடியதாயிருக்கின்றன.

அதுவும் 40 வருடங்களுக்கு மேற்பட்ட பழமையானவையும் கைகளினால் எடுத்து வாசிக்க இயலாதளவு சிதைந்த எழுத்துக்கள் கொண்ட மங்கிப் போன பழைய நூல்களே இங்கு அதிகமாக இருக்கின்றன.

எனவே இது விடயத்தில் பாரபட்சமின்றி கவனம் எடுத்துக் கொண்டு வாசிகசாலையில் புதிய தரமான நூல்களை இடம் பெறச் செய்தால் தமிழ் பேசும் வாசகர்களின் மனக்குறை தீரும்.

எம்.எம்.பியாஸ்- பண்டாரவளை.

## கலைமகள் வித்தியாலயத்தில் தரைமீது மாணவர்கள்!

கல்முனை கல்வி மாவட்டத்தில் திருக்கோயில் கொத்தணிப் பிரிவில் அமைந்துள்ள கமு/தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயத்தில் நீண்ட நாட்களாக இருந்துவரும் தளபாட பற்றாக்குறையும் ஆசிரியர் பற்றாக் குறையும் இது வரை தீர்ந்ததாக இல்லை.

சுமார் 800 மாணவர்கள் வரை கல்வி கற்கும் இப்பாடசாலையில் மாணவர்கள் வெறும் தரையில் இருந்தே கல்வி கற்கும் நிலை நீண்ட நாட்களாக இருந்து வருகின்றது. இது ஒரு ஆரம்ப பாடசாலையாகும். அண்மைக்காலத்தில் நடந்த அனர்த்தங்களினால் மல்வத்தை, மல்லிகைத் தீவு போன்ற இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களின் பிள்ளைகள் சுமார் 200 பேர் வரை இப்பாடசாலையில் கல்வி கற்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இப்பாடசாலையில் ஆரம்ப விஞ்ஞானம், சிங்களம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக் குறையினால் தொண்டர் ஆசிரியர்களே 1990 ஆண்டு முதற் பகுதியிலிருந்து எதுவித கொடுப்பனவும் இன்றி கல்வி கற்பித்து வருகின்றார்கள். இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதோடு மேற்கூறிய இரு பிரச்சனைகளையும் தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இப்புகார் பெட்டி மூலம் கேட்டுக் கொள்கின்றேன்.

இ. திலகராஜ் - தம்பிலுவில்.

## புகார் பெட்டி

## தேவை தொலைபேசி வசதி!

மாத்தளை மாவட்டத்தில் அளுத்கமை எனும் கிராமத்தில் அமைந்துள்ள உப அஞ்சல் அலுவலகத்துக்கு இது வரை தொலைபேசி வசதி வழங்கப்படாததினால் இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இக்கிராமத்தின் அருகேயுள்ள சுமார் 3 மைல் தொலைவிலுள்ள அஞ்சல் அலுவலகத்துக்கு தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ள போதும், இக்கிராமத்துக்கு இது வரை தொலைபேசி வசதி வழங்கப்படாதுள்ளதால் இக்கிராம மக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். எனவே விரைவில் தொலைபேசி வசதி கிடைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

ஏ.எ.எம்.அமானுல்லாஹ் மாத்தளை.

## மட்டக்களப்பில் ஒரு அவதி!

மட்டக்களப்பு நகரில் இருந்து 18 மைல் தொலைவில் உள்ளது எமது கரடியனாறு கிராமம். விவசாயக் கிராமமான இங்குதான் பிரதேச விவசாயப் பண்ணை, விவசாய ஆராய்ச்சி நிலையம், விவசாயப் பாடசாலை போன்றன அமைந்திருக் கின்றன. தற்போது இவை தற்காலிகமாக மட்டக்களப்பில் இயங்குகின்றன.

மட்டக்களப்பிலிருந்து தினமும் (சிலவேளை இல்லாமல் போவதுண்டு.) காலை 6.15 மணிக்கு உறுகாமம் நோக்கி இ.போ.ச. பேருந்து நிலையத்திலிருந்து ஒரு பேருந்து சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. மாலை மட்டக்களப்புக்கே மீளவும் வந்து மறு நாட்காலை வழமைபோல் சேவை யாற்றுகிறது. இந்த பகல் நேர சேவையை இரவு வேளையாக மாற்றி இரவு வேளையில் கரடியனாறு அல்லது மரப்பாலம் கிராமத்தில் தங்கி காலை அங்கிருந்து 6 மணிக்கு மட்டக்களப்புக்கு புறப்பட்டு வந்தால், பாடசாலை மாணவர், நோயாளிகள் அலுவலக உத்தியோகத்தர், விவசாயிகள், வியாபாரிகள் உட்பட பலரும் நன்மை பெற வாய்ப்புண்டு. இரவு வேளையில் ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அவரை மட்/பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போக மறுநாட்காலை மக்கள் படும் கஷ்டம் என் போன்றோருக்கே தெரியும்.

எனவே இப்பேருந்து சேவையை குறிப்பிட்டபடி காலையில் இங்கிருந்து மட்டக்களப்புக்குப் போக உரிய அதிகாரிகள் ஆவன செய்வார்களென நம்புகிறேன். பாதுகாப்பு காரணங்களை அதிகாரிகள் சுட்டிக்காட்டினால்... வாகரை, மண்டூர் போன்ற இடங்களில் பஸ் இரவு தரித்து காலை மட்டக்களப்பு வருவது குறிப்பிடத்தக்கது.

க. தருமரத்தினம் - கரடியனாறு.

## வரவேண்டும் தண்ணீர்!

நுவரெலியா மாவட்டத்திலுள்ள கந்தப்பளை நகரில் அமைந்துள்ள காமினிபுர என்னும் கிராமத்தில் கடந்த ஏழு வருடமாக தண்ணீர் பஞ்சம் நிலைமை உள்ளது. இங்கு 17 வீடுகள் உள்ளன. சுமார் 100 பேர்கள் வசிக்கிறார்கள். தண்ணீர் எடுப்பதற்கு சுமார் 100யார் செல்ல வேண்டும். இங்கு உள்ளவர்கள் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள், கிராமோதய சபைத் தலைவர்கள் ஆகியோரிடம் புகார் செய்தும் பலன் இன்னும் கிடைக்க வில்லை. மாகாண சபை தலைவர், உறுப்பினர்கள் கந்தப்பளையை பிறப்பிடமாக கொண்டவர்கள். இவர்களும் கவனத்திற்கு எடுக்க வில்லை. இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு மக்களின் குறையை தீர்க்க வேண்டும்.

ஏ. குமார் கந்தப்பளை

## நுவரெலியா மாவட்டமும் கிராம சேவகர் நியமனமும்

இலங்கையின் சகல மாவட்டங்களிலும் 2ம் தர கிராம சேவகர்களை நியமிப்பதற்காக நடத்தப்பட்ட பரீட்சை 1992.6.13 திகதி நடந்த போதிலும் அப் போட்டி பரீட்சையில் சித்தி அடைந்தவர்களை தெரிவு செய்யு நேர்முக பரீட்சை 1993.01.25ம் திகதி நடைபெற்றது. அதன் பின் பொலிஸ் அறிவித்தல் 1993.03.10ம் திகதி நடத்தப்பட்டது.

நேர்முக பரீட்சை நடத்தி ஆறு மாதகாலம் ஆகியும் இன்னும் இந்த நியமனத்துக்கு எதுவித முடிவும் எமக்குத் தெரியவில்லை. மற்றும் சில மாவட்டங்களில் 2ம் தர கிராம உத்தியோகத்தர்களை நியமித்து, இருக்கின்ற போதிலும் இன்னும் ஏன் நுவரெலியா மாவட்டத்தில் நியமனம் வழங்க தாமதம்?

இதற்கு சம்பந்தப்பட்ட ஏனைய பரீட்சாத்திகள் வேறு எந்த வேலைகளுக்கும் ஈடுபடாது இந்த 2ம் தர கிராம சேவகர் நியமனத்தை எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறார்கள்.

இதற்கு ஏதேனும் ஒரு பதில் கூற கடமை பட்டவர்கள் தெரிவித்தால் என்னை போன்ற ஏனைய பரீட்சாத்திகளுக்கும் நன்மை பயக்கும் என்பதில் ஐயம் இல்லை.

ஆ. பாலகிருஸ்ணன். நுவரெலியா.

## வெளிச்சமில்லாத வீதி!

கிண்ணியா பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமமான பிள்ளை குழி மணல் பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் குன்றும் குழியுமாக சீர் கேடாயுள்ளது. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்களும் மக்களும் பெரும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். இரவு நேரங்களிலும் மின்சார தெரு விளக்கு இவ்வீதியில் இல்லாமையினாலும் சிறு விபத்துக்களும் ஏற்படுகிறது. ஆகவே தயவு செய்து இது சம்மந்தப்பட்ட அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

ஏ.ஜே. இக்பால் கிண்ணியா-03

## தமிழ் எங்கே? தமிழில் எங்கே?

தற்போதைய காலகட்டத்தில் தமிழ் மொழி அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும் நடைமுறை ரீதியில் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டதாக தெரியவில்லை. பத்திரிகை தலையங்கங்களில் மாத்திரம் தடித்த எழுத்தில் தமிழுக்கு சமவுரிமை என்கிறார்கள். ஏன் இந்த இரட்டைத் தன்மை?

இன்றைய நிலையில் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதற்கான வருணனையை வானொலி, தொலைக்காட்சி ஆகிய இரண்டு சாதனங்களும் நேரடியாக ஒலிபரப்பு செய்கின்றன. சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரமே வர்ணனை வழங்கப்படுகின்றது. தமிழில் பகல் போசன இடைவேளை, பான இடைவேளை, ஆட்டக்காரர் ஆட்டம் இழந்த நிலை என குறிப்பிட்ட சில நேரமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஏன், தமிழுக்கு மட்டும் இத்தகைய இழுபறி நிலையும், உதாசீனத்தனமும்? இதற்கு பின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

ஏ.எம். ஆரிப் அளுத்கம, மாத்தளை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

கொழும்பு கதிர்வேலாயுத சுவாமி கோவில் பகுதியில் குண்டு வெடித்தது.

கோஷ்டி மோதலே அதற்குக் காரணம் என்று பொலிசும், அரச தகவல் தொடர்பு சாதனங்களும் மிக்க உறுதியாக வலியுறுத்தின.

பத்திரிகைகள் சிலவும் அதனை வெளியிட்டன.

யாரோ இரு கோஷ்டிகள் தமக்கிடையே ஏற்பட்ட வியாபாரப் போட்டிக்கு சக்திமிக்க வெடிகுண்டைக் கொண்டுவந்து பயன்படுத்துவது சாத்தியமானதுதானா?

சில தனிப்பட்ட சண்டியர் கோஷ்டிகள் குண்டுகளைப் பயன்படுத்துவதுண்டுதான். சமயத்தில் துப்பாக்கிகளும் தலைகாட்டியதுண்டு.

பெற்றோல் குண்டு, அதையும் மிஞ்சிப் போனால் கைக்குண்டு (கிரனைட்) போன்றவற்றையே அவை பயன்படுத்தியிருக்கின்றன.

ஆனால் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் வெடித்தது சாதாரண வகைக் குண்டல்ல என்றே சொல்லப் படுகிறது.

மிகுந்த தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டு பல உயிர்களை காவு கொள்ளும் சக்திமிக்கதாக இருந்திருக்கிறது. அதனைத் தயாரிக்கவும் பெருந்தொகையான பணம் செலவழிக்கப்பட்டிருக்க வேண்டும். தனிப்பட்ட - அதுவும் சிறுவியாபாரத்தில் ஈடுபடும் கோஷ்டி ஒன்றால் அப்படியான வெடிகுண்டை தயாரித்திருக்க முடியுமா? என்றொரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

குண்டு வெடிப்பில் பலியானவர்களின் மரண விசாரணையிலும் வெடித்த குண்டு பொறி முறையில் வெடிக்கும் வகையில் செய்யப்பட்டதோ என்ற சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்புக்கு கோஷ்டி மோதலே காரணம் என்று உடனே பொலிஸ் தரப்பினர் அறிவித்தமையை குறை சொல்ல முடியாது.

சமயத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் இனவாத சக்திகள் ஊக்கம் பெறாமல் தடுக்கவும், தலைநகரில் தமிழ் மக்கள் மத்தியில் பீதியுணர்வுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும் அவ்வாறான அறிவித்தல் புத்திபூர்வமானதே என்று பாராட்டத்தான் வேண்டும்.

அதே சமயத்தில் உண்மைகள் கண்டறியப்படுவதும் அத்தியாவசியமானதாகும்.

தலைநகரில் நடைபெறும் சில சம்பவங்கள் இனவாத சக்திகள் மீண்டும் தலையெடுக்க முற்படுவதையே சுட்டிக்காட்டுகின்றன.

தீவிரவாதத்துக்கு பதில் தீவிரவாதம் என்று சாதாரண மக்களது உயிரோடு விளையாட நினைக்கும் விபரீத சக்திகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டியவையாகும்.

இனக்கலவரம் ஒன்று மீண்டும் தெற்கே ஏற்படுமானால் தமிழர்கள் தமது கடைசி நம்பிக்கைகளையும் இழந்துவிடும் நிலைக்கே செல்வர்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் ஏற்பட்ட நம்பிக்கைகளும், வடக்கு-கிழக்கில் தொடரும் யுத்தத்தில் படும் அவலங்களுமே தமிழர்களை தெற்கு நோக்கி இடம் பெயரச் செய்தன.

தற்போதைய அரசும் இனக்கலவரம் ஏற்பட இடமளிக்காது என்றே தமிழ் மக்கள் நம்பிக்கையோடு' இருக்கின்றனர். நம்பிக்கைகளை காப்பாற்ற வேண்டியது ஆட்சியாளரின் கடமையாகும்.

கதிரேசன் கோவிலில் இடம்பெற்ற குண்டு வெடிப்புப் போல பௌத்த ஆலயம் ஒன்றில் இடம்பெற்றிருந்தால் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும் என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

கோஷ்டி மோதலே குண்டு வெடிப்புக்கு காரணம் என்று ஒரு வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும் கூட கோவிலுக்குள் குண்டு கொண்டு வந்தவர்கள் பெரும்பான்மை இனத்தவர் என்பதையும் மறந்துவிட முடியாது.

வணக்கத்தலத்திற்குள், இந்துக்களின் மரியாதைக்குரிய இடத்திற்குள் குண்டுவைத்தமையானது கோஷ்டி மோதலின் விளைவே என்று சொல்லப்பட்டாலும் கூட அதிலும் இனக்குரோத உணர்வு கலந்திருப்பதை மறுத்தல் இயலாது.

ஜனகபுரத்தில் அப்பாவிச் சிங்கள மக்களை புலிகள் வேட்டையாடினார்கள். அதுவும் கண்டிக்கப்பட வேண்டிய காட்டுமிராண்டித்தனம் என்பதில் சந்தேகம் இல்லை.

ஜனகபுரம் படுகொலைகள் படங்களோடு சிங்களத் தினசரிகளில் வெளியாகியிருந்தன. படங்களோடு செய்திகளைப் போடுவதில் ஒரு தவறும் இல்லை.

அதே சமயத்தில் தமிழர்கள் கொல்லப்படும் போது அவற்றையும் படங்களோடு வெளியிட அப்பத்திரிகைகள் முன்வராமல் இருப்பதுதான் கவலைக்குரிய விசயம்.

கொக்கட்டிச் சோலைப் படுகொலைகள் முக்கியமான சிங்கள தினசரிகளில் படமாக வந்ததாக ஞாபகம் இல்லை.

சமீபத்தில் கிளாலிப் படுகொலைகள் கூட அந்த தினசரிகளில் முக்கியத்துவம் பெறவில்லை.

கதிரேசன் கோவில் குண்டு வெடிப்புக்கள் பற்றியும் அவை பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

கேட்டால் படம் எடுக்க முடியவில்லை. இருந்தால் கொடுங்கள் என்று எம்மிடம் கேட்கிறார்கள். கொடுத்தால் போடுவார்களா? சொக்கட்டிச் சோலை இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி. அங்கு போய் படமெடுக்க வேண்டாம் என்று இவர்களை யார் தடுத்தார்கள்?

பலியாவது யார்? சிங்களவனா? தமிழனா? முஸ்லிமா? என்று பேதம் பார்த்துத்தான் சிலருடைய மனிதாபிமானம் வாய்திறக்கிறது. பேனை திறக்கிறது.

கொன்றது யார்? புலிகளா? அரச படைகளா? என்று அறிந்து கொண்டுதான் சிலரது நடுநிலைமை வெடித்துக் கிளம்புகிறது. இதுதான் இந்த நாட்டின் துரதிஷ்டம்.

இந்த நாடு ஐக்கியப்பட்டிருக்க வேண்டுமானால் இனவாதக் கரங்கள் எந்த முனையில் இருந்து நீண்டாலும் சட்டம் அதன் கரங்களை அறுத்துப் போட வேண்டும்.

மனிதாபிமானம் பேசுகின்றவர்களும், மனித உரிமையில் நாட்டம் உள்ளோரும் பேதம் காட்டாமல் தார்மீக கோபத்தை வெளிப்படுத்த வேண்டும். ■

# உடைந்துவரும் உளுத்துப்போன அடித்தளங்களும் ஆயுதப்பெண்களை அங்கீகரிக்கும் சமூகமும்!



## எக்ஸ்ரே ரிப்போர்ட்

-நாரதர்-

புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம். அவரது பாரியார் திருமதி அடெல்ஆன் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர். இப்போது யாழ்ப்பாணத்தில் தன் கணவரோடு தங்கியிருந்து இயக்கப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

அவுஸ்திரேலியாவில் பிறந்த அப்பெண்மணி இப்போது புலிகள் அமைப்பின் பெண்கள் படைப்பிரிவில் முக்கியமான போராளியாக இருக்கிறார்.

1984ம் ஆண்டு 'பெண்களும் புரட்சியும்' என்ற நூல் ஒன்றை திருமதி பாலசிங்கம் எழுதியிருந்தார். ஆங்கிலத்திலும்- தமிழிலும் அது வெளிவந்திருந்தது.

இப்போது 'புலிகள் இயக்கத்தின் பெண் போராளிகள்' என்ற நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார். ஆங்கிலத்தில் மட்டுமே வெளிவந்திருக்கிறது.

வெளிநாடுகளில் இயக்கப் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தும் நோக்கில் நூல் ஆக்கப்பட்டுள்ளது. பெண் புலிகளின் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் 28 நிழற்படங்களும் நூலில் தரப்பட்டுள்ளன.

இவ்வாறு உடையணிந்து, ஆயுதம் தோளில் தாங்கி பெண்கள் நடமாடுவது யாழ்ப்பாண மக்களுக்கு இப்போது பழக்கமாகிவிட்ட காட்சி.

ஒரு காலத்தில் சைக்கிள் ஓடும் பெண்களைப் பார்த்தே முகம் சுளித்தவர்களையும் குத்தல் பேசியவர்களையும் தன்னகத்தே கொண்டிருந்த சமூகம் இப்போது மாற்றங்களை ஜீரணித்துக் கொள்ளப் பழகிவிட்டது. மாற்றம் சந்தோசமாகவும் இருக்கிறது.

யுத்தம் பொதுவாகவே அழிவுகளை உருவாக்கும் போதும் சில உளுத்துப் போன அடித்தளங்களையும் உடைத்துப் போட்டுவிடுகிறது.

பெண் படுக்கையறையில் மட்டுமே சுதந்திரமாக இயங்கக்கூடியவள் என்ற ஆணாதிக்க மனப்போக்கு மீது பலத்த அடி விழுந்திருக்கிறது.

பெண் விடுதலைக்கான ஆயிரம் கோசங்களை விடவும் அந்த திசை நோக்கிய செயற்பாடு ஆயிரம் மடங்கு பயனுடையது.

பெண்கள் ஆயுதம் ஏந்துவதால் மாத்திரமே சமூகத்தில் இருக்கக்கூடிய ஆண் பெண் ஏற்றத்தாழ்வுகள் உடனே இல்லாமல் போய்விடாது.

எனினும் பெண் தன் ஆளுமையை வெளிக்காட்ட கிடைத்துள்ள ஒரு சந்தர்ப்பம் என்று அதனைக் கருதலாம்.

1986ம் ஆண்டு மன்னார் அடம்பன் பகுதியில் பங்கெடுத்துக் கொண்ட தாக்குதல் நடவடிக்கை மூலம் பெண் புலிகளின் ஆயுதமேந்திய செயற்பாடுகள் ஆரம்பமாயின.

இப்போது புலிகளின் பெண்கள் படைப்பிரிவு பல கிளைகளாக விரிவடைந்துள்ளது. கடற்புலிகள் அமைப்பிலும் கூட பெண்கள் இணைக்கப் பட்டுள்ளார்கள்.

காடுகளுக்குள் கெரில்லா யுத்த முறையிலும் பெண் உறுப்பினர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது.

போரில் அவயவங்களை இழந்த பெண் உறுப்பினர்களின் தொகையும் ஆண் உறுப்பினர்களுக்கு சமமாக உயர்ந்து வருகிறது.

தமது முகாம்களுக்கு வேண்டிய தேவைகளை பூர்த்தி செய்ய ஆண் உறுப்பினர்கள் லொறி கொண்டு வரும்வரை பெண் புலிகள் காத்திருப்பதில்லை.

தாமே லொறிகளை இயக்கிச் செல்கிறார்கள். கனரக வாகனங்களை இலாவகமாக இயக்கிச் செல்லப் பழகி விட்டார்கள்.

எனினும்- புலிகள் அமைப்பின் தலைமை பெண்களை எந்த வரையறை வரை சுதந்திரமாக முடிவெடுக்க அனுமதிக்கிறது என்பது கேள்விக்குரிய ஒரு விசயம்தான்.

இயக்கத்தின் ஆட் பற்றாக்குறைகளைத் தீர்ப்பதற்கே பெண்களை முக்கியத்துவப் படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்களும் இல்லாமல் இல்லை.

இதே சமயம் இயக்கத்தில் உள்ள பெண்கள் குறித்து சமூகம் கவலை கொள்ள பல விசயங்கள் இருக்கின்றன.

அவயவங்களை இழந்துவிட்ட பெண்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது?

தற்போதைய யுத்தம் அர்த்தமற்றது என்று கருத்து வளர்ந்து வருகிறது. அதனால் பெண்கள் இந்த யுத்தத்தில் பலியாவதும், பாதிக்கப்படுவதும் பயனற்ற நிகழ்வுகளாகவே மாறிவிடுமா என்ற கேள்விகளும் எழாமல் இல்லை.

மறுபுறத்தில் இயக்கத்தில் உள்ள பெண்கள் விலகிச் செல்ல விரும்பும் போது தலைமை கடும் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்கிறது.

அவ்வாறு விருப்பம் தெரிவித்தவர்கள் தண்டனைக் காலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கவர்ச்சிகரமான ஆயுதப்போராட்ட நிகழ்வுகளின் பின்னே பெண்கள் பலிக்கடாய்கள் என்ற நிலையே இருப்பதாக பெண் நிலைவாதிகள் சிலர் குறை சொல்லுகிறார்கள்.

பேராசிரியை ரஜனி திரணகம போன்ற உணர்வுபூர்வமான பெண் விடுதலை மற்றும் சமூக, அரசியல் விடுதலையில் ஆர்வம் கொண்ட பெண்களை ஆயுதம் மூலமாக அப்புறப்படுத்திய புலிகள் அமைப்பினர் பெண்கள் குறித்து கொண்டுள்ள கருத்துக்கள் கேள்விக்குள்ளாவது இயல்பானதுதான்.

தற்போது கூட பல்கலைக்கழக மாணவியான செல்வநிதி என்ற செல்வி புலிகளால் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்.



திருமதி அடேல் பாலசிங்கம்

பெண்களின் பங்குபற்றல்கள் குறித்து ஒரு புறம் பேசப்படும் போது சமூக, அரசியல் தளங்களில் சுதந்திரமாகச் சிந்தித்த பெண்களுக்கு முன் இரும்புக்கரமே நீட்டப்பட்டது என்பதும் மறுக்க முடியாதது.

சமூகத்தின் புரட்சிகரமான கோசங்கள், கோரிக்கைகள் என்பனவற்றை தமது தேவைகளுக்கு சாதகமாகப் பாவிப்பது என்ற நிகழ்ச்சிப்போக்கு புலிகளிடம் மாத்திரமல்ல பொதுவாகவே சகல தமிழ் இயக்கங்களிடமும் காணப்பட்ட குறைபாடாகும்.

எனவே - புலிகள் அமைப்பில் பெண்கள் ஆயுதமேந்துவது மட்டுமே 'பெண்விடுதலை மலர்ந்தது, பாரதி கண்ட கனவுகள் கைகூடின' என்று களிப்படையப் போதுமானதல்ல. ■

## அதிரடி அய்யாத்துரை



இரண்டு கோஷ்டி அடிபட்டுதாம். குண்டு வெடிச்சுதாம். இப்ப குண்டுக் கலாசாரம் பரவியிருக்கிறது. மனித கலாசாரம் மெலிஞ்சு போச்சு. அதாலபாருங்கோ கோஷ்டிச் சண்டையிலதான் குண்டு வெடிச்சதெண்ட கதையைச் சிலர் நம்பிப் போட்டினம்.

ஆடிவேல் தேர் அசைந்து வர எங்கட ஆக்களும் தலை நிமிர்ந்து போக பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிலர் 'கொட்டியா அங்க அடிக்கிறான் இவங்கள் இங்க விழா நடத்துறாங்கள்' எண்டு பேசினதும் காதில் விழாமல் இல்லை. அம்மா வேறை அந்த நேரம்பார்த்து களியாட்டம் வேண்டாம் எண்டு அறிக்கை விட்டது காக்காய் இருக்கப் பனம்பழம் விழுந்த கதைதான்.

கிரிக்கெட் ல இந்தியா விளாசின நேரத்தில காதில் விழுந்த ஒரு கொமண்ட் "அங்கு கொட்டியா அடிக்கிறான். இங்கு இந்தியா அடிக்கிறான்." எல்லாவற்றையும் கூட்டிக் கழிச்சு மொத்தமாப் பார்த்தா சின்ன சின்ன சலசலப்புக்கள் இல்லாமல் இல்லை.

இரண்டெழுத்துக்காரர் தங்கட உளவுப் பிரிவுத் தலைவரை வெளியே பகிரங்கப்படுத்தியது ஏன் என்று சிலர் தலைமுடியைப் போட்டுப் பிய்க்கினமாம். காந்தி தேசத்தில வழக்கு நடக்கும் போது வெளிக்கு வந்தது யோசிக்க வேண்டிய விசயம்தானே.

போனமுறை அய்யாத்துரையாகிய நான் விட்ட பிழை ஒண்டு. கிரிக்கெட் வீரர் பிரட்மன் அவுஸ்திரேலியா ஆள் பாருங்கோ. ஏதோ நினைவில இங்கிலாந்து எண்டு எழுதிப் போட்டன். வெரி சொறி.


காய்க்கிற மரத்துக்குத்தானே கல்லெறி. தினமுரசில சிலருக்கு கெட்ட கொதி. கொதிச்சு என்ன செய்யிறது. அது கிடக்கட்டும். மவுசைப் பார்த்துப் போட்டு விலையைக் கூட்டி விற்பனை செய்த முகவர் ஒருவர் இது இந்தியாவில் இருந்து வருகிறது என்று சொல்லி ஜமாய்த்தாராம். ஆளும் மாட்டினார். அவர் போன்றோருக்கு இனி முரசு விற்கத்தடையாம்.

கொழும்பில் ஆடிவேல் விழாவுக்காக வலையப்பட்டி சுப்பிரமணியத்தின் தவில் கச்சேரி. வித்தை தெரிந்த மனுசன். வெளுத்துவாங்கிப்போட்டுது. இடையில் தொம் என்று ஒரு சத்தம். கூட்டத்தில் சலசலப்பு. குண்டுப் பயம்தான். மேளத்தில் ஏதோ சிறு கோளாறு என்று அறிந்துதான் சனத்துக்கு நிம்மதி. உண்மையாகவே மறுநாள் குண்டு வெடித்துவிட்டது. வலையப்பட்டி ஒரு தீர்க்கதரிசி. மேளத்தின் மூலமே முன்கூட்டியே சமிக்கை காட்டிப் போட்டுது மனுசன். இது வலையப்பட்டி ரசிகர் ஒருவரின் கொமண்ட். ●

நகர் ரவுண்டப்

# புதர்கள் சொன்ன கதை

-ஒற்றன்-





நமது தகவல் வங்கியாளருக்கு எப்போதும் ஒரு பழக்கம். பத்திரிகைத் துறையைப் பொறுத்த வரை நல்ல பழக்கம். எங்கு போனாலும் கையோடு தனது கமெராவையும் எடுத்துக் கொண்டு தான் போவார்.

அந்தக் கமெராவால் அவர் பட்ட சிரமங்களை சொல்லத் தொடங்கினால் தொடர்கதை யாகவே போடலாம்.

அது கமெராவேதான் என்று செக்கிங் பொயிண்டுகளை நிரூபிக் கவே பெரிய திறமை வேண்டும்.

நம்மைப் பார்த்து அவர் வீசிய சிரிப்பின் ரகத்தில் இருந்தே உள்ளே நிறைய விசயங்களை சேமித்து வைத்திருக்கிறார் என்று அறிந்துகொண்டோம்.

"தலைவா சங்கதிகள் எப்படி?" என்று கேட்டுவிட்டு மறக்காமல் புன்னகையை மீண்டும் உதட்டில் வைத்துக் கொண்டார்.

"உம்மைக் கண்டதும்தான் சந்தோசம். வங்கியைத் திறவும். எண்ணி எண்ணி எடுத்து விடும் ஐயா" என்றோம்.

"ஒரு சிகரெட் இருந்தால் குடும்" என்றார். தீப்பெட்டி எப்போதும் தயாராக இருக்கும். சிகரெட் மட்டும் இருக்காது. வாழ்க்கையில் ஒரு சிகரெட் என்றாலும் சொந்த மாக வாங்கிய துண்டா என்று விசாரித்துப் பார்க்க வேண்டும். ஓசியில் தம் அடிப்பதும் ஒரு சுகம் என்ற கொள்கை உறுதியோ தெரியவில்லை.

பொக்கற்றுக்குள் இருந்தது இரண்டு. இரண்டு சிகரெட் வாங்கும் போதும் பெட்டிக்குள் போட்டுத் தரச்சொல்லி கேட்பது எமது வழக்கம். ஒரு மாதிரி முகத்தைச் சுளித்துக் கொண்டு முகத்தில் எறியாத குறையாக கடைக்காரர் சிலர் தருவது அல்லது தூக்கிப்போடுவது உண்டு. கவனிக்காதது போல் வந்துவிட வேண்டும்.

பெட்டியோடு பந்தாவாக நீட்ட பறிக்காத குறையாக வாங்கியவர் உள்ளே இரண்டு மட்டுமே இருக்க-

"இதுக்கொரு பெட்டி" என்று அதிருப்தி தெரிவித்தபடி ஒன்றை தூக்கி உதட்டில் செருகிக்கொண்டு, மீதி ஒன்றோடு பெட்டியை தனது பொக்கற்றுக்குள் அனுப்பி பத்திரப் படுத்திக் கொண்டார். பிழைக்கத் தெரிந்த மனுசன்.

"இந்த லட்சணத்தில உமக் கொரு விமர்சனம் வேறு" என்று சொல்ல நினைத்தோம். சொன் னால் தகவல் காலி. அதனால் மௌனவிரதம் பூண்டோம்.

"விடுதிக்கு போனால் செலவு. பொலிஸ் தொல்லை. காற்றோட்ட மான இடத்தில் செலவும் இல்லா மல் எல்லாம் நடக்குதய்யா"

என்று சொல்லிவிட்டு ஓசித்தம் ஒன்றை உள்ளே இழுத்து உலக சுகம் போல அனுபவித்தார்.

"அறைகளான புகர்கள். கட்டி லான தரைகள் என்று தலைப்புப் போடும். அட்டகாசமாக இருக்கும்" என்று அதிகப் பிரசங்கித்தனமாக ஐடியா சொன்னார்.

பிஃப்டி-பிஃப்டி. என்ற கொள்கை காத்து பாதி சிகரெட்டை தந்த போதும் நமக்கு கிடைத்ததோ முப்பத்தைந்து வீதம்தான். சரி இதுக்கெல்லாம் என்ன போராட் டமா நடத்த முடியும்? கிடைத்த வரை லாபம்.

"சரி வாரும். என்ன நடந்தாலும் எதைப் பார்த்தாலும் உணர்ச்சி வசப்படக்கூடாது"

என்று நிபந்தனை போட்டபடி முன்னாலே நடந்தார்.

இருட்டில் ஏதோ, அநேகமாக கல்லாக இருக்க வேண்டும். தடுக்கிவிட தடுமாறி அவர் பின்னால் நடந்தோம்.

நின்றார். நின்றோம்.

"அங்கே பாரும்" என்றார். மங்கலான இருட்டில் கண்ணை இடுக்கிக் கொண்டு பார்த்ததில் புதருக்குள் ஒரு அசைவு தெரிந்தது. மெல்ல நடந்து அருகில்சென்றோம்.

அங்கே கண்ட காட்சி. அதை எப்படிச் சொல்வது. வயது வந்தவர்கள்கூட பார்க்கக்கூடாது என்று தணிக்கை செய்ய வேண்டிய விசயம். மேலே இருந்த உருவம் இயங்கிக் கொண்டிருக்க முனகல் சத்தம் ஒன்று மெல்லியதாய் காதில் வந்து உரசியது.

விசயம் புரிந்தபின் அங்கிருந் தென்ன லாபம். வந்த வழியே திரும்பினோம்.

"என்ன தலைவா அதிர்ச்சியாக இருக்கிறதோ? நீர் பார்த்தது இங்கே சர்வசாதாரணம். யாரும் பார்த்தால் கூட அவர்கள் கவலைப் படுவது கிடையாது தெரியுமோ?"

என்றார் நண்பர்.

விபச்சாரம் தனியே ஒரு புறத்தில் நடக்கிறது. இப்போது கண்டது காதல் என்ற போர்வைக் குள் புதர் தேடி வந்து காமம் தீர்க்கும் ஜோடிகளின் அத்து மீறல்கள்.

நகர்ப்புறத்தில் உடல் தேவை களைத் தீர்ப்பது ஒரு சர்வ சாதாரண விசயமாக மாறி வருகிறது.

"நெருக்கடியான வாழ்க்கை. குலைந்துவரும் உறவுகள். மேலைய நாகரீகத்தின் கவர்ச்சி யூட்டும் வருகை எல்லாம் சேர்ந்து நமது இளைய தலைமுறையிடம் இணைதேடும் வேட்கையை அதிக மாக்கியிருக்கின்றன" என்றார் நண்பர். அவர் சொன்னதிலும் உண்மை இல்லாமல் இல்லை.

இந்த வேகம் எங்கு கொண்டு போய் நிறுத்தப் போகிறதோ என்று நினைத்தபடி நடந்து கொண்டி ருக்க, திடீரென்று ஒரு உருவம் வந்து நம்மில் மோதியது. சுதாகரித்து பார்த்த போது அந்த உருவம் ஒரு புதர் நோக்கி ஓடியது.

திரும்பிக் கூர்ந்து பார்த்தோம். புதர் அருகே குப்புறப்படுத்து- புதருக்குள் தலையை நுழைத்து உள்ளே இலவச நீலச் சினிமா பார்க்கும் சுவாரசியத்தில் ஈடுபட்டது. நம்மை மோதியதைக் கூட உணராத வேகத்தில் சென்றதன் காரணம் விளங்கியது.

நண்பர் கமெராவை எடுத்தார். கிளிக். கிளிக். உள்வாங்கிக் கொண்டார்.

அப்படியே கடற்கரை ஓரமாய் நடந்து கொண்டிருந்தோம்.

பாறைகளின் மீது அமர்ந் திருந்தன பல ஜோடிகள். இடப் பற்றாக்குறை என்பதால் சிறு இடைவெளி மட்டுமே ஒவ்வொரு ஜோடிக்கும் இடையே. என்றாலும் அருகே இருக்கும் ஜோடி பற்றிய கவலையே இல்லாமல் ஒவ்வொரு ஜோடியும் தம்மை மறந்திருந்தது.

நாம் அவர்கள் அருகே நடந்த போதுகூட மார்பில் வைத்திருந்த கையை எடுக்காமல்..... நாம்தான் முகத்தைத் திருப்பிக் கொண்டோம். ஒரு நீலப் படத்திற்கு தேவையான சகல காட்சிகளும் பாறைமீது பகிரங்கமாய் அரங்கேறிக் கொண்டிருந்தன. நண்பர் ஒரு நிகழ்ச்சியை நமது காதில் போட்டார்.

புதர் ஒன்றுக்குள் இருந்த ஜோடி ஒன்றை பொலிசார் மடக்கி விசாரித்திருக்கின்றனர். தமிழ் ஜோடி. சிறிது சந்தேகம் வரவே பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரிக்க நினைத்தனர். அந்தப் பெண் அழத் தொடங்கிவிட்டாள். காலைப் பிடித்துக் கெஞ்சாத குறையாக அழுவதைப் பார்த்து போய் தொலையட்டும் என்று விட்டார் களாம்.

கேட்ட போது வருத்தமாகத் தான் இருந்தது. காதல் தவறல்ல. நாகரிகம் கூட மாறத்தான் செய்யும். அதற்காக நாகரிகம் என்ற போர்வையில் நச்சுச் சுழலில் மாட்டி தம்மையே அழித்துக் கொள்வது சரிதானா? புதர்கள் புத்தி சொல்லாது. சம்பந்தப்பட்ட வர்கள்தான் புத்தியோடு நடக்க வேண்டும்.

# தளபதியாய் விளைந்த மாற்றம்!

## தேர்தல் களத்தில் மோதும் தலைகள்



பாகிஸ்தானில் தொடர்ந்த இழுபறி ஓரளவு நின்று விட்டது. ஜனாதிபதியும் பிரதமரும் நீயா நானா என்று அதிகாரப் போரில் சிண்டு பிடித்து நடத்திய போராட்டங்கள் தணிந்தன. இருவரும் பதவி விலகினர். இப்பொழுது பொதுத் தேர்தலுக்கான நாளும் குறிக்கப்பட்டாயிற்று.

அக்டோபர் 6ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. 1947ல் பாரதத்திலிருந்து தனிநாடாகப் பிரிந்த பாகிஸ்தான் ஜனநாயக வாதிகளால் ஆளப்பட்டதை விட இராணுவ ரீதியில் ஆளப்பட்டதே அதிகம் எனலாம். 46 ஆண்டுகளில் மூன்று தடவைகள் இராணுவ ஆட்சி ஏற்பட்டு நீண்ட நெடுங்காலம் தொடர்ந்து ஆட்சி புரிந்து வந்துள்ளன. ஜனாதிபதி குலாம் இஷாக்கானுக்கும் பிரதமர் நவாஸ் ஷெரீபுக்குமிடையில் கடந்த பல மாதங்களாக நடைபெற்று வந்த பனிப்போரின் பயனாக மற்றுமொரு இராணுவப் புரட்சி ஏற்படவும் மார்ஷல்லோ பிரகடனமும் ஏற்படக் கூடுமோ என்ற சூழ்நிலை இருந்தது. ஆனால் இராணுவத் தலைமையே நடுநிலை ஏற்று அமைதி ஏற்படவும் மீண்டும் ஜனநாயக ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கான பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தவும் வழி வகுத்தமை வரவேற்கக் கூடியதொன்றே.

நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்கு வீழ்ச்சியடைந்து விட்டது. அரசியலில் நீ பெரிதா நான் பெரிதா என்ற இழுபறி தொடருமானால் நிச்சயமாக பாகிஸ்தானை எவரும் காப்பாற்ற முடியாமற் போய்விடும். இராணுவ ஆட்சிதான் ஏற்படப் போகிறது என்று பலரும் எதிர்பார்த்த வேளையில் புதிய இராணுவ தளபதி ஜெனரல் அப்துல் வஹீட் காதர் தனது சாதுரியத்தினால், முட்டி மோதிக் கொண்டிருந்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவரையும் கண்டு பேசி அமைதியான முறையில் வெற்றி கண்டார். முதலில் ஜனாதிபதியும் பின்னர் பிரதமரும் பதவியிலிருந்து விலகிக் கொண்டனர். இதனை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல பிரமுகர்கள் பாராட்டியுள்ளனர்.

பொதுத் தேர்தலுக்கான நாள் குறிப்பிடப்பட்டு விட்டது. முக்கியமான இரு தலைவர்கள் போர்க்கோலம் பூண்டுவிட்டனர். இருவருமே மக்கள் வாக்கு பலத்தால் ஏற்கனவே ஆட்சி பீடம் ஏறியவர்கள். ஊழல் மற்றும் சீரற்ற ஆட்சி முறை என்ற குற்றங்களைச் சுமத்தி 1990ல் இஷாகான் பெனாசிர் பூட்டோவை பதவியிறக்கினார். அடுத்து பிரதமரான நவாஸ் ஷரீபையும் இதே குற்றங்களைக் கூறி கடந்த ஏப்ரலில் பதவியிலிருந்து இஷாக்கான் இறக்கினார். இவ்வாறு சூடுபட்ட பூனைகள் இரண்டும் மீண்டும் பதவிக்கு வந்தால் ஜனாதிபதியின் இத்தகைய அதிகாரங்களை களைந்தெறியப் போவதாக கங்கணம் கட்டிக்கொண்டுள்ளனர்.

நவாஸ் ஷரீப் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளில் கணிசமான முன்னேற்றங் களைப் புகுத்தினார். தொழில் வளங்களை தனியார் மயமாக்கலில் அவர் காட்டிய உத்வேகம் நல்ல பாராட்டுக்களைப் பெற்றது. அதே வேளையில் ஊக்கம் கொடுக்கப்படுவோர் உதவி பெறுவோர் வரிசையில் பாரபட்சம் காட்டப்படுவதாகக் குற்றச் சாட்டுகளும் வானளாவ எழத் தொடங்கின. வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தயக்கம் காட்டத் துவங்கினர்.

ஜனாதிபதிக்கு அதிகமான அதிகாரங்களை வழங்கும் சட்டமூலத்தின் காரணகர்த்தா முன்னாள் சர்வாதிகாரி ஜெனரல் மொகமட் ஸியா உல் ஹக், இதனைச் சாதகமாக வைத்துக் கொண்டே ஜனாதிபதி இஷாக்கான் பல வேண்டப்படாத செயல்களைச் செய்தார். இவற்றை நீக்க முயற்சித்த பிரதமர் நவாஸ் ஷரீப்பை பதவியிலிருந்து இறக்கினார்.

இதனை எதிர்த்து வழக்காடி மீண்டும் பதவியைக் கைப்பற்றிய நவாஸ் ஷரீப், தேய்ந்து கொண்டு போகும் தேசவளங்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஜனாதிபதியுடனான மோதல்களை முட்டுக்கொடுத்து நிமிர்த்த முயற்சிப்பதில் காலமும் பொழுதும் கடந்தது. அதனைப் பயன்படுத்தி பெனாசிர் பூட்டோ போர்க் கொடி உயர்த்தினார். பிரதமர் பதவி விலக வேண்டும். அல்லது ஜனாதிபதி மீண்டும் அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று குரலெழுப்பினார். எதிர்க்கட்சிகளனைத்தையும் ஒன்று திரட்டி போராட்டங்களுக்கு திட்டமிட்டார், பொருளாதார வீழ்ச்சியுடன் கட்சிமோதல்களும் சேர்ந்து கொண்டால் நிலமை மிக மோசமடைந்து விடும் என்று இராணுவத் தளபதி வஹீட், பெனாசீரை அணுகினார். சமாதானப்படுத்தி போர்க்குரலைத் தணித்தார். ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் தூது சென்று அமைதியை நிலை நாட்டினார்.

இருவரையும் பதவி விலகச் செய்தார். பொதுத் தேர்தலுக்கும் நாள் குறிக்க வைத்தார்.

பல தடவைகள் இராணுவ ஆட்சிகள் ஏற்பட்ட போதிலும் நாட்டின் பொருளாதார நிலை சீர்திருந்தவில்லை. ஊழலையோ உதாசீனத்தையோ இன்றுவரை இராணு வத்தால் களைபிடுங்க முடியவில்லை. எதிர்காலத்தில் தலைமையைத் தட்டிக் கொள்ளத் துடிக்கும் இருவரில் எவருக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் என்று சொல்ல முடியாது. தேர்தலின் முடிவைப் பொறுத்துத்தான் பாகிஸ்தானின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது என்பதை அறிய முடியும்.

# உலக ரவுண்டப்

### பெறுமதியான தலை! - விலை 66 கோடி!

அமெரிக்காவில் நியூயோர்க்கில் உள்ள 110 மாடிக் கட்டிடமான வர்த்தக மையத்திற்கு குண்டுவைத்தவர் என்று சாங்கி அகமது யூசுப் (வயது 21) என்பவர் தேடப்பட்டு வருகிறார்.

இவர் ஈராக்கைச் சேர்ந்த பழமைவாத முஸ்லீம் தீவிரவாதி என்று அமெரிக்க உளவுத்துறை கூறியிருக்கிறது.

அவர் இப்போது மேற்காசியாவின் ஒரு பகுதியில் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

அவர் பற்றிய தகவல் தருவோருக்கு 66 கோடி ரூபாய் வெகுமதி அளிக்கவுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அறிவித்துள்ளது.

தமிழில் மணலாறு என்றழைக்கப்படும் முல்லைத்தீவுப் பிரதேசத்தை அண்டிய வெலிஓயாப் பகுதியிலுள்ள ஜனகபுர இராணுவ முகாம்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல், இலங்கை இராணுவ நிலையொன்றின் மீது நடத்தப்பட்ட மிகப் பெரும் தாக்குதலாகக் கருதப்படுகின்றது.

கடந்த பத்து வருடகாலமாக இலங்கையில் தீவிரமடைந்து காணப்படும் உள்நாட்டு யுத்தத்தின் உச்சநிலையையே இத்தாக்குதல் விளக்குகின்றது என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பாகக் காணப்படுகின்றது.

1983ம் ஆண்டு ஆடிக்கலவரத்தின் ஒரு தசாப்த பூர்த்தியை அனுசரிக்கும் வகையிலேயே ஜனகபுரத்தில் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டதாக புலிகள் அறிவித்திருந்தனர். கூடவே அத்தாக்குதலுக்கு 'ஒப்பரேஷன் இதய பூமி' என்றும் பெயரிட்டிருந்தனர்.

புலிகளின் இத்தாக்குதல் அவர்களது இராணுவ ரீதியிலான பலம் குறைவடைந்து விடவில்லை என்பதனைப் புலப்படுத்துவதுடன், யுத்தப் பிரதேசங்களில் உள்ள இராணுவ நிலைகள் எவ்வேளையிலும் புலிகளின் கெரில்லாப் பாணியிலான தாக்குதலுக்குள்ளாகலாம் என்பதனையே உணர்த்துவதாகவும் காணப்படுகின்றது.

ஆட்சியாளர்கள் கூட இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஆர்வங்காட்டியிராத சூழ்நிலையிலேயே புலிகள் பலமான முறையில் தமது கைவரிசையைக் காண்பித்துள்ளனர்.

இதன் மூலம் அரசியல் நடவடிக்கைகளில் தமக்குள்ள அக்கறையின்மையினையும், இராணுவ ரீதியிலான அணுகுமுறைகளிலேயே தாம் நம்பிக்கை கொண்டுள்ளதையுமே புலிகள் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த கால அரசியல் நிலவரங்களை நோக்கும்போது முழு நாடுமே இராணுவ நடவடிக்கைகளின் தாக்கத்தை நன்குணர்ந்துள்ள நிலையே தற்போது காணப்படுகின்றது.

இருந்த போதிலும் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வினை எந்தவகையில், எத்தகைய வடிவத்தில் கொண்டு வருவது என்பதில் ஆட்சியாளர்கள் தெளிவில்லாத மற்றும் நிதானமற்ற போக்கினைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

அரசியல் தீர்வு தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் உன்னிப்பான முறையில் அவதானிக்கப்பட்ட போதிலும், அக்குழுவின் செயற்பாடுகள் அதிருப்தியளிப்பனவாகவே விளங்கியிருந்தன.

கோள் விடுத்துள்ளார்.

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு 'திடு திப்'பென்று வடக்கு-கிழக்கு நிலபரம் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பதையும் நாட்டை போர்க்காலச் சூழ்நிலையில் தயார் படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளதையும் நோக்கும் போது, இவ்வளவு காலமும் அவர் எந்த உலகத்தில் இருந்தார்? என்ற கேள்வியே மனதில் எழுகின்றது.

நாட்டைப் போர்க்காலச் சூழ்நிலையில் தயார்படுத்த வேண்டுமென்று திருமதி. பண்டாரநாயக்கா குறிப்பிட்டிருந்தார். ஆனால் நாடு கடந்த பல வருடங்களாக போர்க்காலச் சூழலிலேயே இருந்து வருவதையும், அத்தகைய சூழலில் இருந்து விடுபடுவதற்கான வழிவகைகளை அறிந்து கொள்ள முடியாமலேயே அரசியலாளர்கள் திண்டாடுவதையும் ஏனோதான் இந்த அம்மையார் அறிந்து கொள்ள முடியாதவராக இருக்கின்றார் என்பதே வியப்பாக இருக்கின்றது.

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் தற்போது எதிர்க்கட்சித் தலைவியாக இருக்கின்றார். ஆனால் 1970ம் ஆண்டு இவர் இந்நாட்டின் பிரதம மந்திரியாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து சுமார் ஏழு ஆண்டுகள் வரை நாட்டை இவர் வழிநடத்திய விதத்தை நாட்டுமக்கள் இன்றுவரை பூரணமாக மறந்துவிடவில்லை.

## அலசுவது – இராஜதந்திரி



ஆட்சியில் காற்றில் கலைந்ததையடுத்தே விரக்தியுற்ற தென்னிலங்கை இளைஞர்கள், சிறிமாவோவின் ஆட்சிக்கெதிராக அன்று ஆயுதக் கிளர்ச்சியை நடத்தியிருந்தனர்.

எனவே இலங்கையில் ஆயுதமேந்திய தீவிரவாதப் போராட்டம் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலேயே முதலில் தோற்றம் பெற்றிருந்தது.

இந்த ஆயுதப்போராட்டம் தென்னிலங்கையின் இளைஞர் சமூகம் கொண்டிருந்த விரக்தியின் வெளிப்பாடாகவே விளங்கியிருந்தது.

அத்துடன் வடபகுதி இளைஞர்களையும் விரக்தி நிலைக்குத் தள்ளும் சூழ்நிலையும் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்திலேயே ஏற்பட்டிருந்தது.

# சன்னதம் கொள்ளும் சிறிமாவோ அம்மையார்!

களில் உள்ள இராணுவ நிலைகள் எவ்வேளையிலும் புலிகளின் கெரில்லாப் பாணியிலான தாக்குதலுக்குள்ளாகலாம் என்பதனையே உணர்த்துவதாகவும் காணப்படுகின்றது.

நேரடி மோதல்களில் ஈடுபட்டு பெருமளவு ஆட்சேதங்களை உண்டு பண்ணுவதைவிட, குழுக்களாகப் பதுங்கியிருந்து இராணுவ நிலைகளுக்கிடையிலான கவனங்களைத் திசை திருப்பி தமக்கு வேண்டிய இலக்கின் மீது மட்டும் பெருமளவு நாசத்தை உண்டுபண்ணும் புதிய உத்திகளைப் புலிகள் கையாளுவதையே ஜனகபுரத்தாக்குதல் எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.

ஏனெனில் ஜனகபுரத் தாக்குதலை நடத்து முன்னர், வடமேற்குப் பிரதேசத்தில் புத்தளப் பகுதியை அண்டிய வில்பத்து வனப்பிரதேசத்தின் சுற்றாடலில் இருந்த பொலிஸ் நிலையம் ஒன்றையும் புலிகள் தாக்கியிருந்தனர். இத்தாக்குதலிலும் பொலிஸார் பலர் கொல்லப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து புலிகளின் நடமாட்டம் வில்பத்து வனப்பிராந்தியத்தில் மும்முரமடைந்து காணப்படுகின்றதென்ற ஊகம் வலுவடைந்திருந்த வேளையிலேயே வடகிழக்குப் பகுதியான ஜனகபுரத்தில் இராணுவ நிலைமீது புலிகள் தமது பாய்ச்சலை மேற்கொ 'ண்டிருந்தனர்.

நடவடிக்கைகள் உன்னிப்பான முறையில் அவதானிக்கப்பட்ட போதிலும், அக்குழுவின் செயற்பாடுகள் அதிருப்தியளிப்பனவாகவே விளங்கியிருந்தன.

நாட்டின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பன இனப்பிரச்சனை தீர்வு குறித்து இதுவரை தமது யோசனைகளை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தெரிவித்திருக்கவில்லை.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்திருந்த தமிழ் அரசியல் கட்சிகள் கூட அத்தெரிவுக்குழுவின்மீது அவநம்பிக்கை தெரிவித்து அதன் நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்திருந்தன.

எனவே இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கான வேறு வழிவகைகள் யாது? என்ற கேள்வி எழுந்துள்ள தறுவாயிலேயே புலிகளின் ஜனகபுரத் தாக்குதல் ஒரு பலமான சாட்டையாக அரசின்மீது விழுந்துள்ளது.



நாயக்கா அம்மையார் தற்போது எதிர்க்கட்சித் தலைவியாக இருக்கின்றார். ஆனால் 1970ம் ஆண்டு இவர் இந்நாட்டின்

கல்வியை தமது பெரும் மூலதனமாகக் கொண்டு அயராத உழைப்பினாலும், விடாமுயற்சியினாலும் முன்னேற்றத்தைக் காணமுற்பட்ட வடபகுதி இளைஞர்களுக்கு, பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுவதில் தரப்படுத்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டதும் சிறிமாவோவின் ஆட்சிக்காலத்திலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

தோல்வியையே தழுவியிருந்தனர்.

ஆயினும் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா தமது ஆட்சியின் போது நாடு ஒரு யுத்த நிலையில் இருந்த போதிலும் மக்கள் எக்காரணம் கொண்டும் விரக்தி நிலைக்கோ அல்லது, இனத்துவேச ரீதியிலான பதட்டத்துக்கோ உள்ளாகிவிடக் கூடாது என்பதில் அவதானமாகவே இருந்தார்.

பிரச்னைகள் எத்தகைய காரசாரமான போக்கினைக் கொண்டிருந்த போதிலும், மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்படக்கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

இந்த உறுதிப்பாட்டின் வெளிப்பாடாகவே தாம் முன்வைத்த அபிவிருத்தித் திட்டங்கள், மற்றும் தாம் நடத்திய வைபவங்கள் அனைத்திலும் மக்களைப் பெருமளவில் பங்கு கொள்ளச் செய்ததுடன், எக்கட்டத்திலும் இனவாத அரசியலுக்கு இடமளிக்காத நிலையை திரு.ஆர். பிரேமதாசா ஏற்படுத்தியிருந்தார்.

1983ம் ஆண்டில் ஆடிக்கலவரம் இடம் பெற்ற போது அன்று இடம் பெற்றுக் கொண்டிருந்த ஆடிவேல் விழாவும் இடைநடுவில் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஆடிவேல் ரதமும் தனது பவனியைச் சுருக்கி மீண்டும் ஆலயம் திரும்பியிருந்தது.

எனவே 1983ம் ஆண்டின் ஆடிக் கலவரத்தையடுத்து இடைநிறுத்தப்பட்டிருந்த ஆடிவேல் விழா கூட ஒன்பது வருடங்களின் பின்னர், மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரிலேயே கடந்த ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து இந்த ஆண்டிலும் ஆடிவேல் விழா கொழும்பு நகரில்களை கட்டியிருந்தது.

ஆனால் இத்தடவை ஆடிவேல் விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் நடை பெறவிருந்த தறுவாயிலேயே வேல் உற்சவங்கள் இடம்பெற்ற ஆலயங்களில் குண்டு வெடிப்புக்கள் ஏற்பட்டு உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டிருந்தன.

இந்த அனர்த்தம் திரு. ஆர். பிரேமதாசா போன்ற ஒரு தலைவர் இன்று நாட்டில் இல்லாததையும், குறுகிய இன-மதவாதக் கும்பல்களின் அடாவடித்தனங்கள் மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்துள்ளதையுமே வெளிக்காட்டுவதாக இருக்கின்றது.

## மக்களை விரக்தி நிலையில் வைத்து அமைதியைத் தேடமுடியாது என்பதை உணர்த்திய பெருந்தகை அமரர் ரணசிங்க பிரேமதாசா!



ஒரே இடத்தில் தங்கியிருக்காமல், நடமாடித்திரிந்து தமக்கு வாய்ப்பான சூழ்நிலைகள் தோன்றும் பட்சத்தில் பெருந்தொகையான உறுப்பினர்களைப் பயன்படுத்தி திடீர் தாக்குதல்களை மேற்கொள்வதையே புலிகள் தற்போது வழக்கமாக்கிக் கொண்டுள்ளதை வில்பத்து, ஜனகபுரத் தாக்குதல்கள் மூலம் நன்கு அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

பாதுகாப்புப்படையினரின் நிலையை நோக்கும்போது பாரிய அளவிலான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எண்ணம் அவர்களிடம் அண்மைக்காலங்களில் இருந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டிருக்கவில்லை.

புலிகளின் ஜனகபுரத் தாக்குதலையடுத்து தென்னிலங்கையில் ஆக்ரோஷமான கோஷங்கள் அத்தாக்குதலைக் கண்டித்து வெளிவந்துள்ளன. ஆட்சியிலிருப்பவர்களல்லாது எதிர்க்கட்சியில் இருப்போரே இந்த கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். இவர்களில் எதிர்க்கட்சித் தலைவியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவே "நாட்டை போர்க்காலச் சூழ்நிலையில் வைத்திருந்து, வடக்கு-கிழக்குப் பிரச்னையை எதிர்கொள்ள வேண்டும்" என்று குரல் எழுப்பியுள்ளார்.

மேலும் அவர் நாட்டில் இடம்பெறும் தமாஷாக்களையும் நிறுத்தி, நாட்டுமக்கள் அனைவரும் வடக்கு - கிழக்குப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றுதிரளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதம மந்திரியாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து சுமார் ஏழு ஆண்டுகள் வரை நாட்டை இவர் வழிநடத்திய விதத்தை நாட்டுமக்கள் இன்றுவரை பூரணமாக மறந்துவிடவில்லை.

ஆட்சியைக் கைப்பற்றும் பொருட்டு "சந்திரனில் இருந்தும் அரிசி கொண்டு வந்து தருவோம்" என்று நாடு முழுவதும் தேர்தல் பிரசாரம் செய்து, பின்னர் ஆட்சிக்கு வந்தபிறகு நாட்டு மக்களைப் பட்டினிச் சாவின் விளிம்புக்குக் கொண்டு சென்றவரே இந்த சிறிமாவோ அம்மையாராவர்.

அன்று இளைஞர்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கி அவர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசுமீது நம்பிக்கை வைக்கத்தூண்டியிருந்தார் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா.

ஆனால் தமக்களிக்கப்பட்ட வாக்குறுதிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் காற்றில் கலைந்ததையடுத்தே...

எனவே நாட்டுமக்கள் அனைவரையும் ஒரு பூரண விரக்தி நிலைக்குக் கொண்டு செல்வதாகவே திருமதி. பண்டாரநாயக்காவின் ஆட்சி விளங்கியிருந்ததுடன், அந்த விரக்தியின் வெளிப்பாடாகவே இன்றுவரை சுதந்திரக் கட்சி ஓர் உறுதியான மக்கள் ஆதரவைப் பெறமுடியாத நிலையில் இருப்பதையும் உணரக்கூடியதாக இருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் நிலைப்பாட்டை நோக்கும் போது, இக்கட்சியின் பிரதமராக சிறிமாவோவின் கணவர் மறைந்த திரு. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா பதவி வகித்த 1956ம் ஆண்டிலேயே தமிழருக்கெதிரான முதலாவது இனக்கலவரம் இலங்கையில் வெடித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஆட்சியின் போதே 'சிங்களம் மட்டும்' (Sinhala Only) என்ற இனவாத அரசியலும் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விதைத்த இனவாத அரசியலின் விளைச்சலை இன்று நாடு அறுவடை செய்து கொண்டிருக்கும் தருணத்திலேயே, எதிர்க்கட்சித்தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டை போர்க்காலச் சூழலில் வைத்திருக்குமாறு அறை கூவல் விடுத்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சனை ஏற்படுத்தியுள்ள தாக்கம் முழு நாட்டினையும் இன்று அரசியல், மற்றும் சமூக பொருளாதார ரீதியாகப் பெரிதும் பாதிப்படையச் செய்துள்ளது.

இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசியல் தலைவர்கள் அனைவரும் இனப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் தோல்வியையே தழுவியிருந்தனர்.

இந்நிலையில் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பொறுப்புள்ள பதவியில் இருந்தும் கூட அரசியல் ரீதியாக இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு எதுவித முன்முயற்சிகளையும் எடுக்காது, இராணுவ நடவடிக்கையை துரிதப் படுத்தும் தோரணையில் நாட்டைப் போர்க்காலச் சூழ்நிலையில் வைத்திருக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இக் கோரிக்கையின் மூலம் தாம் ஒரு பெரும் அறைகூவல் விடுத்துள்ளதாகக் கருதி திருமதி. பண்டாரநாயக்கா பெருமிதம் கொள்ளலாம்.

ஆனால் அவரது இக்கூச்சல், வயதில் தான் அவர் முதிர்ச்சியடைந்துள்ளாரே தவிர அரசியலில் வெறும் 'பத்தாம் பசலி'யாக இருக்கின்றார் என்பதனையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்ட

லேடீஸ் ஸ்பெசல்

# அழகு வெறி அம்மாவை அழித்தது
# தன்னம்பிக்கையின்மை தற்கொலையானது!












தற்கொலையாவதற்கு முன்னர் இறுதியாக எடுத்துக்கொண்ட புகைப்படம்

அழகாகவும்-தூய்மையாகவும் இருக்க விரும்புவது ஒன்றும் தவறான விஷயமல்ல.

**எனினும் அழகானவர்கள்- கம்பீர மானவர்கள் என்ற எண்ணமே தன்னம் பிக்கையை உருவாக்கிவிடும். நாம் அழகாக இல்லையே என்று தாமே தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள் தன்னம்பிக்கையை இழந்து விடுகிறார்கள். அதனால் அழகாக இருக்க வேண்டும் என்ற நியாயமான எண்ணம் வெறியாக மாறி அவர்களையே அழித்துவிடுமளவுக்கும் சென்றுவிடும்.**

**இதோ-ஒரு அழகான பெண்ணின் தன்னம்பிக்கையின்மை அவளை தற் கொலைக்குத் தூண்டியிருக்கிறது. அந்த சோகக் கதையை நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்.**

மௌறின் ஜென்கின்ஸ் அழகானவள். ஆனால் தான் அழகில்லாதவள் என்ற கருத்தை வளர்த்துக்கொண்டு அலங்காரம் செய்வதிலும் சத்திரசிகிச்சை செய்வதிலும் ஏராளமான பணத்தை வாரி இறைத்துவிட்டு எதிலும் திருப்தியடையாதமையினால் தன் உயிரையே மாய்த்துக் கொண்டாள்.

தனது 35வது பிறந்த நாளைக் கொண்டாடி சில மணி நேரத்தில் 100 தூக்க மாத்திரைகளை மதுபானத்துடன் கலந்து குடித்து தனது உயிரை மாய்த்துக் கொண்டாள்.

"தான் அழகற்றவள். எப்படியாவது தான் அழகான பெண்ணாக மாற வேண்டும் என்று வெறி கொண்டவளாக மௌறின் மாறிவிட்டாள்" என்று அவளுடைய கணவன் பற்றிக் வேதனை யுடன் கூறுகிறார். "அழகு மட்டும் பிரதானமல்ல" என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணரவேண்டும்" என்று கூறுகிறார் அவர்.

வெளியே திரியும் போது எங்காவது ஒரு படப்பிடிப்பகத்தைப் பார்க்க நேர்ந்தால் உடனே அதற்குள் சென்று தன்னைப் படம்பிடித்துக் கொள்வாள். இவ்வாறு வகை வகையான தோற்றங்களில் பிடிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான புகைப்படங்களை மௌறின் சேர்த்து வைத்துள்ளாள்.

பலமணி நேரங்களை கண்ணாடி முன் நின்று அலங்காரம் செய்யச் செலவிடுவாள். கண்டகண்ட முகப்பூச்சுக்களையெல்லாம் பூசுவாள். தன்னுடைய தலைமுடியின் வர்ணத்தை பல தடவைகளில்- பல வர்ணங்களில் மாற்றிக் கொள்வாள்.

"அலங்காரப் பொருட்கள் அடங்கிய பெட்டியை அவள் போகுமிடமெல்லாம் கொண்டே செல்வாள்." என்று கணவன் இப்போது கூறுகிறார். மௌறினுக்கு 17 வயதாக இருக்கும் போது இவர்கள் திருமணம் நடைபெற்றது. இவர்கள் நியூ இங்கிலாந்தில் வாழ்ந்தனர். (அமெரிக்காவில்)

"இப்பொழுது பத்து வ்யதாக இருக்கும் எங்கள் மகள் பிறந்த அன்று, பிரசவ வேதனைகண்டு 'அம்பியூலன்ஸ்' வண்டிக் காகக் காத்திருந்த வேளையிலும் அலங் காரஞ் செய்து கொண்டிருந்தாள். அம்பியூலன்ஸ் வண்டி வந்துவிட்ட பின்ன ரும் அலங்கரித்துக் கொண்டேயிருந்தாள்" என்று கணவர் கூறுகிறார்.

மௌறின் தனது கன்னங்கள் இரண்டும் அழகிழந்து தொங்குவதாகக் கற்பனை செய்யத் துவங்கிய போது தான் அவளுடைய வெறி உச்சகட்டத்தை அடைந்தது.

"இதனைப் பாருங்கள். எனது கன்னங்கள் இவ்வாறு சுருங்கி வழிவதை என்னால் சகிக்க முடியவில்லையே' என்று கூக்குரலிடத்துவங்கிவிட்டாள்" என்றுபற்றிக் சொல்கிறார். கன்னங்களில் எவ்வித பிழை யும் இல்லை. அழகாகவே இருக்கிறது என்று பற்றிக் எவ்வளவோ தேற்றியும் பயனில்லை.

அவளைத் திருப்திப்படுத்த எவராலும் முடியவில்லை. வெகுண்டு துடித்த மௌறின் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையில் நிபுணரான ஒரு மருத்துவரை அணுகினாள். நன்கு பரிசோதித்த டாக்டர்" எந்தவிதமான பிழையும் உன் முகத்திலே இருப்பதாகத் தெரிய வில்லையே" என்றார். ஆனால் அதனால் கூட அவளைத் திருப்திப்படுத்த முடியவில்லை. அதன்பின் அவள் வீட்டை விட்டு வெளி யேறுவதையே நிறுத்திக் கொண்டாள்.

தொடர்ந்து புகை பிடித்துக்கொண்டு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வரும் அழகுக் குறிப்புகளைப் படித்து, அவற்றில் குறிப்பிடப்படும் தயிலங்கள் மருந்து களையெல்லாம் வாங்கி முகத்தில் தேய்ப்பாள்.

"ஒரு நாள் நான் வீடு வந்தபோது அறையில் முன்னும் பின்னும் நடந்து கொண்டு பிதற்றியவண்ணம் காணப் பட்டாள். "இத்தகைய முகத்தோடு என்னால் இனிமேல் வாழ முடியாது" என்று ஓலமிட்டாள் என கணவர் சொன்னார். இதனால் குடும்பத் திலுள்ள பலரும் அஞ்சத்தலைப்பட்டனராம்.

பற்றிக்குக்கு 37 வயதாகிறது. ஒரு கட்டிட முகவர் நிலையத்தில் பணிபுரிகிறார். இதனால் மௌறின்விரும்பிய முகத்துக்கான பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை செய்வ தற்கேற்ற பண வசதி அவரிடம் இல்லை. அவளுடைய சகோதரர் பண உதவி செய்ய முன் வந்தார். "முகத்துக்கு இச்சிகிச்சை அளிக்கப்பட்டால் அவள் சாதாரண நிலையை அடைந்து விடுவாள்" என்று கருதி சத்திர சிகிச்சைக்கு ஏற்பாடுகளைச் செய்தோம். காயம் ஆறி முகத்தின் கட்டுகள் நீக்கியதும் கண்ணாடியில் முகத்தைப் பார்த்ததும் பலத்த சத்தத்துடன் அழ ஆரம்பித்து விட்டாள். திருப்திகாணாத மௌறின் மற்றுமொரு டாக்டரிடம் சென்றாள். ஒரு தரம் சத்திரசிகிச்சை செய்து 6 மாதங்கள் பூர்த்தியாகாமல் மற்றொரு சிகிச்சை செய்ய முடியா தென அவர் கூறி விட்டார். ஆனால் அவ்வளவு காலம் அவளால் பொறுத்தி ருக்கமுடியவில்லை" என்று பற்றிக் கூறினார்.

மன நோய் மருத்துவரிடம் மௌறின் அழைத்துச் செல்லப்பட்டாள். அவருடைய கேள்விகளுக்கெல்லாம் அவள் கூறிய விடை ஒன்றுதான். "என்னுடைய பழைய முகத்தை நான் பெறுவேனானால் நான் நலமா யிருப்பேன்" என்றே அவள் கூறினாள்.

தன்னுடைய துன்பங்களுக்கெல்லாம் முடிவு காண தனது 35வது பிறந்த நாள் விழாவையே அவள் தெரிவு செய்து கொண்டாள். "அன்றைய தினம் அவள் மிகவும் மகிழ்ச்சியாகவே தென்பட்டாள்" என்று பற்றிக் கூறுகிறார். "அவள் குணமாகிவிட்டாள் என்றே கருதினோம்" என்றார்.

தனது மனைவியை இழந்த கணவன் தனது 10வயது மகள் எம்மாவுக்கு நிலமையை விளக்கிக் கொண்டிருக்கிறார்.

"அம்மாவுக்கு அவளுடைய அழகே பிரதானமாக இருந்தது. அழகில்லாமல் அவள் உயிருடன் இருக்க மாட்டாள் என்ற நிலையேற்பட்டது. இது எவருடைய பிழையுமல்ல" என்று மகள் எம்மா கூறுகிறார்.

அழகு வெறி - அன்பான குழந்தையை தாய்ப்பாசத்துக்கு ஏங்கவைத்துவிட்டு தாயைப் பறித்துக் கொண்டது.

# முடிஅழகு பேண முத்தான யோசனைகள்!




சுத்தமான சிகையே உங்கள் அழகின் பிரதானமான அம்சம். தலை முடி அழகிலேயே உங்கள் அழகின் செழிப்புத் தங்கியிருக்கிறது.

தற்போது மலிந்துவிட்ட தலை துவட்டும் சூடான காற்றை வெளியிடும் கருவிகள், உருளைகள், சுருளகற்றும் கருவி போன்றவை முடியின் ஈரத்தன்மை முழுவதையுமே வற்ற வைத்து முடியின் நுனிகளில் வெடிப்பினை ஏற்படுத்தி விடுகின்றன. இவ்வாறான பின்னர் முடியைப்பழைய நிலைக்குக் கொண்டு வருவது மிகக் கடினமாகி விடும். அதிகமாக வெய்யிலில் காய்வது, கடும் காற்றில் உலரவிடுவது, கடல் நீரில் அதிகம் நனைத்தல், குளோறின் கலந்த நீரில் அதிக நேரம் குளித்தல் போன்றவற்றால் கூட பாதகம் ஏற்படலாம். எயார் கொண்டிஷனில் அதிக நேரம் இருப்பதும் தலை முடியின் நீர்த்தன்மையை நீக்கிவிடும். கண்ட கண்ட எண்ணைகளைத் தடவுவதும் தரமற்ற 'ஷாம்போ'வைப் போட்டு தலை முடியைக் கழுவுவதும் கூட மோசமான பலன்களையே தரும்.

தரமான 'ஷாம்போ' பாவிப்பதும் வாரத்துக்கொருமுறை தரமான 'கண்டிஷனர்' தடவி சிகையை சீராக்குவதும் நல்லது. இதனால் வரண்டு போன முடியையும் பழைய நிலைக்குக் கொண்டு வரமுடியும்.

உங்கள் முடி சுகாதாரமாக -துப்புரவாக மற்றும் கவர்ச்சியாக இருக்க வேண்டுமானால் இம்முறைகளைப் பின்பற்றுங்கள்,

1. நீங்கள் தலையில் தண்ணீரைக் கொட்டுவதற்கு முன்னர், முடிகளிலுள்ள சிக்குகள் மற்றும் முடிச்சுகள் நீங்குவதற்கேற்றவாறு ஒரு சீப்பால் நன்றாக வாரி விடுங்கள்.
2. ஓரளவு சூடான நீரில் தலையை நன்றாக நனையுங்கள். நீர் அதிக சூடாக இருந்தால் கேசமும் தலையின் மேற்பரப்பும் பாதிப்படையக்கூடும்.
3. சிறிதளவு 'ஷாம்போ'வை உள்ளங்கையில் கொட்டி இரு கைகளிலும் தேய்த்து முடியில் தடவி மென்மையாக- அழுத்தமாகத் தலையில் தேய்க்கவும்.
4. தலையினை நன்றாக நீரூற்றிக் கழுவுங்கள். மேலதிகமான நீர் முடியில் தேங்காமல் நீரை அகற்றவேண்டும். முடியை இறுக்கமாக சுருட்டி நீரை வெளியேற்றலாகாது. அவ்வாறு செய்தால் முடியின் இயல்பான தன்மை நீங்கிவிடலாம்.
5. 'கண்டிஷன'ரில் கொஞ்சம் கையில் எடுத்து மெதுவாக தலையில் தடவுங்கள். முடியின் அடியிலிருந்து நுனி வரை இதனைப் படும்படி லேசாகத் தடவுங்கள். தலையில் மெதுவாக 'மசாஜ்' கொடுக்கலாம்.
6. கண்டிஷனர் சிறிது நேரம் தலையில் இருக்க விடப்பட வேண்டும். அகன்ற பற்களைக் கொண்ட சீப்பினால் முடியை லேசாகக் கோதி விடவும்.
7. மீண்டும் ஒரு முறை தண்ணீரால் கழுவுங்கள். பின்னர் மிருதுவானதுவாயினால் துவட்டுங்கள். நீர்ப்பிடிப்பான முடியினை வாரும் போது அகன்ற பற்களைக் கொண்ட சீப்பையே பாவிக்க வேண்டும். பிறஷ் அல்லது நெருக்கமான பற்களைக் கொண்ட சீப்புப் பயன்படுத்துவதனால் முடிகளுக்கு தீங்கு ஏற்படக்கூடும்.

வாரத்துக்கொரு முறை 'ஷாம்போ' வைத்து முழுகுவதுடன் 'கண்டிஷனர்' தடவுவதும் நல்ல பலன் தரும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் வரப்போகும் 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

## சிக்கனமான அழகுக் குறிப்புக்கள் சில

நமக்கு மிகவும் வேண்டியவர்களாயிருப்பார்கள். ஆனால் அருகில் நின்று பேசும் போது வாய் துர்நாற்றம் வயிற்றைக் குமட்டும். இவர்கள் எலுமிச்சம்சாறு கலந்த நீரினால் அடிக்கடி வாயைக்கொப்பளித்து வந்தால், இத்தொல்லை நீங்கும். பேசும் போது பிறர் ஓடாமல் நின்று கேட்பார்கள்.

கோடைகாலத்தில் அதிகமான பழச்சாறுகள், பச்சைக் காய்கறிகள், கீரை வகைகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள். எண்ணெயில் பொரிக்கப்பட்ட பதார்த்தங் களைத் தவிர்ப்பதுடன் கோப்பி, தேனீர் பருகுவதையும் குறைத்துக் கொண்டால் கோடையில் முகப்பருக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். இத்துடன் இளநீர், பேரீச்சம்பழம், உலர்ந்த திராட்சை ஆகியவற்றை அவ்வப் போது சாப்பிடலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


# பேசுவது கிளியா? இல்லை—பூனை!

"ஐ. லவ். லவ். லவ்!"

பூனைதான் அப்படிப் பேசுகிறது. ரசனையுள்ள பூனைதான்.

அவர் கூப்பிட,

பூனையும் மெல்லிய குரலில் 'ஹலோ' என்றதாம்.



சரி எங்கே இந்த ஆச்சரியம் நடந்திருக்கிறது என்று கேட்பீர்கள்.

அமெரிக்காவில் உள்ள ஒஹையோ மாநிலத்தில் கிளவ் லண்ட் நகரில் பூனை பேசுகிறது.

பூனையின் பெயர் மிஸ்டர் வைட். வயது பதினொன்று.

68 ஆங்கில வார்த்தைகள் இதுவரை அதற்கு மனப்பாடம்.

இந்தப் பூனை குட்டியாக இருக்கும் போதே பசியெடுத்தால் தனது உணவுத் தட்டில் தட்டிக் காட்டுமாம்.

அதைக் கண்ட பூனை வளர்த்த ஆதர் என்பவருக்கு அதனிடம் ஏதோ புதிய சக்தி இருப்பது தெரிந்ததாம்.

ஒரு முறை 'ஹலோ' என்று

பிறகென்ன! மெல்ல மெல்ல ஆங்கில வார்த்தைகளை ஆதர் சொல்லிக் கொடுத்தார்.

பூனைக்குரிய கூண்டிலும் ஒரு ஒலி வாங்கியை இணைத்துள்ளார். அதனோடு ஒலிப்பதிவு சாதனத்தையும் பொருத்தியுள்ளார்.

"ஐ ஆம் ஹங்கிரி" (எனக்குப் பசிக்கிறது) 'ஐ.லவ்.லவ்.லவ்' என்றெல்லாம் சாதாரணமாகப் பேசுகிறதாம்.

இப்போது பூனையின் பேச்சடங்கிய 100 மணிநேர ஒலிப்பதிவு நாடா ஒன்றையும் ஆதர் வைத்திருக்கிறார்.

புத்திசாலிப் பூனை. உங்கள் வீட்டில் பூனையிருந்தால் முயற்சி செய்து பாருங்களேன்.

# தகவல் பெட்டி

## நைட் கிளப்பில் வண்ணக்கிளி!



அமெரிக்காவைச் சேர்ந்தவர் லூயிஸ். தான் வளர்க்கும் கிளியுடன் அங்குள்ள நைட் கிளப்புக்கு போயிருக்கிறார். அங்கு பொப் பாடகிகள் அசரவைக்க அதை ரசித்துக் கொண்டிருந்துவிட்டு வீடு திரும்பினார். திடீரென்று அருகில் பாட்டுச் சத்தம். பொப் பாட்டுத்தான். பாடியது கிளி ஐயா கிளி. கிளப்பில் ரசித்துவிட்டு வீடு வந்து பாடிவிட்டது.

லூயிசுக்கு ஒரே மகிழ்ச்சி. மறுநாள் கிளியோடு நைட் கிளப்புக்கு போய் விஷயத்தைச் சொன்னார். பாடியது கிளி. கேட்டவர்களுக்கு மூக்கின் மேல் விரல். விளைவு என்ன தெரியுமோ?

நைட் கிளப்பில் கிளியும் இப்போது ஒரு பாடகி. அழகிய பெண்களோடு இணைந்து டூயட் பாட்டெல்லாம் பாடி ஒரு கலக்குக் கலக்குகிறதாம்.

## அதிசய முட்டை



அவுஸ்திரேலியாவில் மண்ணில் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களுக்கு ஆச்சரியம். ஏதோ வெள்ளையாகத் தெரியவே மண்ணை ஆழ்ந்து தோண்டிப் பார்த்தனர்.

ஒன்றரை அடி நீளமுள்ள பெரிய முட்டை ஒன்று வெளியே வந்தது. சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்.

'மடாகாஸ்கான்' என்னும் பறவை போட்ட முட்டையே அது என்று சொல்கிறார்கள்.

## எம்.ஜி.ஆர் ஸ்டைலில் குரங்கு செய்த டுசும் டுசும்



ஜீலி என்ற பெண் கடற்கரைக்கு போனபோது காமுகன் ஒருவன் பலவந்தம் செய்ய முற்பட்டிருக்கிறான்.

மரத்தில் தாவி விளையாடிக் கொண்டிருந்த குரங்கொன்று அதைக் கண்டுவிட்டது.

உடனே ஒரே பாய்ச்சல். காமுகனின் மீது கடியோ கடி. ஆளைவிடு என்று அவன் தப்பி ஓடிவிட்டான்.

தனது மானம் காத்த குரங்கை அன்று முதல் தத்துப்பிள்ளையாக எடுத்துக் கொண்டார் ஜீலி.

அதுமட்டுமா? தன் சொத்தில் பாதியையும் அதன் பெயரில் எழுதி வைத்து விட்டார்.

இன்னொரு விசயம். திருமணம் செய்து குழந்தை பெற்றால் எங்கே குரங்கின் மேல் பாசம் குறைந்து விடுமோ என்பதால் ஜீலி திருமணமே செய்து கொள்ளவில்லை.

## சத்தியமாய் நம்புங்கள்! நுளம்புகளுக்கான ஒலிபரப்பு!!

வானொலி நிலையங்களில் இது காலவரை மனிதர்களுக்கான ஒலிபரப்புகளே ஒலிபரப்பப்பட்டு வந்தன. பிரான்ஸ் நாட்டில் நுளம்புகள் மட்டும் கேட்கக்கூடிய ஒலிபரப்பினை ஆரம்பிக்கவுள்ளனர். எப்.எம். (F.M.) சேவையில் ஒலிபரப்பாகும் இந்த இசைமனிதக் காதுகளுக்குக் கேட்காது. நுளம்பு மற்றும் சில பூச்சிகள் மட்டுமே இந்த இசையைக் கேட்டு மதிமயங்கிச் சொக்கி விடுகின்றனவாம்.

ஆண் பூச்சிகள் பெண் பூச்சிகளுக்கு காதல் (கவர்ச்சி) கீதம் இசைப்பது போல் இந்த நூதன இசை ஒலிபரப்பாகிறது. இதனைக் கேட்டு பெண் நுளம்புகளும் அதனை ஒத்த வேறு இனப்பூச்சிகளும் காதல் மயக்கத்தில் கிறங்கி, இசை ஒலிபரப்பாகும் வானொலி பெட்டியை நாடி வருகின்றன. இதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கியுடன் ஒரு சிறு பொறிவைக்கப்படும். இதில் பெண் நுளம்புகள் மாட்டிக் கொள்ளுகின்றன. கதை அவ்வளவுதான்.

16 கிலோ ஹேர்ட்ஸ் அலை வரிசையில் இந்த காதல் கீதம் ஒலிபரப்பாகிறது. நுளம்புத் தொல்லையால் துயிலின்றித் தவிக்கும் பலருக்கு இது வரப்பிரசாதமாக அமைகிறது.

வடக்கு பிரான்சில் ஓய்சி துறையினால் ஃபியூஜ் எஃப் எம் சேவை அடுத்த மாத மத்தியில் தனது சேவையைத் துவங்குகிறது. செய்தி மற்றும் இசை நிகழ்ச்சி போன்ற வழமையான நிகழ்ச்சிகளுக்கிடையில் இந்த ஒலிபரப்பு இடம் பெறும். மனிதர்களது காதுக்குள் புக முடியாத இந்தக் காதல் கீதத்தைக் கேட்டு நுளம்புகள் பறந்தோடி வருவதைப் பார்த்து ஒலிபரப்பு ஆரம்பமாகிவிட்டது என்று அறிந்து கொள்ள வேண்டியதுதான்.

பிரான்சின் கொம்பெய்ன் பல்கலைக்கழக ஆய்வாளர் பாற்றிக்லான்செலர் என்பவரே இந்த ஒலிபரப்பின் ஆதிகர்த்தா. அதிக சக்தி வாய்ந்த உயர்தர வானொலிப் பெட்டி மூலம் தான் இந்த ஒலியைப் பரப்ப முடியும் என்கிறார். இந்த ஒலிபரப்பு முறையை தங்களுக்கும் கற்றுத்தருமாறு பல நாட்டு ஒலிபரப்பு நிலையங்களும் கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால் பிரான்ஸ் நாட்டு அதிகாரிகள் கை விரித்து விட்டதாகத் தெரிகிறது.

# கைகளும் இல்லை கால்களும் இல்லை! நம்பிக்கை இழக்காத 4 வயதுச் சிறுவன்!!

கைகளும் இல்லை-கால்களுமில்லை - ஸாக் வான் டேவாண்டர் 4 வயதுச் சிறுவன். அமெரிக்காவில் ஒஹையோ மாநிலத்தில் செசாப்பீக் என்ற இடத்தில் வசிக்கிறான். தனது அங்கக் குறைபாடு பற்றி எந்த



விதமான மனவேதனையோ சங்கடமோ படாமல் தன்பாட்டில் தனது பணிகளை ஓரளவு செய்கிறான். இத்தனை இழப்புக்களுக்கு மத்தியில் சுறுசுறுப்புக் குறையாமல் மூளியாகியுள்ள அவயவ அடிப்பாகங்களினதும் தனது உடலின் ஏனைய பாகங்களினதும் உதவியுடன் நடமாடுகிறான்.

தனது வீட்டில் சகல இடங்களுக்கும் அரைந்து கொண்டே ஊர்ந்து செல்கிறான்.

மாடிப்படிக்கட்டுகளிலும் எவருடைய உதவியுமின்றி தனது நாடியை ஊன்றிக் கொண்டே ஏறுகிறான்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத இரு அவயவங்களையும் இழந்த ஸாக் இவ்வாறு நடமாடுவது இறைவனின் செயலே என்று பார்ப்பவர்கள் வியக்கின்றனர்.

உற்சாகமிழந்து வாழ்க்கையில் பற்றில்லாமலிருக்கும் பலருக்கு ஸாக் உதாரண புருஷனாகவே தென்படுகிறான்.

1989ல் பிறந்த ஸாக் கைகளும் கால்களும் இல்லாமல் பிறந்தமையினால் இவன் அதிக நாள் உயிர்வாழ மாட்டான் என்றே மருத்துவர்கள் கணித்தனர். ஆனால் அவர்களுடைய கணிப்புத் தவறானது. அவனுடைய தேக ஆரோக்கியத்தில் எத்தகைய குறையையும் காணக்கூடியதாக இருக்கவில்லை.

பெற்றாருக்கும் பெரும் குறையாகவே காணப்பட்டபோதும் வளர வளர புத்திசாதுரியத்திலும், மற்றவர்களுக்கு எத்தகைய சுமையையும் தராமல் தன்னாலான காரியங்களை தானே செய்து முடிப்பதிலும் ஆற்றல் பெற்றவனாக வளரத்தலைப்பட்டான். இதனால் பெற்றாருக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டது.


அயலவர்கள் வீடுகளுக்கும் ஊர்ந்து சென்று கதவைத் தட்டித் திறக்க வைத்து, அங்குள்ளவர்களுடன் கதை பேசி மகிழ்கிறான். சுற்றுவட்டாரத்திலுள்ளவர்கள் அனைவரும் ஸாக் மீது அளவு கடந்த பிரியம் வைக்கும் வண்ணம் அவனுடைய பழக்க வழக்கங்கள் அமைந்துவிடுகின்றன. தெருவில் கூட ஊர்ந்து செல்லப்பழகி விட்டான்.

குழந்தைகளுக்கான பள்ளிக் கூடம் செல்லும் ஸாக், அடுத்த வருடம் ஆரம்பப்பள்ளிக்குச் செல்லவிருக்கிறான். வீட்டிலும் அயலிலும் ஊர்ந்து திரியும் ஸாக்கிற்கு வெளியில் செல்வதற்கேற்ற இயந்திர சாதனம் பொருத்திய ஊர்தி ஒன்று, சுற்றாடலில் உள்ள நலன் விரும்பிகளால் கிடைத்துள்ளது. அதனை தனது ஏனைய அங்க அசைவுகளால் ஓட்டுவதற்குக் கற்றுக் கொண்டான்.

ஸாக்கிற்கு செயற்கை உறுப்புகளை எவ்வாறு பொருத்தலாம் என்று மருத்துவ நிபுணர்கள் ஆலோசித்து வருகின்றனர். இன்னும் சில காலம் சென்றபின் தான் செயற்கை அவயவங்கள் பொருத்த வசதியாக இருக்கும் என்று அவர்கள் முடிவெடுத்திருப்பதாக பெத்வான் டேவாண்டர் கூறுகிறார்.

இத்தனை குறைபாடுகள் இருந்தும் ஏனைய பிள்ளைகள் விளையாடும் போது, அவர்களுடன் ஸாக்கும் சேர்ந்து விடுகிறான். பேஸ் போல் என்ற பந்தாட்டம் இவனுக்குப் பிடித்தமான விளையாட்டு, மட்டையை தனது நாடிக்கும் கழுத்துக்கும் மத்தியில் அழுத்திப் பிடித்துக் கொண்டு, வீசப்படும் பந்தைக்குறி பார்த்து அடித்து விளையாடுகிறான். தகப்பன் ஜெஃப் ஒரு பாரிய மோட்டார் வாகனச் சாரதி. போதுமான பொருளாதார வசதியற்ற குடும்பமாதலால், ஸாக்கிற்கு சில அவசியமான உதவு சாதனங்கள் பெறுவதற்காக நலன் விரும்பிகள் போதிய பொருளாதார வசதிகளை அளித்து வருகின்றனர்.

ஸாக்கிற்கு 2 வயதில் ஷெல்பி என்றொரு தங்கையும் உள்ளாள்.



## தேவை காதலர்கள்!

டி.ராஜேந்தரின் ஒரு வசந்தகீதம் படத்தில் அவரது மகன் சிம்பு என்ற சிலம்பரசனும் உண்டு. தீபாவளியன்று படத்தை திரைக்கு கொண்டுவரத் திட்டமிட்டுள்ளார்கள். டி.ராஜேந்தர் வழக்கறிஞராக நடிக்கிறார். கௌதமியும் அதே. ஒருதலை ராகம் படம் போல இதிலும் கல்லூரிக் காதல் உண்டாம். காதலர்களுக்கு குறைவில்லைதான். என்றாலும் காதலர்களாக நடிக்க புது முகங்களை தேடித் தேர்வு நடத்துகிறார் ராஜேந்தர்.

## பட்டியலில் இன்னொரு பெயர்!

[illegible]

இன்ஸ்பெக்டர் அல்லி



## அதிரடிப்படையால் ஆர்.கே.செல்வமணி கைது

[illegible]

## ஜோதிகா? ரெடி...

[illegible]



## காதோடு சொல்லுகிறோம்

★ [illegible] நடிகையின் காட்டில் இப்போது வறட்சி. [illegible] பிரபல நடிகர்கள் சிலருக்கு பிடித்தமாக [illegible] பூச்சியமாம். அதனால் பிரபல தயாரிப்பாளர்கள் சிலருக்கு விருந்துபசாரம் நடக்கிறதாம். தயாரிப்பாளர்களுக்கு [illegible] என்ன?

★ [illegible] படம் [illegible] அதனால் புதிய படத்தயாரிப்பில் இறங்கியிருக்கிறார் [illegible] ஷாலினி [illegible] சாக்லேட் [illegible]

★ சித்திர நடிகைக்கும் (சித்தாரா அல்ல) [illegible] இயக்குநருக்கும் ஒரு 'இது' [illegible] சினி வட்டாரத்தில் பேச்சு படுகிறது. அந்த தயாரிப்பாளர் [illegible] சித்திர நடிகைக்கும் அதுதான் [illegible] இல்லை.

★ [illegible] நடிகைக்கும் [illegible] நடிகைக்கும் இடையே பொது விருந்தொன்றில் [illegible] 'ஜஸ்' நடிகை [illegible] இப்போதுதானே ஒரு [illegible] தொடங்கியிருக்கிறார்.

★ இசைராஜாவுக்கும் [illegible] செய்யும் [illegible] இசை [illegible] கவனிக்கிறாராம்.

★ [illegible] நடிகைகளை [illegible] இப்போது [illegible] முதலிடத்தில் இருப்பது [illegible] முதலிடத்தில் இருப்பது பிரிய நடிகை. போட்டியால் தயாரிப்பாளர்களுக்கு [illegible] இருக்காதா பின்னே.



## அன்றுபோல் இன்றும்

பட விநியோகஸ்தராக இருந்து தயாரிப்பாளராகியவர் அன்பாலயா பிரபாகரன். சமீபத்தில் வெற்றி அடைந்த மதுமதியை அடுத்து சுமார் ஐம்பது புதுமுகங்களை ஒரே படத்தில் அறிமுகப்படுத்த இருக்கிறார்.

ஒரு பஸ்வண்டிக்குள் கதை நடைபெறும் விதத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் பட்டணம் [illegible] பாண்டிச்சேரி என்றொரு படம் வெளிவந்தது.

அதேபோன்ற கதையோடு தான் புதிய படத்தை தயாரிக்கிறார் பிரபாகரன். படத்திற்கு 'கற்றுவா' என்று பெயரிட்டுள்ளார்கள்.

## மினி சினி

★ இயக்குநர் பாரதிராஜா தற்போது இயக்கிக் கொண்டிருக்கும் கிழக்குச் சீமையிலே படத்திற்கு அடுத்ததாக பிரபு, விஜயகாந்த், சத்தியராஜ் போன்றவர்கள் நடிக்கும் படங்களை இயக்கவுள்ளார்.

★ இந்து படத்தில் முக்கிய வேடமொன்றில் நடிக்கும் சரத்குமார் சொந்தக்குரலில் ஒரு பாடல் பாடுகிறார்.

★ [illegible]

★ செல்வா கதாநாயகனாக நடிக்க கங்கை அமரன் இயக்கும் படம் அத்தை மக ரத்தினமே. இந்தப் படத்தை நண்பர்கள் படத்தை இயக்கிய ஷோபா சந்திரசேகரின் தங்கை ஷீலா தயாரிக்கிறார்.

★ சுரேஷ்மேனன் அடுத்ததாகத் தயாரிக்கும் படமொன்றில் அரவிந்த் ஸ்வாமி கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

★ [illegible] இயக்குநராகிய [illegible] அடுத்ததாக புதுமுகங்களை வைத்து [illegible] காதல் கதையுள்ள படத்தை இயக்குகிறார்.

★ நெப்போலியன் மலையாளத்தில் நடித்த தேவாசுரம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பல மலையாளப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

★ [illegible]

★ நடிகை சித்ராவுக்கும் மாதங்கள் 7 படத்தின் இயக்குநர் [illegible]க்கும் விரைவில் திருமணம் நடைபெறவுள்ளது.

★ மலையாள நடிகர் ஜெயராம், விக்கிரமனின் கோகுலம் படத்தின் மூலம் தமிழுக்கு அறிமுகமானவர். விக்கிரமன் அடுத்ததாக இயக்கும் படத்திலும் கதாநாயகனாக ஜெயராமே நடிக்கிறார்.

## ராசியுள்ள வீடுதானோ?

[illegible]

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தர்மசீலன்

## சினிமா விமர்சனம்
விமர்சிப்பது - ரஜனிகாந்த்




அப்படி ஒரு போதும் இல்லை

Date: 25-7-1993

"'தர்மசீலன்' படம் பார்த்தேன். 'நிச்சா' எடுத்திருக்காங்க!

இன்ஸ்பெக்டர் இளம் ரத்தங்கள் விருந்தை புரிஞ்சிருக்காங்க!

தங்களோட வித்தையைக் காட்டியிருக்காங்க. பொழுதுபோக்கு ஜனரஞ்சக வெற்றிப் படத்துக்கு எது எது தேவை... அது எல்லாமே இருக்கே. படத்துலே! தாய்ப்பாசம், காதல், காவல் அதிகாரியின் கண்ணியம், வீரம், பழிக்குப்பழி வாங்கும் வேகம், சண்டை... உம்- எல்லாமே சமமான அளவுல படம். நெஞ்சில இடம் பிடிக்குமே...!

எழுந்து வர நேரத்துல- அந்த வில்லன் சலீம் கவுசின் நடிப்பு இருக்கே- அவருக்குத்தான் முதலிடம். முகத்திலேயே பழிவாங்கத் துடிக்கும் அந்த வெறி- சாத்தானின் கையான சலீம் 'நெஜமாவே 'தூள்' கிளப்பிட்டாங்க!

இடைவேளைக்குப் பின்னால், 'பிளாஷ்பேக்' வித்தியாசமான பிரபு அறிமுகம்... ஜெயில் வார்டன், அந்த கம்பீரம், காவம், நெனைச்சதை முடிக்கும் வைராக்கியம்... பிரபுவைப் பற்றி ஒரே வார்த்தை: "மினியேச்சர் நடிகர் திலகந்தான்..."

25 வருஷமா வீட்டுல பத்திரமா பாதுகாகற பொணத்துக்கு பிறந்தநாள் கொண்டாடறக்கணமாகவும், 'டைட்'- விக்ரம் தர்மா வெலவெலக்க வெச்சட்டாரு! அண்ணன்-தம்பிங்க மோகன்-நடராஜனுக்கு வாழ்த்து... வெற்றிக்குத்தான்!"

### திருப்திக்காக ஒரு சண்டை!

### ரஜனி போல கமலும்

ரஜனிகாந்த் நடித்த படங்களில் சில பகுதிகளில் திரையிடும் உரிமையைத் தனது ஊதியமாக பெறுவது வழக்கம். இப்போது கமலும் அவ்வாறு செய்ய ஆரம்பித்துள்ளார்.

### இந்தியிலும் யோகம்!

உள்ளே வெளியே படத்தை அடுத்து ஹிந்திப் படமொன்றில் நடித்துக் கொண்டிருக்கிறார் ஐஸ்வர்யா.

மலையாளத்தின் முன்னணி இயக்குநர்களில் ஒருவரான பிரியதர்ஷன் இயக்கும் இப்படத்தின் பெயர் கர்திஷ். இதில் கதாநாயகனாக ஜாக்கி ஷெராப் நடிக்கிறார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பாப்பா முரசு

## நாகம் தந்த மாணிக்கம்

ஓர் ஊரில் ஓர் ஏழை இருந்தான். அவன் பெயர் பாலு. வறுமைதான் அவனுக்குச் சொத்தாக இருந்தது. நான்கைந்து குழந்தைகளையும், நோயுற்ற மனைவியையும் காப்பாற்ற அவன் மிகவும் சிரமப்பட்டான். தன்னைப் போல தன் குழந்தைகளையும் வறுமையில் விடக்கூடாது என்று எண்ணி அவர்களைக் கஷ்டப்பட்டு படிக்க வைத்தான். அதற்காக அவன் ஓடியாடி பணம் சம்பாதிக்க வேண்டியிருந்தது.

பக்கத்து ஊரில் ஒரு வீட்டில் நடக்கும் விழாவிற்காக அவன் காட்டு வழியாக நடந்து கொண்டிருந்தான். அவன் வேக வேகமாக நடந்து கொண்டிருந்தான். அப்படிச் சொல் வதை விட அவன் ஓடிக்கொண்டிருந்தான் என்றே சொல்ல வேண்டும்.

அப்பொழுது காட்டோரப் பாதையிலிருந்த ஒரு பாம்புப் புற்றிலிருந்து வெளியே விளையாட பாம்புக்குட்டிகள் வந்தன. இஷ்டம் போல் அவை பாதையில் குறுக்கும் நெடுக்குமாகப் போய்க் குதித்து விளையாடிக் கொண்டிருந்தன.

வேகமாக பூமியில் கால்களை அழுந்தப் பதித்து ஓடிவந்த பாலு, அந்தப் பாம்புக்குட்டிகளை காலால் மிதித்து விட்டான். அவை நசுங்கித் துடிதுடித்துச் செத்தன. அவை இறந்து விட்டதைப் பார்த்து அரண்டு விட்டான் பாலு. தன் சின்னஞ்சிறிய குழந்தைகளைத் தானே காலால் மிதித்துக் கொன்றுவிட்டது போல் மனம் வருந்தி அவன் அழுதான்.

அப்பொழுது புற்றிலிருந்து ஒரு நாகபாம்பு வந்தது. அதன் தலையினுள் ஏதோ ஒன்று பிரகாசித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. தன் தலையைத் தூக்கி நிமிர்ந்து அப்படி இப்படிப் பார்த்தது. தன் குட்டிகள் இறந்து கிடப்பதையும் அங்கே நிற்கும் ஒருவன் காலில் இரத்தம் ஒட்டியிருப்பதையும் மாறி மாறிப் பார்த்தது. அவன் தான் தன் குட்டிகளைக் கொன்றுவிட்டான் என்பதை அறிந்து கொண்டது. அவனைக் கொல்ல 'புஸ்'சென்று சீறிப் பாய்ந்தது.

குட்டிகளைக் கொன்ற தன்னை நாகபாம்பு கொத்திக் கொல்லப் போகிறது என்பதை அறிந்து கொண்ட பாலு அதன் எதிரே நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான். வணங்கி "ஹே...... நாகேந்திரா!..... அறியாமல் நான் சின்னஞ்சிறிய உன் குட்டிகளைக் கொன்றுவிட்டேன். அறியாது செய்து விட்ட என்னை மன்னிப்பாயாக" என்று வேண்டினான்.

நாகபாம்போ, "உன்னை மன்னிக்க மாட்டேன். என் குட்டிகளைக் கொன்ற உன்னைக் கொன்றே தீருவேன்" என்று சொல்லியபடி சீற்றமுடன் அவன் மீது பாயத் தொடங்கியது.

"குழந்தைகளைப் பிரிந்த உன் துயரம் எனக்குப் புரிகிறது. ஹே, நாகேந்திரா.... எனக்கும் குழந்தைகள் இருக்கின்றன. குழந்தைகளின் அருமை எனக்குத் தெரியும். இன்னும் சில ஆண்டுகளில் என் குழந்தைகளின் படிப்பு பூர்த்தியாகி விடும். என் இலட்சியமும் கை கூடிவிடும். பிறகு நானே உன்னைத் தேடி வருவேன். உன் குட்டிகளைக் கொன்ற என்னைக் கொன்று உன் பழியைத் தீர்த்துக்கொள்" என்று கூறினான் பாலு.



அவன் பேச்சில் அவனது உயர்ந்த நோக்கும், உறுதியும் உண்மையும் இருப்பது நாகபாம்பிற்குத் தெரிந்தது.

"உன் உயர்ந்த இலட்சியத்துக்குத் தலை வணங்குகிறேன். உன் குழந்தைகள் எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்களாக, அறிவாளிகளாக விளங்க வேண்டுமானால் அவர்களுக்கு உன் உழைப்பும், உழைப்பு மூலம் கிடைக்கும் ஊதியமும் மிகவும் தேவை என்பதால் உன்னை இப்போது நான் கொல்லாமல் விடுகிறேன். நீ அவர்களது கல்வி முடிந்ததும் சொன்ன சொல்லைக் காப்பாற்ற என்னைத்தேடி வர வேண்டும். நான் உன்னைக் கொன்று பழியைத் தீர்த்துக் கொள்வேன்," என்றது.

அதைக் கேட்ட பாலு ஆனந்தம் கொண்டு, "நாகேந்திரா....உனக்கு நமஸ்காரம்...வாய்மையே மனிதனை உயர்த்தும்.... சொன்ன சொல்லை நான் தட்ட மாட்டேன். நானே உன்னைத் தேடி வந்து உன் புத்திர சோகத்துக்குப் பலியாவேன்," என்றான். பிறகு சில ஆண்டுகள் சென்றன.

பாலு திரும்பி வருவதாகச் சொன்ன கெடு அன்றுதான்.

நாகபாம்பு தன் புற்றை விட்டு வந்து தலையைத் தூக்கிக் காட்டுப் பாதையைப் பார்த்துக் கொண்டிருந்தது. அதற்கு இப்பொழுது மிகவும் வயதாகி விட்டதால் அதன் நீளமும், வளர்ச்சியும் குறைந்து சுருங்கிப் போய் இருந்தது. ஆனால் அதன் தலையில் உள்ள மாணிக்கம் முன்பைக் காட்டிலும் அதிக பிரகாசத்துடன் ஒளி வீசிக்கொண்டிருந்தது.

தன் குட்டிகள் இறந்த இடத்தைப் பார்த்து அழுது கொண்டிருந்தது அந்த நாகபாம்பு.

அப்பொழுது பாலு வெகு வேகமாகப் புற்று இருக்கும் இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் வயோதிபமாகி உடல் தளர்ந்து முன்னைவிட மிகவும் இளைத்திருந்தான். அவன் தன்னைக் கொல்லக் காத்திருக்கும் நாகத்தைப் பார்த்ததும் அதன் எதிரே சென்று கீழே விழுந்து வணங்கி எழுந்தான்.

"ஹே....... நாகேந்திரா.... சொன்ன சொல்லைக் காப்பாற்ற இதோ நான் வந்துவிட்டேன். என்னைக் கொன்று உன் பழியைத் தீர்த்துக் கொள்", என்று அதன் எதிரே தன் கையை நீட்டினான்.

நாகபாம்போ அவனைக் கொத்தவில்லை. மாறாக அவன் கையில் தன் பொக்கிஷமான மாணிக்கத்தை உமிழ்ந்து, "பாலு உன் வாக்கைக் காப்பாற்ற நீ ஓடோடி வந்து விட்டாய்.... உன்னைக் கொன்று உன் மனைவியை நிர்க்கதியாக்க நான் விரும்பவில்லை. உன் பிள்ளைகளும் கல்வி கற்று இருப்பார்கள். அவர்கள் நல்ல மேலான நிலையில் இருப்பதை நீ பார்த்துச் சந்தோசிக்க வேண்டும். அதுதான் நீ இவ்வளவு நாள் பாடுபட்டதற்குக் கிடைக்கும் பலன். இவைகளை நீ அனுபவிக்காது சாக நான் காரணமாக மாட்டேன். உன் நேர்மைக்கும், வாய்மைக்கும், சொன்ன சொல் தவறாமைக்கும் உன்னைப் பாராட்டி இந்த மாணிக்கத்தை உனக்குப் பரிசாக அளிக்கிறேன்", என்று சொல்லிவிட்டுப் புற்றினுள் சென்று மறைந்தது நாகபாம்பு.

---

## விடுகதைகளும் விடைகளும்

1. பாடல் இல்லா ஆட்டம். பணம் பறிக்கும் ஆட்டம். அது என்ன?
2. மஞ்சள் பைக்குள் மறைந்திருப்பான். மக்கள் பசியைத் தீர்த்து வைப்பான். அவன் யார்?
3. படிக்க உதவும் புத்தகமும் அல்ல, எழுத உதவும் பேனாவும் அல்ல. அது என்ன?
4. வீடில்லா நகரங்கள் நீரில்லா சமுத்திரங்கள். அது என்ன?
5. எத்தனை முறை வெட்டினாலும் வெட்டப்பட மாட்டாது. அது என்ன?

விடைகள்

1. சூதாட்டம்
2. நெல்
3. கரும்பலகை
4. தேசப்படம்
5. தண்ணீர்

த. கோகிலவதனி
ஸ்ரீ. சண்பகா. ம.வித்தியாலயம்,
ஈச்சிலம்பற்றை
மூதூர்.

1. கண்முன் இருப்பான். கண்ணுக்குத் தெரிய மாட்டான்.
2. தட்டும் தாளம் நின்றுவிட்டால் ஆட்டம் ஏதும் இருக்காது.
3. வித்தின்றி முளைக்கும். விடிந்ததும் குடை பிடிக்கும்.
4. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு. வயிறில்லை.
5. ஒரு இடம் நகராமல் ஓடிக் கொண்டே இருப்பான்.
6. விரிந்த தட்டில் நிறைந்த பலகாரம். விருந்துக்குத்தான் ஆள் இல்லை.

விடைகள்

1. கண்முடி
2. இதயம்
3. காளான்
4. அகப்பை
5. கடிகாரம்
6. வானம்-நட்சத்திரம்.

செல்வி.த. செல்வநாயகி
பாக்கிய மகளிர் மகா வித்தியாலயம்,
மாத்தளை.

## பெரிய முட்டை



நெருப்புக் கோழி முட்டை 1.4 கிலோ எடை இருக்கும். நெருப்புக் கோழி பறவையின் உடல் எடை 100 கிலோ. அதன் உடல் எடை அளவில் முட்டையின் எடை 1.4 சதவீதம்தான். நியூசிலாந்தில் உள்ள கிவி பறவைகளின் முட்டை 0.5 கிலோ எடைதான் இருக்கும். ஆனால் கிவி பறவைகளின் உடல் எடையில் 20 சதவீதம் முட்டையின் எடை.

## எந்த வரி?

"இரண்டு வரிகள்"
ஆண்டுக்கு இரண்டு வரி.
அரசு போடாத வரி
மக்கள் செலுத்தாத வரி
மதியால் சொல்லுவாய் நீ
அது என்ன வரி?

ஜனவரி. பெப்ரவரி.

செல்வன்.வாசுதேவன் ரட்ணம்
ஆண்டு-6.ஏ
நாவலப்பிட்டி.

## புனை பெயருக்கு உரித்தான நாடுகள்

| | | |
|---|---|---|
| ஈடனின் தோட்டம் | - | இலங்கை |
| ஆசியாவின் நோயாளி | - | பர்மா |
| ஐரோப்பாவின் தொட்டில் | - | சுவிற்சலாந்து |
| நள்ளிரவுச் சூரியநாடு | - | நோர்வே |
| உலகத்தின் கூரை | - | திபெத் |
| சூரிய உதயநாடு | - | ஜப்பான் |
| கங்காருவின் நாடு | - | அவுஸ்திரேலியா |
| உலகின் சர்க்கரைக்கிண்ணம் | - | கியூபா |
| பரிசுத்த பூமி | - | பாலஸ்தீனம் |
| நைல் நதியின் கொடை | - | எகிப்து |

செல்வன்.ரதீஸ்கிஷான் சதீஸ்குமார்
திருகோணமலை.

## எது வேண்டும்?

படித்ததில் பண்பு வேண்டும்.
பாடத்தில் பழக்கவழக்கம் வேண்டும்.
அறிவினில் அடக்கம் வேண்டும்.
அழகினில் அமைதி வேண்டும்.
நாணமதில் நல்லொழுக்கம் வேண்டும்.
நாவினில் இனிமை வேண்டும்.
சொல்லிலே சுவை வேண்டும்.
பொருளிலே புதுமை வேண்டும்.
வாழ்வுக்கு வசதி வேண்டும்.
வசதிக்கு நல்வழி வேண்டும்.
நல்வழிக்கு இறைவன் அருள் வேண்டும்.
அவன் அருள் பெற இரு கரம் தொழ வேண்டும்.

தொகுப்பு:-செல்வி.சி.வாணிஸ்ரீ
கம்பளை.

## அலி (றலி)யின் அமுத வாக்குகள்

இஸ்லாமிய ஆட்சியின் நான்காம் கலீபரசராக இருந்த அலி (றலி) அவர்கள் உயிர் பிரிவதற்கு சற்று நேரத்துக்கு முன்பு தன் அருமைப் புதல்வன் ஹசன் அவர்களை நோக்கி "மகனே எட்டுக்காரியங்களை என்னிடமிருந்து பாடமாக்கிக் கொள்" என்று கூறிவிட்டு கீழ் கண்டவாறு கூறினார்கள்:

1. செல்வத்தில் மிகப் பெருஞ் செல்வம் புத்தியாகும்.
2. வறுமையில் மிகப் பெரிய வறுமை மடமையாகும்.
3. வெருட்சியில் மிகப் பெரும் வெருட்சி தற்பெருமையாகும்.
4. பெருந்தன்மையில் மிகவும் பெருந்தன்மை நற்குணமாகும்.
5. நீ மடையனுடன் நட்புறவு வையாதே. ஏனெனில் அவன் உனக்கு நன்மை செய்ய நாடி நன்மை என்று நினைத்துச் செய்வது உனக்கு தீமையாகவே இருக்கும்.
6. நீ பொய்யனுடன் நட்புறவு வையாதே. ஏனெனில் அவன் தூரமானதை சமீபமாக்குவான். சமீபமானதை தூரமாக்குவான்.
7. நீ உலோபியுடன் நட்புறவு வையாதே. ஏனென்னில் மிக மிக தேவைப்படக்கூடிய சந்தர்ப்பத்தில் உன்னை விட்டுத் தூரப்போய்விடுவான்.
8. நீ கெட்டவனுடன் நட்புறவு வையாதே. அவன் உன்னை அற்பவிலைக்கு விற்று விடுவான்.

பாதிமா அருஸியா
கு/அல்/அஸ்ரக் மு.வி.
தல்கஸ்பிடிய.

## அறிந்து கொள்ள சில

1. உலகினிலே உள்ள மொழிகளின் மொத்த எண்ணிக்கை- 2796
2. இரண்டாவது உலக மகாயுத்தத்தில் அழிக்கப்பட்ட நகரங்கள்- ஹிரோஷிமா, நாகசாகி.
3. கப்பலில் உலகை முதலில் வலம் வந்தவர் யார்? - மகலன்.
4. முதன்முதலில் எவரெஸ்ட் சிகரத்தில் இரண்டுமுறை ஏறியவர்- ரவரங்கோம்பு
5. உலகிலேயே மிகப்பெரிய மலர் எது? "அமார்போ பாவங்" என்ற மலர்.
6. உலகினிலே மிகக் குறைவான எழுத்துக்கள் உள்ள மொழி எது? - ஹாவாய் மொழி.
7. சந்திர மண்டலத்தில் முதலில் காலடி வைத்தவர்? - நீல் ஆம்ஸ்ட் ரோங்.
8. சாரணர் இயத்தை உலகிற்கு முதலில் அறிமுகம் செய்தவர்- பேடன் பவுல் பிரபு
9. உலகினிலே மிகப் பெரிய தீவு- கிரீன்லாந்து
10. ஒலிம்பிக்கில் தங்க பதக்கம் பரிசாகப் பெற்ற முதல் பெண்- அல்வின் கிராஸில்.
11. ஒலிம்பிக் முதலாவதாக எத்தனையாம் ஆண்டு எங்கு நடந்தது? 1896-ல் ஏதென்ஸ் நகரில்.
12. முதல் ஆசிய விளையாட்டுப் போட்டி நடந்தது எங்கு? -புதுடில்லி (நியூடெல்கி)
13. பெண்கள் முதலில் ஒலிம்பிக் போட்டியில் சேர்ந்தது? 1904-ல்.
14. மரதன் ஓட்டத்தின் தூரம் எவ்வளவு? 42.19 கி.மீ.
15. கிரிக்கெட்டில் 1992ம் ஆண்டு உலக கிண்ணத்தைப் பெற்ற அணி? - பாகிஸ்தான் அணி.
16. 1992ல் ஒலிம்பிக் எந்த இடத்தில் நடைபெற்றது? - ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா.

ம. ஹரிராஜேந்திரன்
இந்துக்கல்லூரி, கொழும்பு-4.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

குட்டிக் கதை

# நெக்கிலஸ்

-திருமலை சுந்தா-



"மிக அழகாக இருக்கின்றதே...... மாப்பிள்ளையா இதை உனக்கு வாங்கித் தந்தார்....."

வதனியின் தாய் கேட்டாள். பக்கத்தில் நின்ற ரமேஸ் தன் புது மனைவியின் முகத்தைப் பார்த்தான். வதனி தன் முகத்தை நிலத்தில் பதித்துக்கொண்டாள்.

"என்ன வதனி.... மாமி கேட்கிறா உண்மையைச் சொல் லன்..." ரமேஸ் தன் புது மனைவியை தூண்டினான்.

வதனிக்கு ரமேஸ் கேட்டது அடிமேல் அடி அடிப்பது போலிருந்தது......அன்று காலை ரமேஸ்; வதனியிடம் அந்த நெக்கிலஸ் பற்றி கேட்ட போது 'இது என் சீதன நகைங்க. டடியும், மம்மியும் கொழும்புக்கு போன போது எனக்காக வாங்கி வந்ததுங்க' எனச் சொல்லி இருந்தாள்.

ஆனால்...இப்போது...தன் தாயே குட்டை உடைத்த போது தன் பொய் வெளிவந்து விட்டதே என வதனி பதட்டப்பட்டாள்.

அதுவும் முதன் முதலாக கணவனுக்கு சொல்லிய பொய் அரங்கத்துக்கு வந்து தன்னையே யார் என்று இனங் காட்டப் போகின்றதே என வதனி நினைத்துப் பார்க்க... அவளால்... மயக்கமான சூழலிலேயே வதனி நின்றாள்.

"வதனி.....மாமி கேட்கிறாங்க... காதில விழவில்லையா? ......" இரண்டாம் முறையும் ரமேஸ் கேட்டுவிட்டான். என்ன பதிலைச் சொல்லலாம் என யோசிக்க வதனியால் முடியவில்லை. பொய்யைச் சொன்னால் மேலும் பொய்கள் சொல்ல வேண்டி வருமே என்ற பயமும், உண்மையைச் சொன்னால் தான் நடுத் தெருவில் தனி மரமாய் நிற்க வேண்டி வருமே என்ற பயமும் அவளை வாட்டி வாட்டி எடுத்தன.

தான் அந்த தனியார் கொம்பனியில் புதிதாகச் சேர்ந்த போது...அதன் இயக்குநர்களில் ஒருவரான...... வதனியால் மேலும் அந்த அசிங்கங்களை நினைக்க முடியவில்லை.

"நான் கெட்டவள். நான் கற்பிழந்தவள். என் பதவியை காப்பாற்றிக் கொள்ள... ஆடம்பர மான சொகுசு வாழ்வுக்காக.....

ஏற்பட்ட தேக சுகத்திற்காக.....

'அந்த இயக்குநர் எனக்கு தந்த பரிசுதான் இந்த நெக்கிலஸ்' என எப்படிச் சொல்வது?

'அதுவும் மணம் முடித்த ஐந்தாம் நாளில்.....

'வேலைக்கு போ....உழைத்து வா....என என்னை விரட்டு விரட்டு என விரட்டிய டடி.....மம்மிக்கு என் அந்தரங்கங்கள்.....எப்படி தெரியும்? இதை எல்லாம் எப்படி-வாய் கூசாமல் சொல்ல முடியுமா?'

வதனி வாயே திறக்கவில்லை. நடப்பது நடக்கட்டும் என மௌனமாக நின்றாள்.

"வதனி நீ எனக்கு சொன்னது பொய். இது உனது சீதனம் என்றாய். உன் அம்மா நான் பரிசாக தந்தது என்கிறா? இதில பெரிய உண்மை ஒன்று மறைஞ்சு இருக்கு....."

'வதனி சொன்ன பொய்...' அவளின் தாய்க்கு விளங்கியது. அப்படியானால் இந்த அழகான நெக்கிலஸ்.....தாய் மூளையைப் போட்டு குழப்பினாள். தன் வாயால் தன் மகளை பெரிய சிக்கலுக்குள் மாட்டி விட்டோமே என்ற பயமும் தொற்றத் தொடங்கியது.

"வதனி...அப்ப...உன் போய் பிரண்ட்ஸ் யாராவது இந்த நெக்கிலசை...." ரமேஸ் நிறுத்தி விட்டு வதனியைப் பார்த்தான்.

தான் இப்படிக் கேட்கும் போது வதனி உண்மையானவள் என்றால் துள்ளிப் பாய்ந்து கத்தி குரல் கொடுப்பாள் என்றே ரமேஸ் எதிர்பார்த்துக் கேட்டான்.

ஆனால் வதனி துள்ளிப் பாயவும் இல்லை- கத்தி குரல் எழுப்பவும் இல்லை.

அப்படியானால் வதனி...!

ரமேஸ் தன் சந்தேக பார்வையினை வதனியிடம் அள்ளித் தெளித்தான்.

"வதனி...இந்த உண்மை எனக்கு தெரிய வேண்டும். அது வரை... நான் உன்னோட..."

"என்ன தம்பி... என்ன....." வதனியின் தாய் மாப்பிள்ளை ரமேசிடம் கத்தி குளறினாள்.

வதனி தன் தாயை நிமிர்ந்து பார்த்தாள்.

தாய்க்கு முன்னால்...தன் புதிய கணவனுக்கு முன்னால்.... ஒழிந்திருக்கும் உண்மைகளை சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டதே என நினைத்து....

மள...மள...வென்று தனது அறையினை நோக்கி நடந்தாள். அரை வினாடியில்.....

அவள் தன் சூட்கேசோடு வந்து நின்றாள்.

தன் கணவனையும்......தன் தாயையும் பார்த்து புன்கை பூத்தாள்.

அவளிடம்..... முடிவொன்று ஏற்பட்டு விட்டதா?

வதனி....அந்த வீட்டின் வெளி வாசலை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

அவளால் இனி பொய்சொல்ல முடியாது.

ஒரு உண்மையை மறைக்க.... அவளால் இனி பொய் சொல்லவே முடியாது. காரணம்..... அம்மி மிதித்து..... அருந்ததி பார்த்து... சத்திய வார்த்தைகள்... சே... அவளால்......

உண்மையையும் சொல்ல முடியாது.....அதை மறைக்க பொய்களும் சொல்ல முடியாது.

அந்த நெக்கிலஸ்...இன்னும் அவள் கழுத்தில்.... இருந்தது. சிரிக்க.....சிரிக்க....அவள்.... தெருவில் நடக்கத் தொடங்கினாள்.

(கற்பனையா?)



"ஆமாம்.. கிடைக்கற ரெண்டு பக்கெட் தண்ணியிலே குடும்பத்திலே ஆறுபேரும் குளிக்கணும்ன்னா!"

-கார்த்திக்

நிமிடக் கதை

# நானும்.... அவளும்....

சேத்தூர் எஸ். பகீரதி
மட்டுநகர்.



இன்று போயா விடுமுறையாதலால் அண்மையிலுள்ள அந்த அம்மன் கோயிலை நோக்கி நடக்கிறேன். அம்மாவும் தங்கை உமாவும் எனக்கு முன்பே சென்றுவிட்டார்கள். எனக்கு முன் தேவதையென ஒரு பெண் சென்று கொண்டிருந்தாள். கூர்ந்து கவனித்தேன்." அட இது போன வாரம் நம்ம ஒஃபீசுக்கு புதுசா வந்த டைப்பிஸ்ட் பைரவி"

என நினைத்தவாறு அவளது அழகை ரசித்த வண்ணம் சென்று கொண்டிருந்தேன். அவளும் கோயிலுக்குப் போவது போலிருந்தது.

லாவகமான உடல்வாகு, மதி கூட அவளது அழகிய முகத்துக்கு ஒப்பாகாது. யாரும் அவளைப் பார்த்தால் அவள் மீது நிலைத்திருக்கும் தன் பார்வையை இலேசில் எடுக்கமாட்டார்கள். அவள் அத்தகைய தெய்வீகமான அழகுடையவள். எனினும் அவள் கர்வம் அடைந்ததில்லை. ஒஃபீசில் யாருடனும் பழகாத அவள் என்னுடன் மட்டும் "மனோ...மனோ" என மிக நெருக்கமாகப் பழகுவது கண்டு சக ஊழியர்கள் ஆச்சரியப்பட்டதுமுண்டு. எனக்கு அதில் பெருமைதான்.

வேகமாக நடந்தால் அவளைப் பிடித்து விடலாம் என நினைத்தவாறு நடக்கிறேன். அவளுக்கு முன்னே சென்று "ஹாய் பைரவி" என்கிறேன். அவளது விழிகள் படபடப்புடன் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. மெதுவாக "ஹாய் மனோ" என்றாள். "அப்பப்பா எப்படி அழகான கண்கள்" என அவளது கன்னத்தைக் கிள்ளினேன். நாணத்துடன் "சீ" என்றவள் "ஆமா எங்கே... இந்தப் பக்கம்?" என்றாள். "கோயிலுக்குத் தான். ஆமா நீங்க?" என்று நான் இழுக்க "நானும் கோயிலுக்குத்தான்" என்கிறாள் அவள். பூஜை ஆரம்பமாவதற்கு முன் ஒலித்த மணியோசையைக் கேட்ட பைரவி என் கரங்களை அன்புடன் பற்றியவாறு "சீக்கிரம் வாங்க" என இழுக்கிறாள். மனோகரி ஆகிய நான் கோயிலுக்குள் பைரவியுடன் நுழைகின்றேன்!

## இந்த வாரம் உங்கள் பலன்

(15.08.93 முதல் 21.8.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மறைமுக எதிர்ப்பு, வீண் மனக்குழப்பம். | காலை 9 மணி |
| திங்கள்- | தனவிருத்தி, பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | நடைக்கஷ்டம், செலவு மிகுதி. | காலை 11 மணி |
| புதன்- | புதிய திட்டங்கள், முயற்சி மேன்மை. | காலை 10 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், கடன் தொல்லை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | அந்நியரால் உதவி, மன ஆறுதல். | பி.ப. 4 மணி |
| சனி- | தூர இடப் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தேகசுகம் பாதிப்பு, வெளியிடப் பிரயாணம். | காலை 7 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, பணப் புழக்கம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | காரியத் தடை, வெளியார் தொல்லை. | காலை 10 மணி |
| புதன்- | தேகசுகம் நலன், திடீர் செலவினம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- | உறவினர் வருகை, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | பெண்களால் தொல்லை, வீண் பயம். | காலை 10 மணி |
| சனி- | நடைக் கஷ்டம், பொருள் விரயம். | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தெய்வ தரிசனம், பெரியோர் சகவாசம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | காரியங்களில் வெற்றி, புதிய முயறச்சி | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உறவினரால் உதவி, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| புதன்- | எடுத்த காரியம் அனுகூலம், புகழ் கீர்த்தி | காலை. 11 மணி |
| வியாழன்- | அன்னியரால் தொல்லை, வீண் பகை. | காலை 9 மணி |
| வெள்ளி- | பாராட்டு, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| சனி- | செலவு கட்டுக்கடங்கல், தேக சுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புகழ், கீர்த்தி, பண வருவாய். | பி.ப 4 மணி |
| திங்கள்- | உயர்ச்சி, முன்னேற்ற வாழ்க்கை. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, கடவுள் நம்பிக்கை. | காலை 9 மணி |
| புதன்- | காணிபூமி இலாபம், வெளியிடத் தொடர்பால் நன்மை. | காலை 11 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், புதிய வாழ்வு மலரும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | எடுத்த காரியச் சித்தி, மகிழ்வு. | காலை 11 மணி |
| சனி- | தனவிருத்தி, இனசன நன்மை. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொல்லைகள் கூடுதல், செலவு அதிகம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, இனசன விரோதம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | தனதானிய லாபம், செய்தொழில் தடை. | காலை 11 மணி |
| புதன்- | மன நிம்மதி, காரியசித்தி. | காலை 9 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, பணச் செலவு. | காலை 11 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கல், வெளியாரால் நன்மை. | காலை 10 மணி |
| சனி- | பலவித பேறு, பணப் புழக்கம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன், புதன் |
| கன்னி | - வியாழன், செவ்வாய் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| மிதுனம் | - வெள்ளி |

சந்திரன்- கர்க்கடகம், சிம்மம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

17.8.93ல் சிம்ம இராசியில் சூரியன்-புதன்.

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூசம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | எண்ணங்கள் கைகூடும், உறவினரால் தொல்லை. | காலை 9 மணி |
| திங்கள்- | உயர்ச்சி, கீர்த்தி மேன்மை | காலை 11 மணி |
| செவ்வாய்- | பகை மறைதல், நண்பர்களால் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- | பாராட்டு, கௌரவம், புகழ். | காலை 8 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், குடும்ப பிணக்கு | காலை 11 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, கஷ்டநிலை நீங்கல். | காலை 10 மணி |
| சனி- | பணவருவாய், பகட்டான வாழ்க்கை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள் - திங்கள் அதிஷ்ட இலக்கம்-9

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அன்னியர் சகவாசம், புதிய முயற்ச்சி. | காலை 10 மணி |
| திங்கள்- | தூரத்து இடப் பயணம், அகால போசனம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | நடைக் கஷ்டம், பலவித யோசனை | காலை 11 மணி |
| புதன்- | திடீர்ச் செலவு, பண்க்கஷ்டம். | பகல் 12 மணி |
| வியாழன்- | முதியோர் உதவி, இனசனக் கொண்டாட்டம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- | கடன் பயம், காரிய சித்தி. | காலை 10 மணி |
| சனி- | பலவித எதிர்பார்ப்பு, கவலை. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியத்தடை, பணவிரயம். | காலை 9 மணி |
| திங்கள்- | மனக்குழப்பம், வீணான சந்தேகம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | அன்னியர் உதவி, பண நெருக்கடி. | பகல் 1 மணி |
| புதன்- | அகால போசனம், குடும்பப் பிணக்கு. | பகல் 12 மணி |
| வியாழன்- | தூரஇடப் பிரயாணம், கவனக்குறைவினால் தொல்லை. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- | புதியமுயற்சி, அலைச்சல். | காலை 10 மணி |
| சனி- | பெரியோர் சகவாசம், மன மகிழ்ச்சி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - புதன் அதிஷ்ட இலக்கம்-6

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | சுபகாரிய நன்மை, மனச்சந்தோஷம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | முயற்ச்சி பலிதம், கௌரவம். | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | ஆடம்பரச் செலவு, பிள்ளைகளால் மகிழ்ச்சி | பி.ப 1 மணி |
| புதன்- | தேகசுகம் பாதிப்பு, கவலை. | காலை 10 மணி |
| வியாழன்- | பெரியோர் சகவாசம், நன்மை. | காலை 11 மணி |
| வெள்ளி- | தெய்வ அனுகூலம், பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- | செலவு, உறவினரால் தொல்லை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - சனி, அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் வருகை, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, கவலைகள் மறைவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | கல்வி மேன்மை, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், வீண் செலவு. | பகல் 1 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, கவலை. | காலை 11 மணி |
| வெள்ளி- | காரியத்தடை, பணக்கவலை. | காலை 9 மணி |
| சனி- | வீண் குறை கேட்டல், திடீர் செலவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய் சித்தி, கடின உழைப்பு. | பி.ப 4 மணி |
| திங்கள்- | மன மகிழ்ச்சி, உல்லாச வாழ்க்கை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | கல்வி மேன்மை, முயற்சி உயர்வு. | பகல் 12 மணி |
| புதன்- | பணத்தட்டுப்பாடு, வெளியிட தொல்லை. | காலை 8 மணி |
| வியாழன்- | எடுத்த காரியம் தடை, பணவரவு. | பகல் 2 மணி |
| வெள்ளி- | வீண் முயற்ச்சி, குடும்பத்தில் சிக்கல். | காலை 9 மணி |
| சனி- | கண்டத்திற்கு மேற்பட்ட நோய், கவலை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனதானிய லாபம், துயர்கள் நீங்கல். | காலை 10 மணி |
| திங்கள்- | பண வரவு, காரியசித்தி. | காலை 11 மணி |
| செவ்வாய்- | தடுமாற்றம், வீண் மனக்குழப்பம். | காலை 7 மணி |
| புதன்- | கெட்ட எண்ணம், பொருள் விரயம். | காலை 9 மணி |
| வியாழன்- | அதிகார விருத்தி, ஆடம்பரச் செலவு. | பகல் 1 மணி |
| வெள்ளி- | உள்ளத் தெளிவு, மன மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| சனி- | உறவினர் உதவி, வெளியிடப் பிரயாணம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

## புத்திக்கு வேலை கொடுத்து புதிய கண்டுபிடிப்புக்கள் கத்திக்குரிய வேலை சுலபமாகி விட்டது!



கணனி எனப்படும் கொம்பியூட்டர் உலகில் எந்தக் காரியத்தையும் விட்டு வைக்கவில்லை. மனிதனால் உருவாக்கப் பட்ட அந்த இயந்திர மூளை மனிதனையே வென்று வருகிறது. கொம்பியூட்டர் மருத்துவத்துறையில் அரும்பெரும் சாதனைகளை நிலை நாட்டியிருக்கிறது. இதன் செயற்குரிய பணிகளில் மற்று மொன்று:

மனித உடலுக்குள் எத்தகைய நோய் எங்கே ஏற்பட்டுள்ளது என்பதை 'ஸ்கானிங்' முறை காட்டி விடுகிறது. இதுவும் ஒரு வகை கொம்பியூட்டர் துணை கொண்ட பணிதான். இதில் இன்னுமொரு படி மேலாக பிறிதொரு பணியை சுப்பர் கொம்பியூட்டர் ஒன்று ஏற்றுள்ளது. உடலுறுப்புகளின் தன்மையை முப்பரிமாண வடிவில் இந்தச் சாதனம் காட்டிவிடுகிறது. இதனால் சத்திர சிகிச்சை நிபுணர்கள் உடலைக்கீறியபின் தான் எவ்வாறு சிகிச்சையைத் தொடங்க வேண்டுமென்பதில்லை. குறிப்பிட்ட பகுதியை கொம்பியூட்டர் முப்பரிமாண வடிவில் காட்டி விடுகிறது. இதனால் தங்கள் கத்தியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை டாக்டர்கள் வழமையாக 12 மணி நேரம் நடைபெறும் சத்திர சிகிச்சை ஆக 4 மணி நேரத்தில் பூரணமாக முடிவடைந்து விடுகிறது.

"முப்பரிமாண வடிவில் கொம்பியூட்டர் திரை மனித மண்டை ஓட்டையும் மூளை முதலான உறுப்புகளையும் காட்டுகிறது. மண்டையிலுள்ள பாதிப்பு எத்தகையது என்பதை திரையில் கண்டால், அறுவை சிகிச்சைக்கான கத்தியைப் பயன்படுத்தும் முறையினைச் சுலபமாகக் கண்டு முன்னதாகவே கண்டுகொள்ளலாம்" என்கிறார் தம்பாவிலுள்ள சென். ஜோசப் மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் முதாஸ் ஹாபல். அவருடன் படத்தில் தோன்றும் குழந்தையும் ஒரு நோயாளி தான்.

## சளி சிந்தினான் சிறுவன்! பிய்த்துக் கொண்டு வந்தது விழி!!



தாரன் பிளீஸ் என்ற சிறுவனுக்கு மூக்கால் சளி ஓடிக் கொண்டிருந்தது. பலமாக மூக்கைச் சிந்தினான். சளி வரவில்லை. அவனுடைய கண்ணொன்று வெளியே பிதுக்கிக் கொண்டு வந்துவிட்டது. நரம்புகளின் உதவியுடன் இமைகளுக்கூடாக வெளியேறிக் கண் தொங்கியது. மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி நகர மருத்துவ மனைக்கு 11 வயதான அந்தப் பையன் கொண்டு வரப்பட்ட போது அவனுடைய கண் குழியிலிருந்து வெளியே இரத்த நாளங்களினதும் தசைகளினதும் பிடியில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்ததைக் கண்டு மருத்துவர்கள் அதிசயப்பட்டனர். தனது மூக்கைச் சிந்தும் போது சிறுவன் கீழே விழுந்துவிட்டான். அதே அதிர்ச்சியில் அவனுடைய ஒரு விரல் மூக்கினுள் ஆழமாகப் புகுந்து கொண்டது. இதனால் அவனுடைய கண் வெளி வந்து விட்டது என்று சிறுவனின் தாயர் கூறியதாக சிட்னியிலுள்ள மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் டாக்டர் றெஜினோல்ட் பா செட்டர், 'ஆனல்ஸ் ஒஃப் மெடிசின்' என்ற சஞ்சிகையில் எழுதியிருக்கும் கட்டுரையில் கூறியிருக்கிறார்.

"அந்தச் சிறுவனை நான் முதலில் பார்த்த போது கண்ணால் இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. வலி பொறுக்காமல் கத்திக் கொண்டிருந்தான். அதிஷ்டவசமாக அவனுடைய கண்ணை உரிய இடத்தில் பொருத்தி சிகிச்சையை மேற் கொண்டோம். அதனை இயக்க வைத்து பூரணமாக அவன் கண் பார்வை பெற்று விட்டான் என்று அக்கட்டுரையில் டாக்டர் எழுதியுள்ளார்.

1992டிசம்பரில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கண் சத்திரசிகிச்சை முடிந்த பின்னரும் பல மாதங்கள் வரை கட்டவிழ்க்கப்படாமல் தாரன் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தான். இப்பொழுது பரிபூரணமான பார்வையுடன் தாரன் தனது படிப்பைத் தொடர்கிறான் என்று டாக்டர் குறிப்பிட்டுள்ளார். தனது கட்டுரையில் தொடர்ந்து, "தங்கள் விரல்களைப் பயன்படுத்தி மூக்குச் சிந்துவது அபாயமானது. ஒவ்வொருவரும் இதற்கு கைக்குட்டையைப் பயன்படுத்துவது நல்லது" என்று எச்சரித்துள்ளார்.

## பலப்பல ரகத்தில் தலைவலி உண்டு விடுபட்டுக்கொள்ள இதோ சில வழிகள்

தலைவலி என்றதுமே ஒரு மாத்திரை போடப்போய் விடுகிறீர்கள் அல்லவா? அது தப்பு.

தலைவலிகளில் பலரகம் உண்டு. உங்களுக்கு வருவது எந்தத் தலைவலி என்று அறிந்துசிகிச்சை பெறுவதே நல்லது.

மருத்துவ நிபுணர்கள் தலைவலியின் பல வகைகளைக் கண்டறிந்து இதற்கு இன்ன சிகிச்சை என்று கூறியிருக்கிறார்கள். அது பற்றி கொஞ்சம் அறிந்து கொள்ளலாம்.

பசித் தலைவலி- அநேகமாக எல்லோருக்கும் வரும். சாப்பாட்டில் அக்கறையே எடுத்துக் கொள்ளாதவர்களையும் பிடித்துக் கொள்ளும்.

ஒரு வேளைச் சாப்பாட்டை மிஸ் பண்ணிவிட்டாலும் தேடி வந்துவிடும். (நல்ல அக்கறை?) இதற்கு நிவாரணம் மருந்தில் இல்லை. சாப்பிட்டு விட்டு மீண்டும் தூங்கினால் போதும். ஓடிப் போய்விடும்.

தேநீர் அருந்துபவர்கள் குறித்த நேரத்தில் அதை அருந்தாவிட்டாலும் இது வரும். உடனே ஒரு தேநீரை உள்ளே அனுப்ப அது மறைந்துவிடும்.

மாதவிலக்குத் தலைவலி: இதுவும் அந்தச் சமயத்தில் ஏற்படும் ஹார்மோன் மாறுதல்களினால் ஏற்படும் ஒன்றுதான். ஓய்வாக இருப்பதே இதனை விரட்ட உபயோகமான வழி.

காதல் தலைவலி: சில பேருக்கு சுகத்தோடு சோகமும் சேர்ந்தே இருக்கும். சிலருக்கு ஈடுபடும் ஒவ்வொரு சமயமும் இந்தத் தலைவலி வரும். அத்தகைய சமயத்தில் இரத்த அழுத்தம் கூடுவதனால் அப்படி ஏற்படலாம். பதட்டத்தைத் தவிர்ப்பதே இதற்கு மருந்து.

தலைவலி வந்தால்...

தலையை மெதுவாகப் பக்கவாட்டில் அங்கும் இங்கும் அசைத்து அரைவட்டம் போடுங்கள். தோளைக் குலுக்கித் தளர்த்துங்கள். மெல்ல - ஆனால் ஆழமாக மூச்சு இழுத்து விடுங்கள்.மூச்சை வெளியே விடும்போது தலைவலியும் போவதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். வேகமாக நடவுங்கள். மூளைக்குப் போகும் பிராணவாயுவின் அளவு அதிகரிக்கும்போது தலைவலியின் பிடியில் இருந்து கொஞ்சம் விடுபட முடியும்.

# தேன் கிண்ணம்

### நாங்கள் ஊரில் இல்லை!

கனவுகள்
கரிக்கோடுகளானதால்
நாங்கள்
கண்ணீர்
சிந்துவதை
நிறுத்திக்
கொண்டோம்.

இப்போது
எங்களுக்கு
அழுகை
அலுத்துப்போனது.....
அதனால்!
சிரிப்பது பற்றி
சிந்திக்கின்றோம்.

எங்களின்
எதிர்காலம்
எரிந்து போனதால்
நிலவு உதித்த
இரவுகள் கூட.....
இன்னும் எங்களுக்கு,
இருட்டாய்த்தான்
இருக்கின்றன.

பசுமைகள்
பாழடைந்த
நிலையில்
எங்களூர்
எங்கோ
தொலைவில்
தொய்ந்து
கிடக்கிறது.....

நாங்களிங்கு
நாளையை வெறுத்து,
நலிந்து போன
சோமாலியராய்
சோகங்களை
சுவைத்துக்
கொண்டிருக்கின்றோம்.....

எங்களின்
எண்ணங்களெல்லாம்
ஏமாற்றங்களானதால்
எழுத்தில் வடிக்க
கவிதை ஒன்றே
கை கொடுக்கிறது.....

இத்தனைக்கும்
நாங்கள்
பிறந்த ஊரை
பிரிந்து விட்டோம்.

இப்போது
அழைப்புக்கு
எளிதான
அகதிப்பட்டம்
பெற்று
சொந்தங்கள்
மறந்த
"சுக" விசாரிப்புகளாய்......
நாங்களின்னும்
சொந்த ஊரில்
இல்லை......!

ஆலம்குளத்தூர்
ரோஷான் ஏ.ஜிப்ரி.

### நிறுத்துவோம்

சோதரா?
ஆயிரம் குங்குமங்களை
பறித்து
ஒரு செங்கம்பளம்
செய்யத்தான்
வேண்டுமா?

நாளைய நம் சந்ததிகள்
நெல் விளைச்சலை
வயல்களிலே செய்யட்டும்!

நமது மயானத்தில் வேண்டாம்!
நீளும்
இந்த துப்பாக்கி நாகரிகத்தை
நிறுத்துவோம்!
தேசத்தை
மயானமாக்காமல்
காப்போம்!

எம்.எச்.எம். ஜவ்பர்
டிக்கோயா.

### கலியுக காலம்!

உம்மா....! உம்மா....!
நேற்று இரவு...
நான் ஒரு கனவு கண்டேன்
இந்த உலகத்தை-
தொட்டு பார்க்கிற தைரியம்
எரிந்து கொண்டிருக்கிற
எங்கள்
பூமியின் மேலே
மல்லிகை பறிக்க...
வானம் பொழியவில்லை?
அந்த நிலவு கூடவில்லை?
இறப்பி [illegible]
ஆசிர்வதிக்கப்பட்ட மனிதங்கள்
இளமைக்காலப் பொழுதில்
சல்லாபிப்பதைப் போல
உறவுகளை தொட்டுப்பார்த்து
சுட்டுப் போட்டார்கள்
கடந்ததையெண்ணி.
பிரியங்கள் புளித்துப்போனவை-
நேசமானவை
பிரிவுகள்...பிளவுகள்
வேரறுக்கின்ற கனல் பிழம்புகள்...!!
உயிர்க் கூடு
ஒடிந்து போன நிலையில்.....
ஆனாலும்
கல்லறை காணாமல்,
போனது
நல்ல வேளை....!
இதனைப் பிரித்தறிய
இப்போது
உள்ளம் இருக்கும்....
நினைவுகள்
என் நித்திரையை கடன் வாங்கி
காலம் கரையும்
கண்ணீரில்
நான் இங்கே....
மனச் சிறகை அவிழ்த்து
ஒரு படகாக
என் கற்பனையை
தேசத்தை ஒட்டிவர
நான்
ஒரு மனிதமாக
பரிணமித்து
விடியல் பூபாளம்
காதை உரச
கண் விழிப்பேன்
நான் இப்போது
உறங்கிக் கொண்டிருப்பது
அகதிமுகாமில்
ம(ர)னமுள்ள
அந்த
ஒரு நூறு பேரோடு
நானும் இப்போது
பழைய அகதியே....!

கல்முனை எஸ்.எம்.யூசுப்.

### விரிந்த இமைகள்

யாரோடு [illegible] பேச்சு
கலையே இனி [illegible]
என் வாழ்வு ஏன் கலைந்து போச்சு
முள் மீது சிக்குண்ட சேலை போலாச்சு

நெஞ்செல்லாம் கனவுகளின் காட்சி
காலமோ செய்தது வீண் சூழ்ச்சி
கண்மூடிக் கண்திறக்க எதிரிலொரு [illegible]
காதலனின் கைபற்றிப் பணமகளின் ஆ[illegible]....

பெற்றவள் கற்பனையில் பிள்ளையொரு [illegible]
மற்றவரின் பார்வையிலே தொக்கியதேன் [illegible]
வெட்கங்கள் சேலைக்குள்ளானது என் தாபம்
நட்புகளின் வேரறுந்தது தான் இனித்துயரம்....

மூடிய கண்ணுக்குள் கண்ணீர்ப் படலம்
சாடிய மனிதரின் எதிரிலே நான் சடலம்
வீட்டு முற்றத்திலே விலங்காவதோ மனிதங்கள்
விரிந்த இமைகளுக்குள் தெரிவதோ ரணங்கள்......!

ஜெயபாலா
பம்பலப்பிட்டி.

### காதலிக்கு வாழ்த்து மடல்

மங்கை நீ பிறந்த நாள்-என்
மனம் எங்கும் நிறைந்த நாள்-உன்
மடி தேடி நான் வரவோ-என்
மார்பினிலே இடம் தரவோ.

கனாக் காணும் கண்களுடன்
கதை பேச நான் வரவோ
வினாக் கேட்கும் செவியினிலே
விடை கூற நான் வரவோ.

தெவிட்டாத உன் இதழ்களிலே
தேன் பருக நான் வரவோ
மாதுளை முத்துப் பல் வரிசை
மலர்வது காண நான் வரவோ.

[illegible] மாங்கனிகள்
[illegible] நான் வரவோ
கொடி உந்தன் இடை தாங்க
கோயில் தேர் ஒன்று நான் தரவோ.

மலர்ப் பாதம் தாங்க
மல்லிகைப் பூ நான் தரவோ- உன்
பஞ்சணை மடி மீது
படுத்துறங்க நான் வரவோ.

இதழினிலே ஒரு முத்தம் தந்து
இரவினிலே ஒரு கனவும் தந்து
வாழ்த்திடுவேன் உன்னை
வாஞ்சையுடன்
வாழ்ந்திடுக நீயும் வளமுடனே.

-கிழக்காலம் சபேஷ்-

### இல்லை

கவிபாட மனமில்லை
[illegible] வரவில்லை
[illegible] கேட்கவில்லை
அவனை மறக்கவில்லை.

உணவு நான் உண்ணவில்லை
அவனும் தொடுவதில்லை
விட்டுப் பிரிந்ததில்லை
வெளியேறிச் சென்றதில்லை.

[illegible] வந்ததில்லை
விட்டு [illegible]
நானில்லை அவனில்லை
நானாக விலகவில்லை.

காரணம் தெரியவில்லை
என்னை அவன் பார்ப்பதில்லை
தேடி நான் சென்றதில்லை
அவன் நாடி வந்ததில்லை.

வாய் மட்டும் பேசவில்லை
கண்களை மறைப்பதில்லை
வாயோ சிரிப்பதில்லை
நேருக்கு நேர் பார்ப்பதில்லை.

மறக்க முடியவில்லை
ஒழிய விருப்பமில்லை
அவனும் விரும்பவில்லை
நானும் தடுக்கவில்லை.

[illegible] முடியவில்லை
இருவரும் சொல்லவில்லை
மனமது வெறுக்கவில்லை
நேரம் கிடைக்கவில்லை.

கா.கணேஸ்
திருகோணமலை.

### ஜாலம்

நிலவுகளின் போராட்டத்திலும்
நிழல்களின் ஒப்பந்தங்கள்
மறுபடியும்
வசந்தத்தை
வரவில்லாக்கி
ஜாலம் காட்டும்

நிரஞ்சலா தங்கவேல்
திருகோணமலை.

### காதல்!

விழிகள்
விரிக்கும் வலை,
மனங்கள்
விழும் மாயை,
வாழ்வை
உயர்த்தும் சோலை,
உயிரை
மாய்க்கும் பாலை!

ஜொஹரா ஹுஸைன்
தியத்தலாவ.

### நூலொன்றை வெளியிட நான்பட்ட பாடு.....!

எத்தனை இரவுகள்-என்னை
"நித்திரை செய்"யென
கத்தின தெரியுமா?-என்
கண்களே சாட்சி!

கவிதைநூல் ஒன்றினை-இந்த
புவிக்கு நான் காட்டிட
தவித்த நாள் ஆயிரம்! கவிதை
தமிழிச்சே சாட்சி!

இலக்கிய ரசனையை-என்றோ
தொலைத்தவென் இல்லாள்
கழற்றினாள் தாலியை-என்
கவிதைநூல் சாட்சி!

அச்சகப் படிகளில்- என்
உச்செலாம் குளிர்ந்திட
இச்சையோடேறினேன்-என்
இதயமே சாட்சி!

உறவினர்
நண்பர்கள்-இன்னும்
பிறத்தியாரெல்லாம்
"அறுந்தவன்" என்றார்-என்னை
"அறிவிலி" என்றார்!

இவர் பேச்சைக்
கேட்டால்-என்
தவமென்ன ஆகும்?
[illegible]சொல்லாம் என்
கவிதை நூல்மேல்தான்!

கொடி தாலி ஈட்டில்-கவிதைக்
[illegible] ஏட்டில்!
[illegible] விழாவை-காணும்
[illegible] நெஞ்சில்!

"கவிதைநூல் விற்று-இந்த
புவியோர்கள் மெச்ச
கவிஞன் நான் மீண்டும்-தாலி
கட்டுவேன்" என்றேன்!

விழாவிற்கு வந்த-மனிதர்
குழாம் நாலு பேர்தான்!
அழாதா என் நெஞ்சம்-மனைவி
அன்றோடு பகைதான்!

தமிழோடு பற்று-வைத்த
தமிழ்க்கவி எனக்கு
தமிழ்மக்கள் தந்த-இந்தத்
தண்டனை போதும்!

முடிந்ததென் ஆசை!-தமிழ்
முடி சூடிக் கொண்டாள்!
இடிந்தது மனைவி-மக்கள்
இதயங்கள் தானே!

கவிஞர் செ.குணரத்தினம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—7




டுமீல்....டுமீல்...டுமீல்....

விட்டுவிட்டு மூன்று முறை துப்பாக்கி ஒன்று குலைத்தது.

"முகம் தெரியாத எதிரிகள் தமக்குள் மோதிக் கொள்கிறார்களா? அல்லது நம்மவர்கள் உள்ளே புகுந்துவிட்டார்களா?"

குலாம்ஷா யோசித்த விநாடிகளில்அறைக்கதவு திறந்தது.

ரம்யாதான் வந்தாள்.

இப்போதும் சட்டையின் மார்புப்பகுதியில் பட்டன்கள் போடப்படாமல் இருந்தன. அவள் கரத்தில் பிஸ்டல் இருந்தது. பளபளத்தது.

"பயந்து விட்டீர்களா குலாம்ஷா?" என்று கேட்டாள். பிஸ்டலை ஜீன்ஸை நெகிழ்த்தி இடுப்பில் செருகிவிட்டு கைகளை மேலே உயர்த்தி சோம்பல் முறித்தாள். இளமைகள் இரண்டும் மேலே நிமிர்ந்து கிறக்கம் விதைத்தன.

"யார் என்றே தெரியவில்லை ஷா. முகத்தை கறுப்புத் துணியால் மறைத்திருந்ததால் அடையாளம் தெரியவில்லை. பின்புற சுவர் ஏறி உள்ளே வர முயன்றிருக்கிறது. காவலாளி பார்த்துவிட்டு அபாய மணியை அழுத்தியிருக்கிறான். மூன்று தோட்டாக்கள் விரயம். தப்பிவிட்டது. மாட்டியிருந்தால் பிரியாணி போட்டிருப்போம்"

சொல்லிக்கொண்டே குலாம்ஷாவின் அருகில் வந்து அமர்ந்தாள்.

மீண்டும் வித்தையைக் காட்டப் போகிறாளோ என்று குலாம்ஷா நினைத்தார்.

அந்த நினைப்பை கலைக்கும் விதமாய் ரம்யா பேசினாள்.

"குலாம்ஷா! உங்களைப் போன்ற அதிகாரி - கம்பீரமான துணிச்சலான அதிகாரி எதிரியாக இருப்பது பெரிய நஷ்டம். உண்மையாகவே நீங்கள் மனம் மாறியிருந்தால் அது மாபெரிய அதிஷ்டம்."

சொல்லிக்கொண்டே குலாம்ஷாவின் முகத்தை கூர்ந்து பார்த்தாள்.

"எதிரியின் முகபாவங்களை வைத்தே எடைபோடத் தெரிந்தவள். உளவியலின் சூக்குமம் புரிந்தவள். இவள் இருப்பதே இந்தக் கூட்டத்திற்குப் பெரிய அதிஷ்டம்தான் என்று குலாம்ஷா நினைத்தார்."

"ரம்யா என்ன நீ... உனது கூட்டம் சுத்தமாக நம்பலாம். ஆனால் இவ்வாறான வரவேற்புக்களை குலாம்ஷா விரும்புவதில்லை. ஷாவைச் சீண்ட வேண்டாம் என்று உன் தலைவனிடம் சொல்லு."

குலாம்ஷாவின் குரலில் தொனித்த கோபம் அவர் சொல்வதில் உண்மை இருக்கிறது என்று ரம்யாவை நம்பவைத்தது. நம்பினாள்.

குலாம்ஷாவை நோக்கி நெருக்க மாய் அமர்ந்து அவர் தலை தொட்டு முடி கோதினாள்.

"கோபமா ஷா?" கொஞ்சும் குரலில் கேட்டாள். கேட்டபடியே உதடுகளை அவர் காதருகே கொண்டுவந்து மறு நொடியே தன்உதடு பிரித்து அவர் காதுமடலை பல்லால் மெல்லக் கடித்தாள்.

குலாம்ஷாவின் உள்ளே பல்லி ஒன்று ஊர்வது போல கூச்சம் குறுகுறுத்தது.

இடக்கரம் எடுத்து குலாம்ஷாவின் சட்டைப் பொத்தான்களை கழட்டிக்கொண்டே...

"உங்களோடு பேசிப்பார்க்கும்படி பொஸ் என்னிடம் சொன்னார். எங்கள் வழியில் நீங்கள் குறுக்கிடாமல் இருந்தால் அதுவே போதுமாம். அதற்கு விலையாக....."

சொல்லி நிறுத்தினாள். குலாம்ஷாவின் மார்பை அவள் இடக்கரம் இதமாய் தடவிக் கொடுத்து குறும்பு செய்தது.

"அதற்கு விலையாக என்ன தரப்போகிறாராம் உன் பொஸ்? உன் கரம் மிகப் பொல்லாதது பெண்ணே."

"என்ன விலை எதிர்பார்க்கிறீர்கள் ஷா? இந்த உத்தியோகத்தில் நீங்கள் காணாத, இனியும் காணமுடியாத சுகங்கள், வசதிகள் உங்கள் காலடி தேடி வரும். எங்கள் பக்கத்தில் நீங்கள் இருந்தால் சொர்க்கம் உங்கள் பக்கத்தில் வரும்."

"இப்போதும் பக்கத்தில் தானே இருக்கிறது."

சொல்லிவிட்டு சிரித்தார். குலாம்ஷா தீர்மானித்துவிட்டார். எதிரியின் அம்பைப் பிடுங்கி அவனை நோக்கியே திருப்பி எய்ய வேண்டும். வசதியான ஆயுதம் இல்லாத போது எதிரியின் ஆயுதத்தை பறிப்பதே விவேகம்.

ரம்யாவை தோள் தொட்டு ஆதரவாய் அணைத்தார்.

"உன் பொஸ் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமே என்று நான் அவசரப்படுவதாக நினைக்காதே. எனினும் நான் நேரில் சந்திக்கப் பிரியப்படுகிறேன். முடியுமா? முடிய வேண்டும். சில முக்கிய விஷயங்களை பேச வேண்டும்."

"என்ன முக்கிய விஷயங்கள்?"

"சொறி டியர்...நீ அழகான- அன்பான பெண்தான். ஆனால் சில விஷயங்களை எல்லோரிடமும் பேச முடியாது பார்."

சொல்லிக் கொண்டிருக்கையில் கதவு மூன்று முறை தட்டப்பட்டது. ரம்யாவின் தோளில் இருந்து குலாம்ஷா கரம் விலக்கினார். தன் சட்டைப் பொத்தான்களை சரி செய்து கொண்டார்.

ரம்யா சென்று கதவுதிறக்க, சின்ன மலைபோல ஒருவன் வெளியே நின்றான்.

"பொஸ் ஒரு உத்தரவு அனுப்பியிருக்கிறார்."

கடினமான குரலில் சொன்னான்.

"என்ன உத்தரவு?"

ரம்யா கேட்டாள்.

"குலாம்ஷா உடனடியாக இந்த நிமிடமே கொல்லப்பட வேண்டும்."

"என்ன?" ரம்யாவே அதிர்ந்து கேட்டாள்.

அலட்சியத்தோடு ஒரு வரட்டுப் புன்னகையை வீசியபடியே அவன் ரம்யாவை பார்த்துக் கேட்டான்.

"ஏன் அனுபவித்து விட்டு மேலே அனுப்பலாம் என்று நினைக்கிறாயா?"

ரம்யா கோபமானாள்.

"வார்த்தைகளை அளந்து பேசடா முட்டாள். நான் பொஸ் உடன் பேசவேண்டும்."

உறுதியாக அவன் சொன்னான்.

"முடியாது. உத்தரவு ஒன்று போடப்பட்டால் அதை நிறைவேற்றி முடிக்காமல் பொஸ் உடன் பேசமுடியாது என்று உனக்குத் தெரியாதா ரம்யா."

"தெரியும். இது விதிவிலக்கான - நமக்கு உபயோகமான விசயம்."

"விதிகளை மாற்ற எமக்கு உரிமையில்லை. முதலில் சொன்னதைச் செய். தண்டனை உன் கையால் நிறைவேற வேண்டும் என்பதும் உத்தரவில் ஒரு பகுதி."

உறுதியாய் சொல்லிவிட்டு வேகமாய் இடம் விட்டுப் போனான்.

ரம்யாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. உத்தரவு புதிராக இருந்தது.

நடுங்கும் கரத்தோடு இடுப்பில் இருந்த பிஸ்டல் தொட்டு வெளியே எடுத்தாள். எடுத்தபடியே கதவை மறுகரத்தால் சாத்தினாள். குலாம்ஷாவை நோக்கித் திரும்பினாள்.

■

முகத்தில் இருந்த துணி விலக்கப்பட்ட அதிர்ந்து போன டி.ஐ.ஜி டென்சில்...

"இது மதுமிதா தானே?" என்றார். நெற்றியில் விழுந்த குழப்பரேகைகளோடு மீண்டும் உற்று நோக்கினார். வாட்ச்மேனை சைகையால் அருகில் அழைத்து.....

"இது உன் முதலாளியம்மா தானே"

முகம் பார்த்து வாய் பிளந்த வாட்ச்மேன்... நடுக்கமானான். கிட்டத்தட்ட ஒரு குட்டி டிஸ்கோ நடனம் ஆடியது அவனது உடம்பு.

"ஆ....ம்....ஐயா....அ...ம்மாவே தான்" என்றான்.

டி.ஐ.ஜி விழுந்து கிடந்த உருவத்தின் அருகே முழந்தாளிட்டு அமர்ந்து உடம்பை சோதிக்க கை நீட்டிய தருணத்தில்...

உருவம் அசைந்தது. எதிர்பாராத தாக்குதலாய் கால்கள் உயர்த்தி டி.ஐ.ஜி டென்சிலை மோதியது. சுதாகரித்து நிமிர்வதற்கிடையில் உருவம் ஒரே பாய்ச்சலாக சுவர்பக்கம் தாவி மறுபுறம் குதித்தது.

"அதே நேரம் மாடியில் இருந்து

"டி.ஐ.ஜி அவளை விடாதீர்கள்..பிடியுங்கள்.பிடியுங்கள்"

என்று ஒரு குரல் வந்தது.

அது பெண்குரல்.

குரல் வந்த திசையில் மாடிநோக்கிப் பார்வையை அனுப்பிய டி.ஐ.ஜி டென்சில் மின்சாரத்தில் மிதித்தது போல அதிர்ச்சி வாங்கினார்.

அங்கே கூச்சல் போட்டபடி நின்றவள்.....

-மதுமிதா-

(இன்னும் வரும்)

## சிந்தியா பதில்கள்

நாடு பிரிப்பு- இதற்கு எதிர்ப்பு. அப்படியாயின் இணைப்புக்கேன் மறுப்பு?

என்.கஜேந்திரன்
கொழும்பு-13

அதை நினைத்தால்தான் எனக்கும் வருகிறது வெறுப்பு. அப்படி மறுப்போருக்கு இல்லை நாட்டைப் பற்றி பொறுப்பு உணர்வு.

■

இலங்கையின் இனப்பிரச்சனை எப்போது தீர்த்து வைக்கப்படும்?

அ.கலாம்தீன்-வவுனியா.

தமக்குள்ள பிரச்சனைகளுக்கு இனப்பிரச்சனையை பயன்படுத்துவோர் தம்மை திருத்திக் கொள்ள வேண்டும். தீர்வுகாண வேண்டும் என்று சம்பந்தப்பட்ட சகல தரப்பும் உளப்பூர்வமாக விரும்பி முயற்சிக்க வேண்டும். இதெல்லாம் எப்போது சாத்தியம் என்று தெரியவில்லையே கலாம்தீன்.

■

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் அசாருதீனைப் பற்றி சில வரிகள்?

செல்வி சில்மியா நிசார்-தெலியாகொன்ன.

அணியினர் அனைவராலும் விரும்பப்படுபவர். சர்ச்சைகளுக்குள் சிக்காத எளிமையான மனிதர்.

■

காதல் நிரந்தரமானதா சிந்தியா?

எம். அம்பிகா-நீர்கொழும்பு.

ஆதாம் ஏவாள் காலம் முதல் இன்று வரை இளமையாகவே இருப்பதால் அதற்கு மூப்பும் இல்லை. இறப்பும் இல்லை.

■

நியாயம் இல்லாமல் குற்றம் காணுவோரை என்ன செய்யலாம்?

பீ.சாந்தகுமார்-குருனாகலை.

அலட்சியம் செய்யலாம். செய்யுங்கள்.

■

தற்போது தமிழ் சினிமாவில் முடிசூடா மன்னனாக விளங்கும் இசையமைப்பாளராக யாரைக் குறிப்பிடலாம்?

பெ.விஜயலட்சுமி-லுணுகலை.

சந்தேகமே இல்லாமல் இளையவர்தான்.

■

தற்போதைய இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மொஹமட் அசாருதீனின் தாய்மொழி என்ன?

தஸ்லீம்-கனோவள்பொல.

தெலுங்கு.

■

டியர் சிந்தியா! ஐ. லவ். யூ?

எம். சரவணபவனகுமார்
மஸ்கெலியா.

நானும்தான் சரவணபவனகுமார். ஆனால் உங்களை மட்டுமல்ல- முரசின் சகல வாசக நெஞ்சங்களையும்.

■

இந்திய அணியில் விளையாடும் மனோஜ் பிரபாகரை திருமணம் செய்ய உத்தேசித்துள்ளேன். நீர் நேரிலா அல்லது தபாலிலா வாழ்த்து தெரிவிப்பீர்?

சிவசுந்தரி-வாழைச்சேனை.

வாழ்த்துத் தெரிவிப்பது இருக்கட்டும். திருமதி. சந்தியா பிரபாகரிடம் வாங்கிக் கட்டிக்கொள்ள நீர் தயாரா சுந்தரி? பகல்கனவுகள் சுகமாக இருக்கலாம். சுலபமாக முடியாது சுந்தரி.

■

நல்ல நண்பர்கள் அதிகம் கிடைப்பதில்லையே ஏன்?

என். விஷ்ணுகுமார்-பதுளை.

பட்டியலிட்டால் ஆகக் கூடியது மூன்று-நாலு பேருக்குமேல் நல்ல நண்பர்கள் கிடைப்பது அரிதென்று எங்கோ படித்திருக்கிறேன். அதனால் அதிகம் பெற ஆசைப்படாதீர் குமார்.

■

டியர் சிந்தியா! பெண் பாவம் பொல்லாதது என்றால் ஆண் பாவம்?

கே. தேவா
எவின்டன் எஸ்டேட்.

கொல்லாதது. ஆண்கள் கோபிக்க வேண்டாம். சும்மா ஒரு ஹி.....ஹி.......ஹி.

■

புலித்தலைவர் அன்புவழி என்கிறாரே உள்ளத்தாலா? உதட்டளவிலா?

ஜெயக்குமார்-உன்மலை.

காதில பூவைப் படித்துவிட்டு என் காதைத் தேடுகிறீராக்கும்!

■

இலங்கை நடுவர்கள் திரு ஆனந்தப்பா, திரு பொன்னுத்துரை ஆகியோர் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

பா.சாந்தினி-கண்டி.

கிரிக்கெட் குழுவில் பதினொரு பேர்தான் விளையாட வேண்டும் என்ற விதியை மாற்றியமைக்க முற்பட்ட சாதனையாளர்கள்.

■

பெண்களுக்கு அதிக மரியாதை கொடுப்பது மேலை நாட்டினரா? நாமா?

என்.மஞ்சுளா-கல்பிட்டி.

எங்கும் போதியளவு இல்லை என்பதுதானே பிரச்சனையே. அதன் உருவாக்கம்தானே பெண் நிலைவாத அமைப்புக்கள், போராட்டங்கள் எக்செட்ரா, எக்செட்ரா.


■

ஹலோ சிந்தியா - 2000 ஆண்டளவில் யாழ்ப்பாணம் எந்த நிலையில் இருக்கும்?


பி. திருச்சந்திரன்
கந்தப்பளை.

தொடுக்கப்படும் ஷெல்பாணங்களைப் பார்க்கும் போது யாழ்ப்பாணம் இருக்க வேண்டுமே என்ற கவலை ஏற்படுகிறது. இதில் நிலை பற்றி வேறு சொல்ல வேண்டுமா? சந்திரன்.

## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: அதுல் ஹாதி
வயது: 20
முகவரி: ஆலங்குடா, எத்தாலை, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, பேனா நண்பர் தொடர்பு.



பெயர்: சிதம்பரம் தெய்வாணி
வயது: 22
முகவரி: இல.12, வெலெகெதர, புசல்லாவ.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, சினிமா, தொலைக்காட்சி.



பெயர்: ஆர். ரமேஸ்
முகவரி: 35, கட்டுவபிட்டிய தெற்கு, நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, விளையாட்டு.



பெயர்: எம்.பி.எம். சிராஜுதீன்
வயது: 20
முகவரி: 71ஏ, அல்மனார் வீதி, மருதமுனை-02, கல்முனை.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், கிரிக்கெட், உதைப்பந்து விளையாடுதல், புத்தகம் வாசித்தல்.

பெயர்: எஸ்.ஐ.எம். ஜவ்ஹர்
வயது: 23
முகவரி: ஜாயா றோட், மருதமுனை, கல்முனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், டி.வி. பார்த்தல்.

பெயர்: தெய்வநாயகம் பிரபானந்தன்
வயது: 21
முகவரி: கடற்கரை வீதி, களுதாவளை-4, களுவாஞ்சிக்குடி.
பொழுதுபோக்கு: பேனா நண்பர் தொடர்புடன் வழமையானவை.

பெயர்: எம்.எம்.எம்.ஜாஸீர் அனஸ்
முகவரி: இல.10/6, மார்க்கட் லேன், காத்தான்குடி-4.

பேனா நண்பர் அரங்கம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# அவள் மனைவியாகிறாள்!

-முகில்வண்ணன்-

"என்ன தம்பிராசா மகளை இப்படியே வைச்சுட்டு இருக்கப் போறியோ? அவள் சின்னவளும் கல்யாணங் கட்டி ஒரு பிள்ளையும் பெற்றுப் போட்டாள். நீ இன்னும் மூத்தவளைப் பற்றிக் கவலை இல்லாமல் இருக்கிறாய்?"என்று கேட்டபடி வந்தார் தரகர் தாமோதரம்.

"ஏன் வயித்தெரிச்சலை கிளப்புகிறாய்? நானா கவலை இல்லாமல் இருக்கிறன். எனக்கு மட்டுமில்ல இவள் பாக்கியத்துக்கும் மகள்ற கவலைதான். நீதான் எத்தனை மாப்பிள்ளை பார்த்து இருக்கிறாய். ஒன்றும் பொருந்தல்லயே?"

"நான் என்ன செய்ய உண்ட மகளுக்கு ஏழில் செவ்வாயல்லோ? அதுதான் கஷ்டமாக இருக்கிறது. நானும் செவ்வாய் தோசமுள்ளவங்கள் எத்தனை பேருக்குக் கல்யாணம் முடிச்சு வைச்சு இருக்கிறன். ஆனா உன்ர மகளுக்குத்தான் ஒண்டும் பொருந்தல்ல."

"நானும் இவள் பிள்ளையிட்ட சொல்லிப் பார்த்திட்டன். நீ யாரையும் விரும்பினாச் சொல்லு மகள் பேசாம பொருத்தம் ஏதும் பார்க்காமல் செய்து வைச்சிடலாம் என்று. அவளும் யாரையும் விரும்புவதாகத் தெரியவில்லை. ஏன் தாமோதரம் செவ்வாய் தோசம் இருந்தால் காதலும் வராதோ?"

"கல்யாணம் தான் கட்டி வைக்க முடியல்ல. அவள் காதலிக்கட்டும் என்றாவது பாக்கிறாய் போல..."

"ஓம்! ஓமோம். அப்பன் மகளைக் காதலிக்கச் சொல்லும் கொடுமை இந்த வீட்டிலதான் நடக்கிறது. மற்ற வீட்டில காதலிக்கிறாள் என்றதும் போர்க்கொடி தூக்குவினம். ஆனா நான் சொல்லியும் அவள் காதலிக்கிறதாகத் தெரியவில்லை."

"காதலிப்பதற்கு செவ்வாயின் அனுக்கிரகம் வேணும் போல. செவ்வாய் நன்றாக இருக்கிறவர்கள் தான் வாழ்க்கையை அனுபவிப்பவர்கள் என்று எண்ணுகிறன். செவ்வாய் கிரகம் தான் 'சொர்க்கபுரி' என்று இப்பதான் கண்டு பிடிச்சு இருக்கினம். இதைப் பார்க்கக்குள்ள காதலிக்கிறதுக்கும் செவ்வாய் தோசம் தடை போலத்தான் கிடக்குது."

"சின்னவளுக்கு கல்யாணம் முடிஞ்சதும் இவள் பார்த்து மனம் வருந்துவாள் எண்டுதான் கொழும்புக்குக் கூட்டி வந்து வீடெடுத்து இருக்கிறன். காதலித்தாலாவது பாரத்தைக் குறைக்கலாம் என்று. 'கொம்பியூட்டர்' படிக்க வைச்சு வேலைக்கும் சேர்த்து விட்டன். எதுவும் பயன் இல்ல....."

"எல்லாம் காலம் நேரம் வந்ததும் தானே நடக்கும். கவலையை விடு. கனடாவில் இருந்து ஒரு பொடியன் அடுத்த கிழமை வாறான். எதுக்கும் கேட்டுப் பாப்பம். என்னிட்ட சாதகம் இருக்கிறது தானே. பொருத்தமும் பார்த்திட்டுச் சரி என்றா வாறன். அப்ப நான் வரட்டே!" என்று எழுந்து கொண்டார் தரகர் தாமோதரம்.

"நீதான் கொஞ்சம் முயற்சி எடுக்க வேணும். குமர் காரியம். உனக்குப் புண்ணியம் கிடைக்கும்." என்றார் தம்பிராசா.

"போட்டு வாறன்" என்றவர் 'எனக்குப் புண்ணியம் வேணாம். என்னுடைய தரகுப் பணத்தைத் தந்தாப் போதும்' என்று எண்ணிக் கொண்டு நடையைக் கட்டினார்.

★

பத்து நாட்களுக்குப் பின்னர் ஒரு காலை வேளையில் 'தம்பிராசா' என்று சத்தமிட்டபடி படியேறினார் தாமோதரம்.

வேலைக்குச் செல்லப் புறப்பட்ட ஷீலா தான் முன்னே வந்தாள். "ஐயா குளிக்கிறார் இருங்க இப்ப வந்திடுவார்."

தாமோதரத்துக்குத் தன் கண்ணையே நம்ப முடியவில்லை. ஷீலாவை ஏற இறங்கப் பார்த்தார். 'இவளுக்கு இருபத்தி எட்டு வயது என்று யார் சொல்லுவினம். சும்மா சொல்லப் படாது கொழும்பு நாகரிகம் நல்லாத்தான் புடிச்சு இருக்கிறது. கனடாவுக்குப் போறதுக்கும் நல்லதுதான். கொஞ்சம் நாகரிகமும் இங்கிலீஷும் தெரிஞ்சு இருந்தால் நல்லது தானே! அவனுக்கென்ன நல்ல பொடியன்தான். பின்னுக்குத்தான் உச்சி கொஞ்சம் வெளிச்சு இருக்கிறது. வயதும் முப்பத்தி ஐஞ்சுதானே' என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே தம்பிராசா வந்து சேர்ந்தார்.

'வா வா தாமோதரம் ஏதும் விசேஷமோ?' என்றவாறு வந்து அமர்ந்தார். ஷீலா தேனீரை இருவருக்கும் கொடுத்தாள்.

"அவன் பொடியனுக்கும் உவள் பிள்ளைக்கும் பொருத்தம் பார்த்தனான்" என்று கூறிவிட்டுத் தேனீரை உறிஞ்சினார்.

வியாபாரத் தந்திரமோ?

"இஞ்சே தாமோதரம் தேத்தண்ணியை குடிச்சுத்து விஷயத்தைச் சொல் அல்லது சொல்லித்துக் குடி" என்றார். 'டென்சன்' ஆன தம்பிராசா.

'தேத்தண்ணியை சுடச்சுடக் குடிச்சாத்தான் எனக்குக் குடிச்சமாதிரி இருக்கும் கண்டியோ. கொஞ்சம் பொறு குடிச்சித்து வாறன்' என்றவர் தேனீரை ரசித்து ருசித்து குடித்தார்.

ஆனால் தம்பிராசாவோ முள்மேல் இருப்பது போல் இருந்தார். 'இவன் என்ன சொல்லப் போகிறானோ?' என்ற ஆவலுடன் இருந்தார். ஷீலாவும் உள்ளே இருந்து காதைக் கூர்மையாக்கிக் கொண்டிருந்தாள்.

சற்று நேரத்தில், தேனீரைக் குடித்துக் கோப்பையை வைத்துவிட்டுப் பேசத் தொடங்கினார். "பொடியன்ட பெயர் சிறிதர். வயசு முப்பத்தி ஐந்து....."

"அது இருக்கட்டும் காணும் பொருத்தம் எப்படி? முதலில் அதைச் சொல்லும்" என்றார் தம்பிராசா பொறுமை இழந்து.

"அது சரி என்றபடியால்தானே சொல்ல வந்தநான். பொடியனுக்கு எட்டுல செவ்வாய் இருக்கிறது. தோசப் பொருத்தம் இருவருக்கும் அறுபத்தி எட்டு வீதம் பொருந்துது. மற்றவையும் நன்றாக இருக்கிறது...."

"எப்படிப் பொடியன்?"

"அதைத்தானே சொல்ல வாறன். அவன் கனடா போய் பத்து வருஷம் நல்லா உழைச்சு குடும்பத்தைப் பார்த்து இருக்கிறான். நல்ல காசு இருக்க வேணும். தாயும் தகப்பனும் வந்து இருக்கினம். இவனுக்குக் கல்யாணம் செய்து வைக்கத்தான் கூப்பிட்டவங்களாம். ஒரு மாதம் லீவில வந்து இருக்கிறான். அதுக்குள்ள பேசி முடிக்க வேணும் எண்டு அவசரப் படுத்துகினம். அவங்களும் 2,3 சாதகம் வைச்சு இருக்கினம். எது சரி வருதோ அதைச் செய்வம் எண்டு இருக்கினம்....."

"ஊர் எவ்விடம்?"

"இளவாலை தான். பொடியன் நல்லா படிச்சு இருக்கிறான் போல எப்பவும் இங்கிலீஷ்தான் பேசுறான்."

"சீதனத்தைப் பேசி முடிச்சா பெண்ணைப் பார்க்கலாம் என்று சொன்னாங்க. நான் படத்தைக் காட்டின நான். இந்தாங்க மாப்பிள்ளையின் படம்" என்று ஒரு படத்தை நீட்டினார்.

படத்தை வாங்கியவருக்கு மனசுக்குப் பிடிச்சு விட்டது. 'ஷீலா' என்று அழைத்து, 'இந்தா மாப்பிள்ளையின் படம் பார்த்திட்டு அம்மாவிடமும் காட்டு' என்று கொடுத்தவர்,

"சீதனம் என்ன எதிர்பார்க்கினம்," என்றார்.

"மாப்பிள்ளைக்குச் சீதனத்தைப் பத்திக் கவலை இல்லை. ஏதோ கொடி, கூறைச் செலவுக்கு தந்தாப் போதும் என்றார். ஆனா அவங்கட அம்மா பொண்ணைக் கனடாவுக்கு அனுப்புற செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றாள்." என்றார்.

"அதுக்கு நானெங்க போறது. 4 1/2, 5 வேணுமே! எண்ட நிலமை தெரியும் தானே 1 1/2 என்றாக் கொடுக்கலாம் பொண்ணும் வேலை செய்யுது. இதுதான் ஏலும். ஏலும் எண்டா சொல்லிப்பாருங்க"

உள்ளே இருந்த ஷீலா "ஐயா" என்றாள்.

"இப்படிப் பெரிய இடத்தைப் பார்த்துக் கஷ்டப்படாதீங்க. நம்மட தகுதிக்கு ஏற்றாப் போல பார்க்கலாம். இப்ப எனக்கு அவசரமில்ல....."

அவர் பூரித்துப் போகிறார்! என்னுடைய மகள் எண்டால் மகள்தான். இருபத்தி எட்டு வயசுக்குப் பிறகும் 'கல்யாணத்துக்கு அவசரம் இல்லை' என்று சொல்கிறாள் என்று எண்ணி,

"இல்ல மகள் வாற சம்பந்தத்தைத் தட்டிக் கழிக்கக் கூடாது. பேசிப் பார்ப்பம்"

"காசிக்கு என்ன செய்வீங்க ஐயா?"

"பென்சன் தொகை மூன்று லட்சம் வந்திருக்கு. போன மாசம்தான் வங்கில போட்டநான். உன்னுடையதையும் முடிச்சுத்து சின்னவளுக்கும் ஒரு லட்சம் என்றாலும் கொடுக்க வேணும். அவளுக்கும் ஒன்றும் கொடுக்கவில்லை தானே. விரும்பிச் செஞ்சவள் எண்டாலும் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கத்தானே வேணும்" என்றார்.

மௌனமானாள் ஷீலா. மனம் விழித்துக் கொண்டது. 'எனக்குத் தெரியாதே ஐயாவுக்கு காசு வந்தது. அவளுக்கு என்ன கொடுக்கிறது. அவள்தான் எனக்கு



முந்தி தனக்குப் பிடிச்சவனோட ஓடி விட்டாளே. இன்னுமென்ன சீதனம் கொடுக்கிறது!'

பேச்சுவார்த்தை துரித கதியில் நடந்தேறிற்று. பெண்ணுக்கு பத்து பவுணில நகையும் ரொக்கம் 1 1/2 லகரமும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. பதிவை இங்க வைத்து விட்டுச் செல்வது என்றும் சிறிதர் அவளை 'ஸ்பொன்சர்' பண்ணி கனடாவுக்கு எடுப்பது என்றும் தீர்மானமாகிற்று.

பேச்சுவார்த்தை, பெண் பார்த்தல், நாள் குறித்தல் என்பதில் இருபது நாட்கள் கடந்து ஓடிவிட்டது. பதிவை வைத்துப் பத்து நாளில் மாப்பிள்ளை கனடா சென்றுவிட ஏற்பாடாகி இருந்தது.

அந்த நாளும் வந்தது. பதிவுத் திருமணம். கொழும்பில் இருந்த சுற்றத்தவர் தெரிந்தவர்களுடன் ஒரு சாப்பாடு, வீடியோ, படப்பிடிப்புடன் அமைதியாக நடந்து முடிந்தது. மாப்பிள்ளை அன்றிரவே பெண்ணையும் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டார். தற்காலிக வாடகைவீடு இன்னும் பத்து நாள் சென்றதும் திரும்பி வந்து விடுவாள் ஷீலா என்றுதான் பெற்றோர் எண்ணி இருந்தனர்.

அடுத்த நாட்காலை பக்கத்து வீட்டிலிருந்து 'ரெலிபோன்' அழைப்பு வந்ததும் அதிர்ந்து போனார் தம்பிராசா. இதுவரை நாளும் ஷீலாவுக்குத்தான் 'போன்' வரும் 'மிஸ்- எஸ்.தம்பிராசா' என்றே அழைப்பார்கள். இன்று அவருக்கு கோல் வந்திருந்தது. 'மிஸிஸ் சிறிதர்' அழைக்கிறாராம். இதுதான் அவரது அதிர்ச்சிக்குக் காரணம்.

நேற்று வரை எனக்கு மகளாகத்தான் இருந்தாள். இன்று தான் வேறொருவனின் மனைவி என்றுகாட்டி விட்டாளே. எனது 'இனிஷியலை' உதறிவிட இத்தனை அவசியமா? உண்மைதான் அவள் சிறிதரின் மனைவியாகி விட்டாள். நான் மறுக்கவில்லை. ஆனால் தகப்பனுடன் கதைக்கும் போதாவது 'ஷீலா' பேசுகிறேன் என்று குறிப்பிட்டால் என்ன? மிஸிஸ். சிறிதர் என்று தான் இனி வேறு ஒருவரின் மனைவி என்று எனக்கே உணர்த்த வேண்டுமா? என்றும் தந்தையின் பெயரைக் காப்பாற் றுவன் மகன்தானா? எனக்கு அந்த மகன் இல்லாமல் போய்விட்டானே- என்று எண்ணிக் கலங்கினார்.

அவள் பேசிய எதுவுமே அவர் காதில் ஏறவில்லை. "அம்மாவுடன் கதை' என்று போனைக் கையில் கொடுத்துவிட்டு வந்துவிட்டார்.

மூன்று நாளில் மிஸிஸ் சிறிதர் வீட்டுக்குக் கணவனுடன் வந்திருந்தாள். அம்மா ஓடி ஓடிக் கவனித்தாள். அப்பா மௌனமாகவே இருந்தார்.

"ஐயா கனடாவில் இருந்து ஒருவர் 'பேப்பரோ'ட வந்து இருக்கிறாராம். எனக்கும் வசதியான 'பேப்பர்' ஒன்று இருக்கிறதாம். இஞ்ச மூன்று கேட்கிறாங்க மிச்சத்தை அங்க தரட்டாம். அங்க போய் மிச்சம் 2 யும் இவர் கொடுக்கிறாராம். நீங்க கொடுத்த 1 1/2யும் இருக்கிறது. இன்னும் 1 1/2 வேணும் ஐயா. கொடுத்தா எனக்கு இஞ்சேயே தாலியையும் கட்டிற்று கூட்டித்துப் போறாராம்." கையைப் பிசைந்தபடி கூறிமுடித்தாள். ஆனால் வீட்டில் என்ன நடந்தது என்று அவள் கூறவே இல்லை.

★

"எனக்குத் தெரியாது என்னையும் உங்களோட கூட்டித்துப் போங்க. என்னால இனியும் இங்க இருக்கேலாது" என்று சிணுங்கினாள் ஷீலா.

"எனக்கு மட்டும் என்ன விருப்பமா இஞ்ச உன்னை விட்டுத்துப் போக. முப்பத்து ஐந்து வயசில கல்யாணம் முடிச்சு இருக்கிறன். போன உடனே 'ஸ்பொன்சர்' பண்ணி எடுக்கிறன்."

"ஆட்கள் சொல்லுகினம் ஒருவருஷம் ஒண்ணரை வருஷம் செல்லும் எண்டு. அதுவரை இருந்தால் எனக்கு பைத்தியம்தான் பிடிக்கும்"

"எண்ட செல்லக் குஞ்சு சொன்னாக் கேட்க வேணும். ஒரு வருஷத்தில எப்படியும் எடுத்திடுவன். பிந்தினால் ஏஜன்சியால எடுப்பன்..."

"இல்ல நானும் உங்களோட வரப்போறன்..." என்று கண்களைக் கசக்கினாள். அதைவிடப் பெரிய ஆயுதம் ஏது? அதுதானே கண்ணை வாளுக்கு ஒப்பிட்டார்கள் கவிஞர்கள். ஆனால் அந்தக் கண்களில் இருந்து வரும் கண்ணீரும் கூரிய வாளை ஒக்குமாமே! பழமொழி சொல்கிறது. வாளில் இருந்து வாட்கள் பிறந்தால் எந்த ஆடவனால் என்ன செய்ய முடியும்?

"காசு இருந்தா யாரையும் பேப்பர் வைச்சு இருக்கிறாக்களைப் பிடிச்சுக் கேட்கலாம்....." என்று இழுத்தான் சிறிதர்.

"ஐயாட்ட கேளுங்களன்..."

"அவர் பேசிய படி தந்து விட்டார் தானே!"

"இப்ப என்னைக் கூட்டிப் போக வேணும் என்று கேளுங்க".

"அவரிட்ட ஏது காசு....".

"பென்சன் தொகை வந்து காசு வைத்து இருக்கிறார். தங்கச்சிக்குக் கொடுக்கவாம்."

தனது கணவனுக்கு விசுவாசியாகிறாள். இப்போது அவள் அவன் மனைவியல்லவா? உண்மைகள் தெரிந்ததும் இப்போது நாடகம் அரங்கேறுகிறது.

★

"அதுக்கு நான் என்ன மகள் செய்யுறது?"

"உங்களால முடிஞ்சதை ஏற்பாடு பண்ணிக் கொடுங்க ஐயா மிச்சத்தை அவர் பார்க்கட்டும். தாலிக் கொடிக்கும் காசு...."

"என்னிட்ட ஏது காசு"

"நீங்க தானே சொன்ன நீங்க பென்சன் தொகை வந்து இருக்கிறது எண்டு....."

"அது அவளுக்கும் வேணும்.... உனக்குரியதைக் கொடுத்து விட்டேன்..."

"ஐயா அவள் கரை சேர்ந்து விட்டாள். நான் இன்னும் இல்லை. இவ்வளவு நாளும் உங்களுக்குப் பாரமாக இருந்தேன். இனியும் அப்படித்தான் ஒரே ஒரு மாற்றம். மிஸ் தம்பிராசா இ ; மிஸிஸ் சிறிதர். இந்த மாற்றத்தோடும் பாரம் பாரம் தான். ஆகவே இருக்கிற காசைக் கொடுத்தால் என்னைக் கூட்டிப் போனால் நானென்ன தங்கச்சிக்கு உதவாமலா போகப்போறன்?"

"மாமா காசு இருந்தால் தாங்க நான் போகும்போது இவளையும் கூட்டித்துப் போறது வசதி எண்டு பார்க்கிறன். இல்லையென்றால் வேறயாருடனும் வந்து அவதிப்பட வேணும். வாறதும் நிச்சயம் இல்லை. பாதுகாப்பும் இல்ல. சிலபேர் இடையில் விட்டுத்தும் ஓடிடுவாங்க. பிறகு எனக்கு மனைவியும் இல்ல.காசு இருந்தால் நானே உடனே கூட்டித்துப் போயிடுவன்..."

"இப்படி என்னைக் கல்யாணம் கட்டி வைச்சுத்தவிக்க விடுறதைப் பார்க்க கழுத்தை நெரிச்சு கொன்று போட்டிருக்கலாமே!" என்று கூறி அழுதாள் மிஸிஸ் சிறிதர்.

சிறிது நேர மௌனப் போராட்டத்தின் பின்னர் மிஸிஸ் சிறிதர் வென்றுவிடுகிறாள். ஐயா 1 1/2க்கு ஒரு செக் கொடுக்கிறார்.

மூன்று நாளில் தாலி கட்டிக் கொண்டு பிளேன் ஏறிப் பறக்கிறாள் ஷீலா சிறிதர்.

'எனக்கு மகளாக இருக்கும் வரை எப்படி இருந்தவள். இன்று இன்னொருவனுக்கு மனைவியானதும் எப்படி மாறி விட்டாள்?" என்று எண்ணிப் பெருமூச்சு விடுகிறார் தம்பிராசா.

(யாவும் கற்பனையே)

---

நிமிடக் கதை

# இது தப்பில்லீங்க....

-எம். சுரேஷ் - கொழும்பு வளாகம்-

*"சொல்ல முடியாத தேவைகளை கனவுகள் தானே நிறைவேற்று கின்றன"*



இரண்டு வருடக் காதல், ஒரு நாளேனும் பவித்ரா தன் கைகளைக் கூட பாரதிக்குத் தொடவிடவில்லை. அவன் தொட முயலவும் இல்லை. வெறும் சந்திப்புக்கள், பேச்சுக்கள், பார்வைப் பரிமாறல்கள்..... இவைகள் தான் இரண்டு வருடங்களை விழுங்கியிருந்தன.

ஆனால் இன்று...ஏதோ ஒரு மாற்றம். ஐந்து மணிக்கே வானம் இருட்ட ஆரம்பித்துவிட்டது. ஜில்லென்று வீசும் தென்றலும், தோட்டத்தில் பூத்துக் குலுங்கும் குண்டுமல்லிப்பூவின் மணமும், மனதிற்குள் எதையோ தூவின.....

இன்று வழமைபோல் பாரதியோடு பேசமுடியவில்லை. அவன் பவித்ராவையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பார்வைக்குள் ஆயிரம் பட்டாம் பூச்சிகள், ஒரு குளிர்ச்சி..... ஏன்?...ஏன் அவன் அப்படிப் பார்க்கிறான்? பவித்ராவுக்குப் புரியவில்லை. ஆனால் அந்தப் பார்வை... அது அவளுக்குத் தேவைப்பட்டிருந்தது. அவளால் அதை தவிர்க்க முடியவில்லை.

பார்வைகள் தொடர்ந்தன. இடைவெளிகளை அமைதி நிரப்பியது. ஒரு நீண்ட பெருமூச்சு. பவித்ரா ஒன்றுமே பேசவில்லை. அவன் தயங்கினான்....... சில நிமிடங்கள் மட்டும்தான். இப்போது அவன் கைகள் பவித்ராவின் கரங்களில் மெல்லப்படர்ந்தன. பவித்ரா திடுக்கிட்டாள். "பாரதி ப்ளீஸ், தயவு செய்து கைய எடு" சொல்ல நினைத்தாள் - ஆனால் சொல்லவில்லை.

அந்த ஸ்பரிசம் அவளுக்கும் பிடித்திருந்தது. மெல்லத் தோளைத் தாண்டி கழுத்தில் படர்ந்த கரங்கள், அவளின் கழுத்தோரம் ஒட்டிச் சுருண்டிருக்கும் கூந்தலை இதமாக வருடிக்கொடுக்க பவித்ராவின் கண்கள் மயங்கின. படிப்படியாக இடைவெளிகள் குறைய ஆரம்பித்து, அவனின் உதடுகள் பவித்ராவின் உதட்டோடு சங்கமமாகியது. மலைகள் முகிலுக்குள் மறைந்து போயின...... உதடுகள் ஓரிடம் தரித்திருந்தாலும் பவித்ராவுக்கு, பாரதியின் கரங்களைத் தான் ரொம்பப் பிடித்திருந்தது. அட! இவனுக்குள் இத்தனை இன்பங்களா...? அவள் ஆச்சரியப்பட்டாள். ஒரு எல்லைவரை கண்களை மூடி அனுபவித்தவள் "ம்.... போதும் பாரதி" மயக்கும் குரலில் மெதுவாய் சிணுங்க, குபீரென்று சிரிப் பொலிகள்!

திடுக்கிட்டு விழித்த பவித்ரா நாணத்தால் குறுகிப் போனாள். அவளுக்கு, தான் இத்தகைய ஒரு கனவைக் கண்டோமே என்பதை விட, வாய்விட்டுப் புலம்பித் தொலைத்து விட்டோமே என்பதை நினைக்க பெரிய அவமானமாக இருந்தது. விடுதி அறையில் தங்கி யிருந்த மீனாவும், தீபாவும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

"ஏண்டி பவித்ரா.... முதலிரவு முடிஞ்சுதா?" மீனா கேட்க பவித்ரா வெட்கத்தால் முகம் கவிழ்ந்தாள். அவள் மனம் ஏதோ பெரும் பிழை செய்து விட்டதாக உறுத்தியது. முகத்தில் ஒரு பெரிய சோகம்.

"ஏய்! இதுக்கு ஏன் கவலைப்படுற.... இதுல ஒரு தப்பும் இல்லடி.... இந்த வயசில இப்பிடியான கனவுகள் வராம இருந்தாத்தான் மகா தப்பு" மீனா கூற, பவித்ரா அவளை ஒருமாதிரியாகப் பார்க்கிறாள்.

ஆமாம்.... இதிலென்ன தப்பிருக்கிறது? ஆண்பெண் உறவுக்கு கடும் கட்டுப்பாடுகளையும், தடைகளையும், சம்பிரதாயங்களையும், விதித்திருக்கும் நமது கலாசாரத்திற்குள் அடைபட்டுக் கிடக்கும் நாம், நமது "டீன் ஏஜ்" உணர்ச்சிகளையும், கற்பனைகளையும், கனவில்தானே தீர்த்துக்கொள்ள வேண்டும்?

(கதை கற்பனை - கரு நிஜம்)

## சிறுகதை

# "மறுமலர்ச்சி தோன்றிடுமா?"

**வை. நிரு**



**"இன்று பூத்த மலர் போல் இருக்க வேண்டிய உன் முகம்
என்றோ பூத்த மலர் போல் வாடியிருப்பது ஏன்?"**

தன் சிந்தனையைக் கலைத்தது யார் என ஜென்ஸி பார்த்தபோது எதிரே கபில்ராஜ் நின்றான். "ஓ! நீங்களா? வாருங்கள்...."

"என்னடா இந்தக் கவிதையை இவன் சொல்கிறான் என்று நினைக்கிறாயா?"

"ஏதோ நீங்கள் இயற்றிச் சொல்வதென்ற நினைப்போ? நான் சொல்லிவைத்த கவிதையைத்தானே சொன்னீர்கள்."

"அதுதானே எனக்கு அப்படியொரு திறமையிருந்தால் உன்னோடு வீணாக பொழுதைப் போக்குவேனா? அதைவிடு. ஜென்ஸி என்ன யோசித்துக் கொண்டிருந்தாய்?"

"எத்தனையை யோசித்திருப்பேன். அதைச் சொன்னால் நீங்கள் கோபிப்பீர்கள்" என்று சொல்ல நினைத்தாலும் அதைச் சொல்லாமல் "ஒன்றுமில்லையே சும்மாதான் இருந்தேன்" என்றேன்.

"எனக்கா ரீல் விடுகிறாய். சிறிது நேரம் ,நான் லேட்டாய் வந்தால் போதும். தேவையில்லாமல் யோசிக்கத் தொடங்கிடுவாயே. உனக்கு எத்தனை தடவை ஆலோசனை சொல்லியிருக்கிறேன். அநாவசியமாக யோசிக்காதே. தேவையில்லாதவற்றை மறந்திடு. வீணாக யோசித்து வருத்தத்தை தேடாதே என்று."

"அப்படி என்னில் அக்கறையிருந்தால் நேரத்தோடு வருவதுதானே." பொய்க் கோபம் கொண்டாள் ஜென்ஸி.

"அக்கறையில்லாமலா ஒவ்வொரு நாளும் உன்னைத் தேடி வருகிறேன். ஏதோ இன்றைக்கு வீட்டில் வேலையாயிருந்தது. அதை முடித்துவிட்டு வர லேட்டாய் போயிற்று. அதற்காக தேவையில்லாமல் யோசிப்பதா? சரி அதைவிடு. அப்புறம் வேறு என்ன புதினங்கள்......." தொடர்ந்தன அவர்களின் பொழுதுபோக்குக் கதைகள்.

இப்போ ஜென்ஸிக்கு ஆறுதலாயிருப்பது கபில்ராஜ்தான். வாழ்க்கையை ஒரு கேள்விக்குறியாக நினைத்து அதை வெறுத்து, தன்னை மறந்து, எதிலுமே பற்று இல்லாமல் வாழ்ந்த அவளிடம் ஒரு திருப்பம் ஏற்பட்டதென்றால் அது கபில் ராஜால்தான். அவள் வெறுத்த வாழ்க்கையை விரும்ப வைக்க வேண்டும், மறந்துபோன சிரிப்பை வரவைத்து கலகலப்பாக்க வேண்டும். பொழுதுபோக கலைகளையும், காட்சிகளையும் ரசிக்க வைக்க வேண்டும் என்பதில் யாருக்குமே இல்லாத அக்கறை, அன்பு கபிலுக்கு இருந்தபோது ஜென்ஸிக்கு அவன் மேல் ஒருவித பாசம் உண்டானது. அவன் காட்டும் அன்பிலே தன் நிலையை மாற்றிக்கொண்டிருந்தாள். "கபில் நீங்கள் மட்டும் என்னில் அன்பில்லாமல், அக்கறையில்லாமலிருந்தால் நான் இவ்வளவுக்கு உயிரை விட்டிருப்பேன்" என்று நேரிடையாகவே அவனுக்கு சொல்லிவிட்டாள். மற்றவர்களின் சந்தேகங்களுக்கு உடந்தையாயிடுவேனோ என்று அஞ்சியிருந்தவனுக்கு ஜென்ஸியின் அந்த வார்த்தைகள் அமுதமாயின.

"ஜென்ஸி உன் உயிரை காப்பாற்றியது நான்தான் என்றால் அதைவிட சந்தோசம் எனக்கு வேறொன்றுமில்லை. இனி நான் எதற்கும் பயப்படமாட்டேன். என்ன பிரச்சனைகள் வந்தாலும் அதை சமாளித்து நித்தமும் இந்த மல்லிகைப் பந்தலில் உன்னை சந்திக்க வருவேன்" என்று உறுதியாக சொன்னவனின் வார்த்தைகள் உள்ளத்திலிருந்து தோன்றியதால் தான் நித்தமும் அவளை சந்திக்க வருகின்றான் கபில்ராஜ். விசேட தினங்களில் கபிலுக்கு விருந்து கொடுப்பதற்கு முன்னிற்பாள். கபிலும் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும்போது அவள் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அந்த நேரத்தில் தன்னை மறந்து சிரிக்கிறாள். கலகலப்பாக கதைக்கிறாள். ஜென்ஸியின் தாய்க்கு அவளின் மாற்றத்தில் சந்தோசம் ஏற்பட்டாலும், அவள் கபிலோடு கதைப்பது, பழகுவது எதுவும் அவளுக்கு பிடிக்கவில்லை. ஊர்ச்சனம் கண்மூக்கு வைத்து ஏதும் கதைக்கப் போகிறார்களே என்று உள்ளூர பயந்து, ஏன் இவள் கபிலுடன் இப்படி பழகுகிறாள் என்று மனதுக்குள் குமுறினாலும் நேரிடையாக மகளைப் பேசுவதில்லை. ஏதோ அவனோடு கதைக்கும் நேரத்திலாவது மகள் சந்தோசமாக இருக்கட்டும் என்று விட்டுக்கொடுக்கிறாள்.

மணப்பந்தலின் கனவுகள் மல்லிகைப் பந்தலின் கீழ் கலைவது யாருக்குப் புரியும். அயலவர்கள் மறைமுகமாக கபிலையும் ஜென்ஸியையும் சேர்த்துக் கதைப்பது அவர்களின் மனதுக்கு புரிந்தாலும் அதைப்பற்றி பொருட்படுத்துவதுமில்லை.

"கபில் உங்களைச் சந்தித்தபின் என் மனதுக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது என்று தெரியுமா? என் தோழிகளிடமும் இதைப்பற்றிச் சொன்னேன். அவர்களும் என் மாற்றத்தைப் பார்த்து சந்தோசப் பட்டார்கள். ஆனால் உண்மையில் உனக்கும் கபிலுக்கும் காதல் பிறந்துவிட்டதா? என்று கேலிபண்ணுகிறார்கள்" என்று சொன்னாள் ஜென்ஸி.

"பரவாயில்லை. எப்படி வேண்டுமானாலும் சொல்லட்டும். அதைப்பற்றி நீ ஒன்றுக்கும் யோசிக்காதே. நடப்பது நடக்கட்டும். என்னை நீ புரிந்து கொண்டால் போதும். சரி நேரமும் 5 மணியாகிவிட்டது. நான் போயிற்று நாளைக்கு வருகின்றேன். குட் நைட்" என்று விடை பெற்றான் கபில்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள். ஜென்ஸிக்கும் லீவானதால் விடிந்ததும் எழுந்து தன் அலுவல்களை முடித்துவிட்டு கதைப்புத்தக மொன்றுடன் கட்டிலில் சாய்ந்தாள் அவள். முதல்நாள் இரவு கபிலுடன் கதைத்தவற்றை மீண்டும் ஒருதரம் நினைத்துப் பார்க்கிறாள். 'எனக்கு ஆறுதல் சொல்ல வரும் கபிலை எத்தனை பேர்கள் தப்பாக நினைத்திருப்பார்கள்? அவர்களுக்கு எப்படி எங்கள் நட்பைப்பற்றி புரியவைப்பது? நான் எப்படி கபிலைச் சந்தித்தேன்? ஏன் சந்தித்தேன்? எல்லாம் அவனால்தான்....' அவள் சிந்தனைகள் பின்னோக்கிச் சென்றன.

தொழில்நுட்பக் கல்லூரியில் நான் ஸ்ரெனோ வகுப்பை முடித்துவிட்டு வெளியே வரும்போது "ஹலோ ஜென்ஸி நீயும் இங்கேயா படிக்கிறாய்? என்ன கோஸ் செய்கிறாய்?" என்று விசாரித்தவனைப் பார்த்தேன். ஏற்கனவே அவனை எனக்குத் தெரியும். ஆனால் அன்றுதான் முதன்முதலாக என்னை கதை கேட்டான். அவனின் குடும்பம் பணத்திமிர் காட்டுவதால் என்னைப் போல் ஏழைகள் அவர்களுடன் சேர்வதில்லை. அவர்களும் சேர்ப்பதில்லை. அதனால் அவன் கல்லூரியில் என்னுடன் கதைப்பான் என்று எதிர்பார்க்கவுமில்லை. கதைத்த போதும் எதிர்க்கவுமில்லை. அவன் கேட்டதற்கு பதில் சொன்னேன். அவனும் அதே கல்லூரியில் என்.சீ.பீ.எஸ் கோஸ் செய்வதாக சொன்னான். அன்று தொடக்கம் சந்திப்புகள் தொடர்ந்தன.

ஒருநாள், "ஜென்ஸி! எத்தனை பேருடன் பழகினாலும் உன்னுடன் கதைப்பதில்தான் நான் திருப்தியடைகிறேன். உன் பொறுமையிலும் அடக்கத்திலும் பிரதிபலிக்கும் உன் அழகு எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. இப்போ உன்னைக் காணாவிட்டால் எனக்கு உறக்கம் வராது. உனக்காகத்தான் நான் இந்த உலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் வாழ்கிறேன் என்று நினைக்கிறேன். என் அன்பைப் புரிந்துகொள்வாயா ஜென்ஸி? நான் உன்னை நேசிக்கிறேன். ஐ.லவ்.யூ. ப்ளீஸ் லவ் மீ."

அவன் பாசத்தின் உணர்வுகள், அன்பின் வார்த்தைகள் என்னை நெகிழ வைத்தன. என் உடலிலும் மின்சாரம் பாய்கின்றது போல் ஓர் உணர்வு. இருந்தும் இந்தக் காதல் நிறைவேறுமா? இவன் பாசம் உண்மையானதா? என்னுள் இன்னும் எத்தனையோ கேள்விகள் தோன்றின. அவன் கேள்விக்கும் பதில் சொல்ல முடியாது தவித்தபோது,

"ஜென்ஸி! பதில் கூறமாட்டாயா? என் தாய்க்கு அடுத்ததாக நான் உன்னைத்தான் நேசிக்கிறேன். என் தாய் இல்லாத இடத்தில் நீதான் எனக்குத் துணை. ஆறுதல். உன் பாசத்துக்குரியவர்களில் முதல் ஆள் நானாகத்தான் இருக்க வேண்டும். நீ வேறு ஆண்களுடன் கதைக்கும் போது எனக்குள் பொறாமையாக இருக்கிறது. அதுதான் நான் உன்மேல் கொண்ட காதலுக்கு அடையாளமோ தெரியாது. உன் அன்புக்காக நான் ஏங்குகின்றேன். உன் அன்புதான் கிடைக்குமா? இல்லை நான் அனாதையென்று.........."

"அப்படிச் சொல்ல வேண்டாம். நீங்கள் இனி அனாதையல்ல. ஐ.லவ்.யூ. நான் உங்களுக்குத் துணையாக இருப்பேன்" என்று சொன்ன என் கரங்களைப் பற்றி அவன் பதித்த இதமான முத்தத்திற்குத்தான் எத்தனை பரிசம்.

அவன், குடும்பத்தில் கடைசியாகப் பிறந்தவன். பிறந்த போது தகப்பனை இழந்தான். தாயின் அன்பில் செல்லப் பிள்ளையாக வளர்ந்தவன் 17 வயதான போது தாயை இழந்தான். அதன்பின் சகோதரர்களின் அணைப்பில் வளரும் அவன் தாயைப் போல் ஓர் தூய்மையான அன்பை என்னிடம் தேடினான். என் முடிவுதான் சம்மதம் என்று சொன்னதும் அவனுக்குத்தான் எவ்வளவு குதூகலம்! இன்பம்! கொண்டாட்டம்.

தெருக்களும் எங்கள் காதலுக்கு வழிகாட்டும்! உடலும் எங்கள் காதல் மொழி பேசும்! 'பார்க்'கும் எங்கள் பசுமை நினைவுகளைச் சொல்லும்! தெய்வங்களும் எங்கள் வேண்டுதலை சொல்லும்! ஆம் எங்கள் அன்பைப் பகிர்ந்துகொள்ள நாம் சந்தித்த இடங்கள்தான் அந்த தெருக்கள்! கடற்கரை! பார்க்! கோயில்கள்!

சோடியாய் திரிந்த எங்களை எத்தனை சோடிக் கண்கள் பார்த்திருக்கும். என்ன கதைகளையெல்லாம் சோடித்திருக்கும். கல்லூரித் தோழர்களுக்கும், தோழிகளுக்கும் எங்கள் காதல் தெரியும். மற்றவர்களுக்குச் சந்தேகம். சிலர் நேரில் கேட்டார்கள். அவர்களுக்கு எத்தனை பொய்கள் சொல்லி மறைத்திருப்போமோ தெரியாது. எப்படியோ என் அம்மாவுக்கு தெரிந்துவிட்டது.

எனக்கும் தெரியாமல் அம்மா அவனைச் சந்தித்து "தம்பி, பணத்தைப் பொறுத்தவரையில் உங்களுக்கும் எங்களுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. இந்த நிலையில் நீங்கள் ஜென்ஸியை விரும்புவதாக கேள்விப்பட்டேன். உங்கள் வீட்டுக்காரர்களும் இந்தக் கலியாணத்திற்கு சம்மதிக்கமாட்டார்கள். அதனால் மகளின் மனதில் ஆசைகளை வளர்க்காமல் அவளை மறந்திடுங்கள். இதனால் ஒரு அவமானம் வந்தால் அவளின் வாழ்க்கைதான் பாதிக்கும். தயவு செய்து அவளை மறந்திடுங்கள்" என்று சொன்னதாக அ்வன் என்னிடம் சொல்லி மனவருத்தப்பட்டான். அப்போதுதான் நானும் சொன்னேன் "என்னையும் அம்மா நான்கேள்விப்பட்டது உண்மையா" என்று விசாரித்தா. அதற்கு நான், "அப்படி ஒன்றுமில்லை. கல்லூரியில் ஒன்றாக படிப்பதால் சும்மா பழக்கம்" என்று சொல்லி சமாளித்துவிட்டதாக சொன்னேன்.

"ஜென்ஸி, ஊருக்குள் எங்கள் விசயம் தீயாய் மூண்டுவிட்டது. புகை வரத்தான் செய்யும். என் வீட்டுக்குத் தெரிந்தால் நிச்சயமாக எங்களைப் பிரித்துவிடுவார்கள். அதனால் இனி நாம் அவதானமாக இருக்க வேண்டும். எதற்கும் நாம் சுயமாக வாழ நான் ஒரு வேலையைத் தேட வேண்டும். அதுவரையும் நாம் பொறுமையைக் கடைப்பிடித்து கல்லூரியில் மட்டும் எமது சந்திப்பை வைக்கவேண்டும்" என்று சொன்னவனின் அறிவுரைகள் நியாயமாகத் தோன்றியதால் நானும் அதற்குச் சம்மதித்தேன்.

அந்த நேரத்தில்தான் ஊரில் கலவரம் தோன்றியது. ஆண்கள் நடமாட முடியாத நிலை தோன்றியது. வசதி குறைந்தோர் மூலை முடுக்குகளில் ஒளித்திருந்து நிலைமைகளை எதிர்த்தும், சமாளித்தும் நடமாடினர். ஆனால் வசதி படைத்தவர்களோ புகலிடம் தேடி வெளிநாட்டுக்கு ஓடினர். அதே போல் தான் வசதிபடைத்த என் காதலனையும் அவனின் சகோதரர்கள் வெளிநாட்டுக்கு போகும்படி வற்புறுத்துவதாக அவன் என்னிடம் சொன்ன போது நான் செயலிழந்துதான் போனேன்.

"ஜென்ஸி! என்ன சிலையாய் போனாய்? இப்பவே இப்படியென்றால் நான் போனால் எப்படியிருக்கும்? அசடு! இன்று பூத்த மலர்போல் இருக்க வேண்டிய முகம், என்றோ பூத்த மலர்போல் வாடலாமா? 'தமிழனாய்ப் பிறந்த ஆண்களுக்கு சுதந்திரம் கெட்ட இந்த நாட்டில் என்னுயிருக்கும் ஆபத்தொன்று வந்தால் உன்னால் தாங்க முடியுமா? நான் வெளியில் போனால் ஆபத்திலிருந்து தப்பினதாகவும் இருக்கும், பணமும் சம்பாதிக்கக்கூடியதாக இருக்கும். அதன்பின் உன்னையும் அங்கேயே அழைத்திடுவேன். பின் யார் எதிர்த்தாலும் என்ன? நாங்கள் வெளிநாட்டில்தானே. இதற்கெல்லாம் யோசிக்கலாமா? எங்கே சிரிபார்ப்போம்" என்று பூச்சாண்டி காட்டினான். அவன் சொன்னது நியாயமாக தென்பட்டதால் சிரித்தேன்! மனம்விட்டு சிரித்தேன்! எதிர்காலத்தில் வெளிநாட்டில் என் அன்புக்குரியவரின் அணைப்பில் இருப்பதை கற்பனை பண்ணி சிரித்தேன் சிரித்தேன்!

வெளிநாட்டுக்குப் போக பார்த்த அலுவல்களும் சரியாகிவிட்டன. அவன் பயணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அந்நேரம் எனக்கும் அவன் பிரிவின் சோகத்தைத் தாங்கவோ என்னவோ ஸ்ரெனோ வேலைக்கு நியமனம் கிடைத்தது. உடனடியாக நியமனத்தை ஏற்றுக் கொள்ளவும் என்று அறிவுறுத்தப்பட்டதால், குறிப்பிட்ட அலுவலகத்திற்கு அவன்தான் என்னை அழைத்துக்கொண்டு போனான். நான் நியமனத்தை ஏற்றுக்கொண்ட சந்தோசத்தையும் அறிந்தபின் ஒரு கிழமையால் அவன் வெளிநாட்டுக்கு விமானம் ஏறினான்.

நாட்கள் நகர்ந்தன. மாதங்கள் இரண்டாயின. அன்று ஒருநாள் அலுவலகத்தில் 'ஜென்ஸி உன் பெயருக்கு ஃபொறின் லெட்டர் வந்திருக்குது' என்று சொல்லி என் கையில் லெட்டரைக் கொடுத்தாள் சீதா. இரண்டு மாதத்திற்குள் என் சிநேகிதியாய்ப் போனவள்தான் சீதா. கடிதத்தைப் பெற்றுக்கொண்ட என் கைகள் படபடத்தன.

முகவரியின் முத்து முத்தான கையெழுத்துக்கள் என் அன்புக்குரிய ஜெனோஸனின் கையெழுத்துதான் என உறுதியாய் தெரிந்தபின் 'ஹய்யா ஜெனோஸன்.....' உள்ளத்தில் பொங்கிய மகிழ்ச்சி என் உதட்டிலும் அவன் பெயரை உச்சரித்து விட்டது. என்ன எழுதியிருப்பான் என்று ஆவலோடு கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

என்னையறியாமல் என் உதடுகள் உச்சரித்த ஜெனோஸனை யார் என்று சீதா கேட்டாள். "ஓ! அவரா! அவர்தான் என் காதலன். என் அன்புக்குரியவர். எதிர்கால க...ண.... சும்மா போடி எனக்கு வெட்கமாயிருக்குது." நாணம் என்னைத் தடுத்தது.

ஜெனோஸன் எழுதிய ஒவ்வொரு வரிகளையும் மீண்டும் மீண்டும் பார்க்க துடித்தது. அவன் எழுதிய காதல் வரிகளுக்கும் உணர்ச்சியைத் தூண்டும் ஆற்றல் இருந்தது. அவர் கையெழுத்திலே அவரை நேரில் பார்த்தது போல் ஓர் ஆனந்தம்.,

கடிதங்கள் தொடர்ந்து வந்தன. அலுவலக ஊழியர்களுக்கும் என் காதல் தெரிந்துவிட்டது. சிநேகிதிகள் சிலர் என்னை மிஸ்ஸிஸ் ஜெனோஸன் என்று பகிடியாக அழைப்பார்கள். அந்த அழைப்பில்தான் எனக்கு எத்தனை சந்தோசம்.

இரண்டு வருடங்களாக கடிதத் தொடர்பு மூலம் அன்பைப் பகிர்ந்தும் துன்பத்தைப் பகிர்ந்தும் கனவுகண்ட எனக்கு என் கனவுகள் எல்லாம் கலைந்து போக வந்தது அந்தக் கடிதம். ஆறாத்துயரில் என்னை ஆழ்த்திவிட்ட கடிதத்தை எப்படி மறப்பேன்?

**'என் அன்பின் ஜென்ஸி,**

இக்கடிதத்தை வாசித்ததும் கடவுள்தான் உன்னைக் காப்பாற்ற வேண்டும்.

உன்னை மறக்கமுடியாத நிலையில் இருக்கும் போது நான் இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டுவிட்டேன். நான் இங்கு வந்த சில நாட்களில் என் வயிற்றில் கட்டியிருப்பதாக ஆப்பிரேஷன் செய்தது உனக்குத் தெரியும்தானே? அந்த நேரம் என் சிநேகிதனின் குடும்பம்தான் என்னை ஆதரித்தது. ஆனால் அவர்கள் ஆதரித்ததன் அர்த்தம் இப்போதுதான் எனக்குப் புரிகிறது. அவனுக்கு விஜி என்றவொரு தங்கை இருக்கிறாள். அவள் என்னைக் காதலிக்கிறாளாம். அவளின் விருப்பப்படி திருமணத்தை செய்துவைக்க அவளின் பெற்றோர்கள் என்னை வற்புறுத்துகிறார்கள். எனக்கு சிலோனில் காதலி இருப்பதாக எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அதை அவர்கள் கேட்பதாக தெரியவில்லை. சிலோனில் இருக்கும் என் அண்ணாவுக்கு கடிதம் போட்டு, விஜியை திருமணம் செய்ய என்னை சம்மதிக்க வைக்கும்படியும், அவர்களையும் சம்மதிக்கும்படியும், ஏதோ சீதனங்களும் அள்ளித் தருவதாகவும் கேட்டு கடிதம் போட்டிருக்கிறார்கள். அண்ணாவும் விஜியைச் செய்ய பொருத்தங்கள் பார்த்திருக்கிறார். என் கஸ்ட காலம். சாதகங்களும் பொருந்திவிட்டன. விஜியை செய்யச் சொல்லி அண்ணாவும் கடிதத்திற்கு மேல் கடிதம் போட்டுவிட்டார். அதன் பின் அண்ணாவிற்கு உன்னை விரும்புவதாகவும், உன்னைப் பற்றிய விபரங்களையும் எழுதிப் போட்டேன். அதற்கு அவர் உன்னிடம் சீதனம் வாங்க வசதியெண்டால் வாங்கிச் செய்யலாமாம். ஆனால் உனக்குச் சீதனம் தர வசதியிருக்காதாம். நீயென்ன அவளைச் செய்து அவளின் சகோதரிகளின் பொறுப்புகளையும் உன் தலையில் சுமத்தி கஸ்டப்படப் போகிறாயா? நீ அவளை மறந்திடு. உன்னை வளர்த்த நன்றியிருந்தால் எங்கள் விருப்பப்படி செய். அது மட்டுமல்ல. நான் வருத்தமாயிருந்த போது என்னை ஆதரித்த நன்றிக்காவது விஜியைச் செய்யச் சொல்லி எழுதியிருக்கிறார். இல்லையெனில் தங்களை மறக்கட்டாம்.

'ஜென்ஸி நான் இதை எழுதுவதால் உன் மனம் வேதனைப்படுவதை என்னால் உணர முடிகிறது. இருந்தும் நான் இங்கு வந்து இரண்டு வருடமேயானதால் சிற்றிசனும் கிடைக்கவில்லை. அதனால் உன்னையும் ஸ்பொன்ஸர் பண்ணி கூப்பிட முடியாது. அது மட்டுமல்ல வருத்தமாயிருந்ததால் உழைப்புமில்லை. கையிலும் காசு இல்லை. இந்த நிலையில் எனக்காக நீ இன்னும் எவ்வளவு காலம் காத்திருப்பாய்? உனக்கும் தெரியும்தானே நான் தாய் தகப்பனை இழந்தபோது அண்ணாதான் என்னை வளர்த்தவர் என்று. தாய் தகப்பனை இழந்த எனக்கு அவர்கள் என் விருப்பப்படி நடக்கவிடுவார்கள் என்ற ஒரு நப்பாசையினால்தான் உன்னைக் காதலித்தேன். ஆனால் தன்மானம், சுயநலம் என் அண்ணாவையும் விட்டு வைக்கவில்லை. சீதனம் வாங்கினால்தான் கௌரவம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களை எதிர்க்கவும் என்னால் முடியவில்லை. எதிர்த்தால் எனக்கு ,வளர்த்த நன்றியில்லையென்று சொல்கிறார்கள்.

"ஜென்ஸி, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. உங்களால் 5 இலட்சம் சீதனமாக யாரிடமாவது மாறிக்கொடுக்க முடியுமென்றால் அண்ணனிடம் கதைத்துப் பாருங்கள். அப்படி அவர் எங்கள் திருமணத்திற்கு சம்மதித்தால் பின் நான் உழைத்து அவருக்குத் தெரியாமல் கடனைத் தீர்க்கிறேன். இல்லையெனில் என்னை நீ மறப்பதுதான் நல்லது. எங்கள் காதலைப் பற்றி எல்லோருக்கும் தெரிந்தபின் இன்னொருத்தனுடன் எப்படி வாழ்வது? யார் என்னை வாழ வைக்க வருவார்கள் என்று யோசிக்கிறியா? ஜென்ஸி உன் அன்பைப் புரிந்து கொள்ள என்னைவிட ஒரு அன்பானவன் கிடைப்பான். கவலையை விடு. நீதான் தவறு செய்ததாக எண்ணாதே. தவறு செய்யாதவன் ஒருவருமேயில்லை. உன் தவறை நீ திருத்திவிட்டதாக எண்ணி என்னை மறந்திடு. கண்ணகிபோல் வாழ வேண்டுமென்றெண்ணி என்னையே நினைத்து வாழ்க்கையை வீணாக்காதே.....'

நீண்டதொரு கடிதம். வாசித்துக் கொண்டிருக்கும் போதே என் தலையில் தான் உலகம் சுற்றுவது போல் ஒரு பிரமை. என் கண்ணில்தான் நீர் ஊற்றெடுப்பது போல் ஓர் உணர்வு. உடல் முழுவதும் கிடுகிடுவென நடுங்கியபோதும் என் இதயத் துடிப்பு நின்றுவிட்டது போல் ஓர் உணர்வு. என் கண்ணுக்கு எதுவும் புலப்படாமல் இருளாகி சுய நினைவை இழந்தேன்.

கண்விழித்து பார்த்த போது அருகில் அலுவலக சிநேகிதிகள். அப்போதுதான் நான் புரிந்தேன், மயங்கிப் போனதால் சிநேகிதிகளின் முதலுதவியுடன் நான் நினைவு பெற்றேன் என்பதை. அதற்கிடையில் அலுவலகத்தில் கசமுசாவென்று ஏதோவெல்லாம் கதைத்துக் கொண்டிருந்தார்கள். என்ன நடந்தது என்று என்னை விசாரித்தார்கள். அவர்களுக்கு என் வாயில் வந்த பொய்யெல்லாம் சொல்லி சமாளித்தேன். வாய்விட்டு அழமுடியாமல் அழுவதை அடக்கியதால் என் நெஞ்சை அடைப்பது போலிருந்தது. அதன் வலியைத் தாங்கிக்கொண்டு லீவு எடுத்து வீட்டுக்குச் சென்றேன்.

வீட்டுக்கு வந்ததும் ஓவென்று வாய்விட்டு கதறினேன்! கதறினேன்! என் கதறலின் சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடிவந்தனர். என் நிலையை அறியமுடியாதும், சமாளிக்க முடியாதும் அம்மாவும், சகோதரர்களும் கூடி நின்றவர்களும் தவித்தனர். என் நிலைமை அம்மாவுக்கு விளங்கிவிட்டது போலிருக்கிறது. அதனால் வந்தவர்களை சமாளிக்க எனக்கு நெஞ்சுக் குத்து என்று சொல்கிறதா? வந்தவர்களும் ஒவ்வொரு வைத்தியங்களைச் செய்யும்படி கூறுவார்கள். நிலைமை மோசமாகி விடுமோ என்று பயந்து அழுவதை அடக்கிவிட்டு தலையணையில் முகம் புதைத்து விம்முகின்றேன்.

கூடி நின்றவர்கள் விலகிப் போனதும் அம்மா என் நிலைமைக்கான காரணத்தை கேட்டபோது சொல்ல முடியாது அழுதழுது விபரங்களை சொன்னேன். அதன்பின் அம்மாவும் பேசத் தொடங்கிவிட்டா. அப்பவே நான் சந்தேகப்பட்டு கேட்டபோது அப்படி ஒன்றுமில்லை என்று பொய் சொல்லி என்னை ஏமாற்றினாய்தானே. இப்ப அழுது என்ன பிரயோசனம். எங்கட கஸ்டத்தை தெரியாமலா பணக்கார- அதுவும் இரக்கமில்லாத குடும்பத்தில் காதலித்தாய்? அவர்களுடன் சம்பந்தம் வைக்க அப்பர் என்ன மிச்சம் பிடித்தா

(அடுத்த பக்கம்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அரைப் பக்க கற்பனை இதழ்

அரைப் பக்க சுவாரசியம்

## பலூன் வியாபாரிகளின் போட்டி குண்டு வெடிப்பில் முடிந்தது

நேற்றுமாலை 4.32 மணியளவில் கொழும்பில் இருவருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தகராறு ரீமோட் கொண்ரோல் குண்டு வெடிப்பாக முடிந்தது.

இது பற்றிக் கூறப்படுவதாவது: பலூன் வியாபாரிகள் இருவருக்கிடையே யார் அதிக பலூன் விற்பது என்பதில் நீண்ட காலமாகவே போட்டி இருந்து வந்தது. நேற்று போட்டி வாய்த்தகராறு என்ற அளவுக்கு ஊதி வளர்ந்தது.

இதே சமயத்தில் நேற்று மாலை 4.33 மணியளவில் அப்பகுதியில் ரீமோட் கொண்ரோல் மூலம் இயக்கப்படும் சக்திவாய்ந்த குண்டொன்று வெடித்தது.

இது பலூன் வியாபாரிகளுக்கிடையே ஏற்பட்ட தகராறின் விளைவென்றும் - இதற்கு எவ்விதமான இனவாத நோக்கமும் காரணம் அல்லவென்றும் சட்டம் ஒழுங்குத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

பலூன் வியாபாரிகளின் குண்டு செய்யும் தொழில் நுட்பத்திறன் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

வீதிச் சண்டைகளில் இப்போது கற்கள் - தடிகள் - கத்திகள் பாவிப்பது அரிதாகி வருவதால் வெடிகுண்டுகளை அவர்கள் நாகரிகம் கருதி பாவித்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## தேநீர் அருந்தும் போது திக்.திக்.

நேற்று முன்தினம் கூட்டணி உறுப்பினர்கள் சிலர் புலிகளின் தலைவர் பிரபாகரனை அவரது கொழும்பு வாசஸ்தலத்தில் சந்திக்க வந்தனர்.

வன்னிக்காட்டில் வாழ்ந்துவரும் தமது தலைவர் திரு. சிவாவின் பிரதிநிதிகளாக அவர்கள் பிரபாவைச் சந்தித்தனர்.

தாம் சோதனையிடப் படக்கூடாது என்று அவர்கள் அடம் பிடித்தபோதும் கடுமையாக சோதனையிடப்பட்ட பின்னரே பிரபாவைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர்.

பேச்சின் இடையே தேநீர், பிஸ்கட் என்பனவும் பரிமாறப்பட்டன. கூட்டணிப் பிரதிநிதிகள் தேநீர் அருந்தி முடிக்கும் வரை அவர்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் பிரபா.

முன்னர் கூட்டணித்தலைவர் அமிர்தலிங்கத்தை யாரோ சிலர் சுட்டபோது நடந்த சம்பவத்தின் நினைவில்தான் பிரபா அப்படியிருந்தார் என்கிறார்கள்.

திரு. அமிர்தலிங்கத்தை சுட்டவர்கள் பிஸ்கட் சாப்பிட்டு தேநீர் அருந்திய பின்னரே சுட்டனர் என்று திரு.சிவா முன்னர் கூறியிருந்ததை திரு.பிரபா மறக்கவில்லை.

எனினும் கூட்டணி உறுப்பினர்கள் நாகரிகமாக நடந்து கொண்டதால் எந்த விபரீதமும் ஏற்படவில்லை.

பேச்சுக்கள் தேநீரை விடச் சுவையாக இருந்ததாகவும், பிஸ்கெட்டை விட கனமாக இருந்ததாகவும் இரு தரப்பும் தெரிவித்துள்ளன.

## இந்திய அரசு அழைப்பு! விசேச விமானத்தில் பிரபா!!



இந்திய அரசு புலிகள் அமைப்பின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனை தன் நாட்டுக்கு சுற்றுப் பயணம் ஒன்றுக்கு அழைத்திருக்கிறது.

விசேச விமானம் அனுப்பப்பட்ட போதும் ஏனைய தமிழ் அமைப்பு தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தால் மட்டுமே தன்னால் அங்கு வரமுடியும் என்று பிரபா உறுதியாக தெரிவித்து விட்டார்.

அதனையடுத்து ஏனைய தமிழர் அமைப்புத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்றும், சக தமிழ் அமைப்புக்கள் மீது அக்கறை கொண்டுள்ளது மட்டுமல்லாமல் அவற்றின் உரிமைகளுக்காகவும் பிரபா குரல் கொடுப்பதையிட்டு மெச்சுவதாகவும் இந்திய அரசு தெரிவித்தது.

நேற்று மாலை இந்தியத் தலைநகர் சென்ற பிரபாவுக்கு செம்பூனைப் படையினர் சிறப்பான பாதுகாப்பு வழங்கினர்.

இன்று முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட ஸ்ரீபெரும்புத்தூர் பகுதியை பார்வையிடவும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்யவும் பிரபா செல்லவுள்ளார்.

## அரசியலில் குதித்தார் டிஸ்கோ! தமிழக அரசியலில் பெரும் அதிர்வு!!

தமிழக அரசியலில் பிரபல நடிகை டிஸ்கோ சாந்தி திடீரென்று குதித்துள்ளார். அவர் திடீரென்று குதித்ததால் தமிழக அரசியலில் பெரும் அதிர்வு ஏற்பட்டுள்ளது.

பிரச்சாரக் கூட்டங்களில் அலுப்பூட்டும் பேச்சுக்களுக்குப் பதிலாக களிப்பூட்டும் நடன வீச்சுக்களை வழங்கப் போவதாக அவர் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அவரது கூட்டங்களுக்கு பெருந்தொகையானோர் கூடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்த்தரப்புக் கட்சிகள் இது பற்றிக் கூடி ஆராய்ந்தன.

அரசியலின் தரம் தாழ்ந்துவிட்டது என்று கவலை தெரிவித்த மூத்த தலைவர் ஒருவர் நேற்று நடிகை அபிலாஷாவைச் சந்தித்து மூன்று மணி நேரம் தனியாக ஆலோசனை நடத்தினார்.

அபிலாஷாவை அரசியலுக்கு கொண்டுவரும் முயற்சியில் மட்டுமே அவர் ஈடுபட்டதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## புஷ் மீண்டும் ஜனாதிபதி

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் புஷ் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இளம் தலைமுறை பொறுமையின்றி வேகமாகச் செயல்படுவதால் மக்கள் பழைய தலைமுறை மீது நம்பிக்கை கொள்ளத் தொடங்கிவிட்டனர் என்று புஷ் தெரிவித்தார்.

அவர் தான் பதவியேற்பதற்கு முன்னர் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனைச் சந்தித்துப் பேசி அவரது அன்பைப் பெறவிரும்புவதாகவும் கூறியுள்ளார்.

## நாஞ்சில் மனோகரன் கட்சி தாவினார்!

"தி.மு.க.வில் விலத்தப்பட்ட போதும் அதுவே எனது உயிர் மூச்சு" என்று கூறியபடியே திரு. நாஞ்சில் மனோகரன் நேற்று அ.தி.மு.க.வில் இணைந்தார்.

"இப்போதும் தி.மு.க.தான் என் உயிர்மூச்சு. அது. தி.மு.க. இது அ.தி.மு.க. இங்கும் தி.மு.க. என்ற மூன்றெழுத்து இருக்கிறது. அதனால் தான் அன்னை ஜெயலலிதாவின் பாசக்கரங்களுக்குள் சரண்புகுந்தேன். தமிழ் நாட்டை பிடித்த ஆபத்து என்று முன்னர் நான் ஜெயலலிதாவைக் குறிப்பிட்டேன். இப்போதும் அப்படித்தான் கூறுகிறேன். அவரது துணிச்சல் எதிரிகளுக்கு ஆபத்தானது என்பதையே அன்றும் சொன்னேன். இன்றும் சொல்கிறேன்" என்று நாஞ்சில் மனோகரன் கூறினார்.

---


ஸ்போர்ட்ஸ்

## அடக்கம் + அசாத்திய திறமை = மனோஜ் பிரபாகர்!

இந்திய கிரிக்கெட் அணியில் அடக்கமான ஆனால் அசாத்தியமான திறமையாளர் மனோஜ் பிரபாகர்.

வேகப்பந்து வீச்சில் இந்திய அணியின் பலவீனத்தை ஈடுசெய்வதில் பிரபாகரின் பங்கு கணிசமானது.

இன்னும் சில ஆண்டுகளில் கபில் விட்டுச்செல்லவுள்ள இடத்தை நிரப்பக்கூடிய தகுதி



கொண்டவராகவும் விளங்குகிறார்.

அணிக்காக எதையும் செய்பவர். சளைக்காமல் போராடுபவர். அதனால் "ஃபைட்டர்" என்று பட்டப் பெயரும் உண்டு.

கிரிக்கட் உலகில் வெகு பிரபலமான போதும் பந்தா இல்லாத வீரர்.

மனோஜ் பிரபாகர் இன்று வசதியோடு வாழும் போதும் பழைய வாழ்க்கையை மறந்து விடவில்லை.

தனது கிரிக்கட் பையுடன் பஸ்ஸில் முண்டியடித்து-பயணிகளின் வசைகளுக்கு இலக்காகி டில்லியில் பயிற்சி செய்த நாட்களை அவர் மறக்கவில்லை.

தனது பள்ளித்தோழர்கள் -பயிற்சியாளர்கள் மற்றும் சக கிரிக்கட் வீரர்களோடு இன்றும் தொடர்பு வைத்திருக்கிறார்.

மனோஜ் பிரபாகரின் சளைக்காத போராட்டக் குணத்திற்கு உரமூட்டுவது அவரது தினசரி உடற்பயிற்சி.

*பெயர் - மனோஜ் பிரபாகர்*
*வயது - 30*
*கிரிக்கெட் அணியில் இணைந்த ஆண்டு: 1984-85ல். இங்கிலாந்து அணிக்கு எதிராக டெஸ்ட் வாழ்க்கையை தொடங்கினார்.*
*விளையாடிய டெஸ்ட்- தற்போதைய இலங்கையுடனான ஆட்டங்கள் தவிர 27 டெஸ்ட். 1135 ரன்கள். சராசரி 32, 42:91 விக்கெட்டுக்கள்.*
*ஒரு நாள் போட்டி: 91 போட்டிகள். 868 ரன்கள். சராசரி. 18: 86; 112 விக்கெட்டுக்கள்.*

கிரிக்கெட் சீசன் இல்லாத காலங்களிலும் .கடின பயிற்சிக்கு விடை கொடுப்பதில்லை.

மனோஜ்பிரபாகருக்கு ஒரு மகன் இருக்கிறார். தனது மகன் ரோகனுடனும் மனைவி சந்தியாவுடனும் ஞாயிறு ஓய்வு நாளைக் கழிக்கிறார்.

பந்துவீச்சில் மட்டுமல்ல பாட்டிங், ஃபீல்டிங் போன்ற சகலதுறைகளிலும் சவால்களை எதிர்கொள்வதுதான் பிரபாகரின் தனிச்சிறப்பு.

இலங்கை அணியும் பிரபாகரின் பந்துவீச்சால் நிலை குலைந்து போனமையை நேரில் கண்டோம்.

இலங்கை- இந்திய அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டிகள் பற்றிய சூடான அலசல் அடுத்தவாரம்.

---

(17ம் பக்கத்தொடர்ச்சி)

### மறுமலர்ச்சி தோ....

வைத்திருக்கிறார்? அவரின் உழைப்பு உங்கட படிப்புக்கும், சாப்பாட்டுக்கும் தான் சரி. உங்கட கலியாணத்திற்கு.....?"

அம்மாவின் பேச்சுக்கிடையில் "யாரிடமாவது கடன்பட்டு செய்து வைத்தால் பிறகு அவர் உழைத்துக் கொடுப்பார்" என்றேன்.

"இந்தக் கலியாணம் தான் வேணுமென்பதில் அப்படியென்ன உனக்கு கண்டறியாத ஆசை. பக்கத்து வீட்டிலும் பிள்ளைகள் உழைத்து தாய் தகப்பனோடு சந்தோசமாகத்தானே இருக்குதுகள். உங்களை மாதிரி நினைத்த கலியாணமா கேட்குதுகள்?" என்று தன் ஆத்திரத்தாலும், ஆற்றாமையாலும் பேசினா.

அவமானத்திற்குள்ளும் ஓர் அவமானம். கண்டறியாத ஆசையா? கலியாணம் தேவையா? என்று அம்மா பேசியது. எல்லாம் யாரால் வந்தது. அந்த ஜெனோஸனால்தான். அவர் மனதில் மட்டும் உறுதியிருந்தால் எப்படியும் என்னை கலியாணம் செய்ய சம்மதித்திருப்பார். காதலித்த பின் கடைசி நேரத்தில், அன்னையின் சொல்லுக்கு அடங்கும் ஆண்களைப் போல் ஜெனோஸனும் கடைசி நேரத்தில் அண்ணனின் சொல்லுக்கு அடங்கிவிட்டாரே. என் கஸ்ட நிலையைத் தெரிந்து என்னைக் காதலித்த போது அவரை தெய்வமாக மதித்தேனே. இப்போது தானும் ஒரு சராசரி ஆண் என்று நிரூபித்துவிட்டாரே.

என் வேதனைகளை ஜெனோஸனும் கூட புரிந்து கொள்ளவில்லை. மற்றவர்களாலும் இதை தீர்த்துவைக்க முடியவில்லை. இந்த நிலையில் தான் நான் யாரோடும் கதைக்க விருப்பமில்லாமலும், சாப்பிட மனமில்லாமலும், எதையும் இரசிக்க பற்றில்லாமலும் இருந்தேன். என்னை ஜெனோஸன் மட்டுமல்ல அவனுக்கு உடந்தையாயிருந்து கடவுளும் என்னை ஏமாற்றிவிட்டான் என்று நினைத்தபோது தெய்வங்களும் எனக்கு கல்லாகத் தோன்றின. வேலைக்குப் போனாலும் வேலையிலும் நாட்டமில்லை. இருந்தும் அதிகாரிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்து பி.ப. 4.30 மணி வரையும் என் மனதைக் கட்டுப்படுத்துகின்றேன். வீட்டுக்கு வந்ததும் ஏதோ நரகத்திற்கு வந்துவிட்டது போல் நிம்மதியிழந்து சித்தப்பிரமை பிடித்தது போல் தனிமையில் யோசித்து யோசித்து அழுகிறேன்.

ஏதோ நான் யோசித்து ஒரு முடிவுக்கு வரட்டும் என்று நினைத்து என்னைத் தனிமையில் விட்டு எல்லோரும் விலத்தி நடந்து கொள்கிறார்கள். என் நடத்தையில் சந்தேகப்பட்டு அயலவர்களும் என்னுடன் தொடர்பு கொள்வதை விட்டுவிட்டனர். அந்த நேரத்தில்தான் பக்கத்துவீட்டில் தன் சிநேகிதனைத் தேடிவரும் கபில்ராஜ் சில நாட்களாக என் தனிமையை அவதானித்து காரணத்தை கேட்க என்னைச் சந்திக்கிறான்.

அறிமுகமே இல்லாத அவனுக்கு எப்படி எடுத்தவுடன் என் காதலின் ஏமாற்றத்தை சொல்வேன். எதுவும் நடக்கவில்லை. ஆனால் வாழ்க்கை வெறுத்துவிட்டது என்று மட்டும் சொன்னேன்.

"இந்த வயதில் வாழ்க்கை வெறுப்பதென்றால் ஏதும் காரணம் இருக்கும். அதை நீங்கள் எனக்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால் வாழ்க்கை வாழ்வதற்கே. எந்தப் பிரச்சினைகளையும் சமாளித்து எதிர்நீச்சல் போட்டு வாழப்பழக வேண்டும். அதை விட்டுட்டு யோசித்துக் கொண்டிருந்தால் வருத்தம்தான் வரும். மனதை மாற்றி மற்றவர்களைப் போல் சிரித்து கதையுங்கள். பொழுது போக பீச், சினிமா என்று போங்கள். இல்லையெனில் கதைப்புத்தகம் வாசியுங்க. 'மனதுக்கு ஆறுதலாயிருக்கும்."

என்று அறிவுரை கூறினான் கபில். "உங்களுக்கு கவலையென்று பைத்தியம் போல் தனிமையில் யோசித்து நீங்கள் அழுது கொண்டிருக்கும் போதே மற்றவர்கள் கவனிக்காமல் தங்கள் பாட்டில் திரிகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் நீங்கள் அழுதாப்போல் உங்களில் இரக்கம் காட்டி உங்கள் பிரச்சனையைத் தீர்த்து விடுவார்களா? ஏனோ தெரியாது உங்களின் தனிமையை அவதானிக்க எனக்கு ஏதோ உங்களில் அனுதாபம் ஏற்பட்டது. அதுதான் உங்கள் பிரச்சனையை நேரில் கேட்டறிய வந்தேன்."

முதல் சந்திப்பிலே அவன் சொன்ன அறிவுரைகள் ஏதோ என்னுடன் பலநாட்கள் பழகிய உரிமையில் சொல்வது போலிருந்தது. 'நீங்கள் சொன்னதற்காக என்னை மாற்றிக் கொள்ள முயற்சி செய்கிறேன்' என்று சொல்லி அன்றைய கதையை முடித்தேன்.

தன் அறிவுரை பயன்பட்டதா என அறிய மீண்டும் என்னை சந்திக்க கபில் வந்தான். சந்திப்புகள் பலமானதும், அவன் எண்ணங்கள் தூய்மையானவை என அறிந்த பின் கல்லூரியில் தொடங்கின எம் காதல் சீதனமாக பணம் கொடுக்க முடியாது ஒரு கடிதத்துடன் முடிவுற்றது வரையும் ஒன்றும் விடாமல் கூறினேன்.

என் கதையைக் கேட்டு தைரியம் சொல்ல வந்தவனும் ஒரு கணம் கண்கலங்கித்தான் போனான். "உங்கள் கவலையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஏமாற்ற நினைப்பவர்களை ஒருவரும் ஏமாற்றுவதில்லை. ஏமாற்றக் கூடாது என்று நினைப்பவர்கள் ஏமாந்து போகிறார்கள். அதாவது நானும் ஒரு பெண்ணைக் காதலித்தேன் . அவளுக்கு ஓர் உத்தியோகம் கிடைத்தது. ஆனால் என் உத்தியோகம் நிரந்தரமாக இல்லாமல் அமய நியமனமாக இருந்ததால் அவள் என்னை ஏமாற்றி வேறு ஒரு உத்தியோகத்தனை கலியாணம் செய்து கொண்டாள். அவள் மீது உயிரை வைத்திருந்த நான் அந்நேரம் ஆணாயிருந்தும் என் மனதை மாற்ற முடியாமல் எல்லாம் வெறுத்து துறவிபோல்தான் வாழ்ந்தேன். பின் என் சிநேகிதர்கள்தான் என்னை மாற்றினார்கள். இன்று நீங்கள் இருந்த நிலை அன்று நான் அனுபவித்ததால்தான் உங்கள் நிலைமையை என்னால் உணரமுடிந்தது."

அவனும் தன் காதலின் ஏமாற்றத்தின் காரணத்தைச் சொன்ன போதுதான் நான் புரிந்தேன். அன்பொன்றினால் காதல் வெல்லுமா? சாதி, சமயம், பணம், பதவி, அந்தஸ்து, உறவுகள் இத்தனை தடைகளையும் தாண்ட வேண்டுமே என்று.

கடிகாரத்தில் மதியம் 12.00 மணியடித்த போதுதான் என் சிந்தனை கலைந்தது. அடடா இன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாளாயிற்றுதே. இந்நேரம் கபில் என்னைத் தேடி வருவார். நான் யோசித்துக் கொண்டிருப்பதை பார்த்தால் என்ன நினைப்பார்? தன் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்காமல் பழையதை நினைத்துக்கொண்டிருக்கிறேனே என்று பேசுவாரே. தன் அறிவுரையை உதாசீனம் செய்வதாக எண்ணி என்னை வெறுப்பாரே. சீ. என்னை வாழ வைக்க துணிவில்லாத, மனமில்லாத ஜெனோஸனை நான் நினைத்துவிட்டேனே. அவனை முற்றாக மறந்து மறுமலர்ச்சி ஏற்பட என்னை நான் மாற்றிக் கொள்ளவேண்டும் என்று எண்ணிக்கொண்டு இடத்தைவிட்டு எழும்பியபோது என் மனம் குளிர வாசலில் கபில் நின்றான்.

(யாவும் கற்பனை)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பிறர் நலம் பேண தன் நலம் உயரும்

ஒருமுறை நாட்டில் கடும் பஞ்சம். பஞ்சத்தைப் போக்க கவுசிகர் யாகம் செய்ய விரும்பினார். யாகத்திற்கு எந்தப் பொருளும் கிடைக்கவில்லை. ஒரு நாய் வால் தான் கிடைத்தது. அதைத் தேவேந்திரனுக்கு அர்ப்பணித்து யாகம் செய்தார்.



தேவேந்திரன் பதறிப் போய் அங்கு தோன்றினான்.

"முனிவரே, நிறுத்துங்கள். இது அநியாயம். நாய் வாலையா எனக்கு ஆஹுதி செய்வது?" என்றபடி தன் வில்லின் நுனியால் நாய் வாலை அகற்றினான்.

"இங்கே கிடைத்த உணவு இதுதான். மனிதர்கள் தங்களுக்குக் கிடைத்ததைத்தானே தேவர்களுக்கு அளிப்பது வழக்கம். இது பஞ்சகாலம். கிடைத்ததை ஏற்றுக் கொள்ளுங்கள்," பதறாமல் கூறிய கவுசிகர், நாய் வாலைத் திரும்ப எடுத்து வைத்தார்.

"பஞ்சம் மற்றவர்களுக்கு," என்ற தேவேந்திரன், திரும்பவும் நாய்வாலை அகற்றி விட்டு அதில் அமிர்தத்தைப் பொழிந்தான்.

"தாங்கள் அளித்த அமிர்தத்தால் நான் ஹோமம் செய்ய மாட்டேன். அதை நான் சாப்பிடப்போவதுமில்லை. நாய் வாலிலிருந்து தப்பித்தால் போதும் என்பதற்காக எனக்கு அமிர்தம் தருகிறீர்கள். அதைச் சாப்பிட்டு நான் அமரனானால் போதும் என்று சுயநலவாதியாக இருக்க என் இயல்பு இடந்தரவில்லை" என்று உறுதியாக மறுத்தார் கவுசிகர்.

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?" என்று எந்த அமிர்தம் வேண்டித் தேவர்களாகிய தாங்கள் போராடினார்களோ, அதை துச்சமாக மதித்து ஒதுக்கிய, அம்மாமனிதர் முன் தன் தலை தாழ்ந்துபோகக் கேட்டான் தேவேந்திரன்.

"தேவேந்திரரே! உமதருளால் பூமியில் மழை பொழியட்டும். பயிர் பச்சைகள் செழித்து வளரட்டும். உலகம் முழுவதும் வளம் கொழிக்கட்டும்!" என்றார் கவுசிகர்.

"அப்படியே" என்று தேவேந்திரர் கூற அப்போதே மழை பெய்தது. தேவ அற்புதமாக எங்கும் பயிர்களும், தானியங்களும் நிறைந்தன. ஆனந்தக் கண்ணீர்மல்க வணங்கினார் கவுசிகர்.

"கவுசிகரே இன்று உம்மால் உலகம் உயர்ந்தது. ஒரு நண்பனின் நலனைக் காப்பது போன்று, இவ்வுலகத்தின் நலனைக் காத்த தாங்கள் இவ்வுலகிற்கே நண்பர். இன்று முதல் உமது பெயர் விஸ்வாமித்திரர் (உலகத்தின் நண்பர்) என்று வழங்கும். உம்முடைய சுயநலமற்ற இந்தக் குணத்தினால் இறைவனையும் வென்று விடுவீர்கள்." என்றான் தேவேந்திரன்.

பிறர் நலம் பேணுவதே சிறந்த யாகம் என்று உணர்த்தியது இந்து மதம்.

## ஆன்மீகம்

### பிரார்த்தனைக்குச் செவி சாய்ப்பவர்

பெரும்பாலான நேரங்களில் மனிதனுக்குச் சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது. இறைவன் நமது பிரார்த்தனைக்குச் செவி சாய்க்கிறாரா? நமது பிரார்த்தனைக்குப் பலன் அளிக்க வல்லவரா? என்று.

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.

(லூக்கா 11:9)

என்கிறது கிறிஸ்தவம். அது மட்டுமல்ல, நமது பிரார்த்தனைகளைக் கடவுள் ஒரு போதுமே மறப்பதில்லை, புறக்கணிப்பதில்லை. "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை."இது இறைவாக்கு. எத்தனை ஆறுதலான வாக்குத்தத்தம்.

எருசலேமை எசேக்கியா என்ற ராஜா அரசாட்சி செய்து வந்தான். அவன் வியாதியால் மரணத்துக்கு ஏதுவாயிருந்தான். ஏசாயா என்றொரு தீர்க்கதரிசி எசேக்கியாவிடம் வந்து "நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்கு படுத்தும். நீர் பிழைக்க மாட்டீர். மரித்துப் போவீர் என்று கர்த்தர் சொல்கிறார்," என்றார்.

எசேக்கியாவோ பிரார்த்தனை செய்யத் தொடங்குகிறான்.

மனது ஒரு நிலைப்பட்டு இறைவனிடம் விண்ணப்பித்தான். "நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்" என்றுகூறி அழுதான். கடவுள் அவனது பிரார்த்தனைக்குச் செவி சாய்த்தார். எசேக்கியாவுக்கு வாக்குத்தத்தம் அருளினார். "உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன். இதோ உன் நாட்களோடே பதினைந்து வருசம் கூட்டுவேன்."

ஆமாம், எந்தச் சூழ்நிலையிலும் நமது பிரார்த்தனைக்கு இறைவன் செவி சாய்க்க வல்லவராய் இருக்கிறார்.

## உன்னைத் திருத்த ஒன்றைக் கைவிடு

ஒரு நாள் ஒரு மனிதன் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களின் முன் வந்து, "நாயகமே, நான் மது உண்ணல், விபச்சாரம், திருடுதல், பொய் சொல்லுதல் இந்த நான்கு பாவங்களையும் செய்கிறேன். இவை பெரும் பாவங்கள் என்று அறிந்தும் அவற்றை விட்டொழிக்கமுடியாமல் இருக்கிறேன். தாங்கள் தான் எனக்கு நல்ல வழி காட்ட வேண்டும்," என்று இறைஞ்சினான்.

"அப்படியா நண்பனே, அவ்வாறானால் நீ முதலில் ஒரு தீய பழக்கத்தை விட்டுவிடச் சபதம் செய். அதாவது இனிமேல் பொய்யுரை பகர மாட்டேன் என்று உறுதி கொள்" என்று நாயகம் அவர்கள் அவனுக்கு உபதேசித்தார்கள்.

அம்மனிதனோ அதை இலோசான காரியமாக எண்ணி, இனி நான் எக்காரணம் கொண்டும் பொய்யுரைக்க மாட்டேன்," என்று சபதம் செய்தான்.

இரவு வந்தது. அம்மனிதன் மனதில் கள் குடிக்கவும், அதற்காகத் திருடவும், விபச்சாரம் செய்யும் எண்ணம் முகிழ்த்தது. ஆனால் மனச்சாட்சியோ, "நாளைக் காலையில் நாயகம் அவர்களைப் பார்ப்பாய். அவர்கள் இரவில் என்ன செய்தீர் என்று கேட்டால் என்ன மறுமொழி கூறுவாய்? அவர்களிடம் பொய் சொல்ல மாட்டேன் என்று சபதம் செய்துள்ளாய். மேற்படி காரியங்களைச் செய்துவிட்டுப் பொய் பேச வேண்டியிருக்குமே? ஆகவே எல்லாப் பாவங்களையும் விட்டுவிடு," என்று உறுதியாய்க் கூறியது.


மறுநாள் காலையில் அவன் நாயகம் அவர்களிடம் சென்றான். "நாயகமே, நான் பொய் சொல்லமாட்டேன் என்று உங்களிடம் சபதம் செய்தேன். ஆனால் தாங்கள் விடச் சொன்ன ஒரு பாவச் செயல், என்னிடமிருந்த எல்லாப் பாவச் செயல்களையும் போக்கி விட்டது. இனி நான் புது மனிதன்," என்று உறுதியோடு பகன்றான்.

## அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

### நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



### போட்டிக்குத் தயாரா நீங்கள்?

மேலேயுள்ள படத்தைப் பாருங்கள். பார்த்து விட்டீர்களா? நல்லது. பக்கத்திலுள்ள கூப்பனை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

**இலக்கம்-03**
**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-...................................
படத்தின் இயக்குநர் பெயர்:-...................................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-...................................
இப்படம் வெளியான ஆண்டு:-...................................

*பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.*

> அன்புடன் ஆசிரியருக்கு,
>
> நான் ஒரு தினமுரசு வாசகி. 1.08.93 அன்றைய தினமுரசை பார்த்த நான் ஆச்சரியமடைந்தேன். காரணம் நேயர் அமீரலி பயண அனுபவத்தை எழுதியிருந்தார். அதுமட்டுமல்ல "யார் நீ?" என்ற கேள்விக்குறியுடன் தினமுரசு நான் பதில் தர வேண்டும் என்றும் எழுதியிருந்தார். அன்று (16.07.93) மினி பஸ்ஸில் அமீரலியுடன் பயணம் சென்றவர் வேறுயாருமல்ல நான்தான். எனவே அவரின் நேரடிக்கதையான பயண அனுபவத்தின் "யார் நீ?" என்ற சின்ன அனுபவத்திற்கு பதில் என் அனுபவ கதையை 'இங்கே நான்' என்ற தலைப்பிட்டு எழுதுகிறேன். அவரின் கேள்விக்கு தினமுரசே பதில் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில்.
>
> நன்றி
>
> வாசகி
> திருமதி க. நிரோஸா

## இங்கே நான்....

1.08.93 தினமுரசை பக்கம் பக்கமாக ரசித்துக் கொண்டே ருசித்துக் கொண்டு வந்தேன். என்ன ஆச்சரியம் என் சிவப்பு சர்வாணி உமக்கு கேள்விக்குறி(?)யாகி விட்டதை உணர்ந்தேன். திருப்பித்திருப்பிப் படிப்பவள் நான். ஞாயிறுவர வேண்டிய முரசை வெள்ளியே உமது கைகளில் பார்த்தவுடன் என் உள்ளம் வெள்ளியாக மலர்ந்தது. அதை வைத்திருக்கும் உன்னையும் ஈர்த்துக்கொண்டது. உடனே பார்க்க வேண்டும் என்ற ஆவல் திரும்பித் திரும்பி பார்த்தேன் உம்மையல்ல, பேப்பரை

'இந்தாங்க பாருங்க'

என்று நீராக பேப்பரை தரமாட்டிரா என்ற ஏக்கம். ஆனால் என் பார்வை உமக்குள் பயத்தை ஏற்படுத்தியதை இப்பொழுது எண்ணிச்சிரிக்கின்றேன்.

உம்மைப் போலவே என் மனதும் 'பஸ்மெதுவாகப் போகக்கூடாதா' என்று அவசரப்பட்டது. உம்மை ஆராயவல்ல.

உம் அதரங்கள் ஒரு மெல்லிய புன்னகையுடன் ஆராயும் தினமுரசை நானும் ஆராய வேண்டும் என்ற அவசரம். என் அவசரம் டிரைவருக்குப் புரிந்துவிட்டது. "மொரட்டுவை"யில் பஸ் நின்றது. சந்தர்ப்பம் எனக்கு சாதகமாக மெதுவாக உம்மைப் பார்த்தேன்.

"பேப்பரைத் தர்றீங்கள்?"

கேட்டேன். தந்தீர். வாங்கினேன். வாசக(ர்) சாலை, சிந்தியா பதில்களிலும் நான் என்னைத் தேடிக்கொண்டிருந்த பொழுது நீர் என்னைத்தேடுவதை நான் உணரவேயில்லை. தேன் கிண்ணத் துளிகளில் நான் மெய்மறந்து இருந்ததாலோ என்னவோ என்னை ஆராய்ச்சி பண்ணும் உம்மை ஆராய்ச்சிபண்ண நான் மறந்து போனேன். "குறுக்கெழுத்துப் போட்டி"யில் மேலிருந்து கீழாக, இடமிருந்து வலமாக நிரப்பி நிரப்பி முடியாமல் போக 'சிறுகதை'க்குள் மட்டுமல்ல தொடர்கதை "கண்ணே மதுமிதா"வுக்குள்ளும் புகுந்து கொண்டேன். அது உமக்குப் புரியவில்லையோ? சிவப்பு சர்வாணிக்குள் என்னைத் தேடிக் கொண்டிருந்த உமக்கு அது எப்படி புரிந்திருக்கும். பத்திரிகை நடுவிலும் எனது இடம் 'பேருவளை' வருவதை உணர்ந்து கொண்டேன். உம்மிடம் பேப்பரை தந்தும் தராமல் எழுந்து நின்றேன். நீரும் எழுந்தீர். நான் நினைத்தேன் நீரும் இறங்கப் போகிறீர் என்று. எழுந்த நீர்.....

'நீங்க பேப்பருக்கு ஏதும் எழுதுறதா?' என்று கேட்டீர்.

"இறக்கம்" கிளீனர் பையன்

இறங்கும் அவசரத்தில் "ம்" கொட்டிவிட்டு விரைவாக இறங்கிவிட்டேன். நடந்துவரும் பாதையிலும் தினமுரசின் ஆக்கங்களை மீண்டும், மீண்டும் அசை போட்டுக்கொண்டே வந்தேன். தினமுரசை மறக்கவில்லை. ஆனால் உம்மை மறந்து விட்டேன்.

ஆனால் நீர்....? உமக்கு என் சிவப்பு சர்வாணி ஒரு கேள்விக்குறி? இப்பொழுதும் கூட ஆவலாக உம் கண்கள் அவசரமாக என்னைத் தேடுவதை உணருகின்றேன். உமது மனம் "பக்கு...பக்கு..." என்று துடிப்பதை புரிந்து கொள்கின்றேன்.

"யார் நீ.."

"நிச்சயம் சொல்லிவிடுகிறேன்" என்விடை.

உமக்கு விடை தருமா வினா தருமா?

அவசரப்படாதீர்-இதோ

எ....என்...என்...பெயர்.....

"வெட்கப்படுகிறேன் சொல்லட்டுமா? சொல்கிறேன்...."

16.07.93 வெள்ளிக்கிழமை புறக்கோட்டையிலிருந்து 'அளுத்கம' பஸ்ஸில் ஏறி 'பேருவலை' யில் இறங்கிய சிவப்பு சர்வாணியுடன் வந்த நான்.

'என் பெயர் "நிரோஸா". என்னுடன் வந்தவர் என் சகோதரனல்ல - என் கணவர்'.

என்ன அதிர்ச்சியாக இருக்கிறதா? குட்டை சகோதரனே குட்டை.

திருமதி. நிரோஸா - பேருவளை.

## கௌதமி ரசித்த குஸ்வந் சிங் ஜோக்ஸ்!

**இந்தியப் பத்திரிகையுலகில் மிகப் பிரபலமானவர் குஸ்வந்சிங். அவரது ஜோக்குகள் தனிப்புத்தகமாக வந்துள்ளன. அதனை பிரபல நடிகை கௌதமியிடம் கொடுத்த எமது தமிழக நிருபர் சிறந்த ஜோக்குகளை தெரிவு செய்து தரும்படி கேட்டார். அவர் தெரிந்தெடுத்தவற்றில் சில:**

புதிய காரோட்டி வேலைக்கு வந்திருந்தான். வீட்டு எஜமானி காரில் ஏறிக்கொண்டு கடைத் தெருவுக்குப் போனாள். அவளது உடலே ஆடிப்போய் விட்டது. அவ்வளவு மோசமாக கார் ஓட்டினான். "இவன் நமக்கு சரிப்பட்டு வராது. அவ்வளது இலட்சணமாய் வேலை செய்கிறான். வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள்" என்றாள் எஜமானி.

"அதற்குள் அவசரப்படாதே- இன்னும் ஒரே ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பாரேன்!" என்றார் கணவர்.

■

தன்னைப்பற்றி பெரிதாக எண்ணிக் கொண்டிருந்த ஒருவர் கூட்டமாக இருந்த பஸ்ஸில் ஏறினார். "மிருகக்காட்சிசாலையில் உள்ளதையெல்லாம் பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு வந்து விட்டாய் போலிருக்கிறதே" என்று அகம் பாவத்தோடு நடத்துநரிடம் கேட்டார்.

ஒரு பிரயாணி பதில் சொன்னார். "நீங்கள் ஏறும் வரை ஒரு கழுதை இல்லாமல் இருந்தது."

■

இரண்டு பார்லிமெண்ட் உறுப்பினர்களுடைய மனைவிமார்கள் தங்கள் கணவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருத்தி



பெருமையாகச் சொன்னாள் "என் கணவர் எந்த விசயம் குறித்தும் ஒரு நாள் முழுக்கப் பேசுவார்"

மற்றவள் சளைத்தவளா?

"பூ இதென்ன பெரியவிசயம். என்னுடையவருக்கு விஷயமே வேண்டாம். எவ்வளவு நாள் வேண்டுமானாலும் பேசிக் கொண்டேயிருப்பார்"

■

படைவீரர்கள் தங்கள் மேலதிகாரிகளுக்கு செல்லப் பெயரிடுவது உண்டு. அதனை அறிந்த படை அதிகாரி ஒருவர் தமக்கு என்ன பெயரிட்டுள்ளார்கள் என அறிய விரும்பினார். ஒரு இளம் வீரனைக் கூப்பிட்டுக் கேட்டார். அவன் மிகுந்த தயக்கத்துடன் 'கன்னிப் பெண்' என்று கூறினான்.

அதிகாரி மகிழ்ந்து போனார். "நான் படையில் புகுத்தியுள்ள சிறந்த முறைகளுக்காகத்தான் இருக்கும்" என்றார் பெருமையாக.

"இல்லை. உங்களுக்கு எந்த விதமான அனுபவமும் கிடையாது என்பதனால் தான் அந்தப்பெயர்"

■

இந்திய கிரிக்கட் அணிக்கு முன்னர் கப்டனாக இருந்தவர் பிஷன்சிங் பேடி. அவர் கையில் ஒரு கிரிக்கட் பந்துடன் சந்தைச் சதுக்கத்தில் நின்று கொண்டு "சகோதரர்களே! சகோதரிகளே!" என்று அழைத்துக் கொண்டிருந்தார். விரைவில் அவரைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம். பந்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு "சகோதரர்களே! சகோதரிகளே" மீண்டும் அழைக்கிறார்.

ஒருவன் அவரிடம் வந்து "சர்தார்ஜி ஏதாவது பேசுங்கள். எவ்வளவு கூட்டம் வந்து விட்டது பாருங்கள்" என்றான்.

"எத்தனையோ முட்டாள்கள் விதம் விதமான பந்துகளுடன் வெவ்வேறுவகையான மைதானங்களில் ஆடுவதைப் பார்த்திருப்பார்கள். ஒருபந்தைச் சுற்றி இவ்வளவு முட்டாள்கள் கூடியிருப்பதைப் பார்த்திருக்க மாட்டீர்கள்" என்றார் பேடி.

பேடி சொன்னதைப் புரிந்து கொள்ள கொஞ்சம் மண்டையைப் போட்டு குழப்பிக் கொள்ளுங்களேன்.

இதை என்னிடம் சொன்னவர் வேறு யாருமல்ல. பிஷன்சிங் பேடியேதான். ■

RENO AUDIO VIDEO CENTRE
நீங்கள் விரும்பும் பழைய, புதிய தமிழ், சிங்கள, ஹிந்தி ஆங்கிலப் பாடல்களை கொம்பக்ற் டிஸ்க் (Compact Disc) மூலம் மிகவும் துல்லியமான முறையில் ஒலிப்பதிவு செய்துகொள்ளவும், ஒலிப்பதிவு செய்யப்பட்ட புதிய, பழைய அனைத்து திரைப்படப் பாடல் கசட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும்
கொட்டாஞ்சேனையில் சிறந்த ஒரே இடம்
இன்றே நாடுங்கள்
RENO AUDIO VIDEO CENTRE
91 SHOP No. 3, BLOEMENDHAL FLATS, GEORGE R. DE SILVA MAWATHA, KOTAHENA, COLOMBO-13.
TEL: 446765

வாரமலர் தினமுரசு

## இது ஹொலிவூட் நியூஸ்



புரூஸ்லீக்கு அடுத்ததாக ஹொலிவூட்டில் ஆசியாவில் இருந்து சென்று தனது நகைச்சுவை கலந்த சண்டைக் காட்சிகள் மூலம் புகழ் பெற்றவர் ஜாக்கி சான்.

குங்ஃபூ சம்பியனான இவர் தென்னாசியா முழுவதும் பிரபலமான நடிகர். தனது பெயரைப் பணமாக்க முடிவு செய்த அவர் ஜாக்கி சான் என்ற பெயரில் ரெடிமேட் ஆடைகளைத் தயாரித்து தனது சொந்தக் கடைகளிலேயே விற்பதற்கு விளம்பரம் செய்துள்ளார்.

இவருக்கு சீனா, ஜப்பான், தாய்லாந்து போன்ற நாடுகளில் ஏராளமான காட்சி அறைகள் உள்ளன. இதன் மூலம் சுமார் 33 மில்லியன் டொலர் வருமானம் வருகின்றது. சினிமாவிலும் அதே அளவு வருமானம்.

இவர் ஜாக்கி சானா, லக்கி சானா? ஃபப்பா.



ஹொலிவூட்டில் சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருதை இருமுறை பெற்றவர் பிரபல நடிகை எலிசபெத் டெய்லர். சென்ற வருடம் கூட எயிட்ஸ் நோய்க்கு எதிராக சிறப்பான முறையில் பணியாற்றி வருவதற்காக விசேட விருதொன்றைப் பெற்றார்.

பதினைந்து ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் இவர் மீண்டும் நடிக்க வருகிறார். பிரபல எழுத்தாளர் அகதா கிறிஸ்டியின் மிரர் கிராக்ட் என்ற படத்தில்தான் இவர் 1980 ஆண்டு கடைசியாகத் தோன்றியிருந்தார்.

இப்போது ஹொலிவூட்டின் பிரபல இயக்குநர் மைக்கல் லைபேர்மென் தயாரிக்கும் கார்ட்டூன் கொமெடி படத்தில் தோன்றுகிறார்.



## ஒரு கொடியில்— இரு மூன்று மலர்கள்!

பார்வைக்கு ஒரே விதமாகத் தோன்றுகிறார்கள் அல்லவா? பாவையர்கள் மூவரும் ஆம் - மூவரும் ஒரே தோட்டத்தில் மலர்ந்த பூக்கள்தான்.

ஹொலிவூட் திரையுலக நட்சத்திர தம்பதியினரான ரொபேட் வாக்னர், நேத்தலியூ ஆகியோரின் புதல்விகளே மூவரும். நடுவிலே உள்ளது கேட்டி வாக்னர், வயது 18. திரைப்படத்தில் நடிக்க ரெடி. வலது கோடியில் இருப்பது நடாஷா வாக்னர் வயது 23. 'மொபைல் அட்ட சன்' திரைப்படத்தில் நடித்திருக்கிறார். சரி, இடது கோடியில் இருப்பவர்? அவள் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர். மொத்தத்தில் கலைக் குடும்பம். நடன் வுட்.



## இறைச்சி பழக்கறி

அன்னாசிப்பழங்கள் கிடைக்கும் காலங்களில் சுவையான இறைச்சி பழக்கறி செய்து சாதத்துடன் உண்ணலாம். அன்னாசிப் பழங்கள் கிடைக்காத காலங்களில் பதனிடப்பட்டு டப்பாக்களில் அடைக்கப்பட்டு விற்கப்படும் பழங்களையும் பாவிக்கலாம்.

சமைப்போம் சுவைப்போம்

**இதற்குத் தேவையானவை**

முள்ளில்லாத இறைச்சி - 600கிராம்.
(விரும்பிய எந்த இறைச்சியையும் பயன்படுத்தலாம்)
கறி மசாலத் தூள் -1 1/2கரண்டி.
அன்னாசிப் பழம் வட்டமாக வெட்டப்பட்டது - 450 கிராம்.
தேங்காய்ப் பால் - 400 கிராம்.
பச்சை வாழைப்பழம் - 1 (பெரியது)
உப்பு + மிளகுத்தூள் - தேவையான அளவு.

**செய்முறை**

இறைச்சியை நன்றாகக் கழுவி வேகவைத்து, மெதுமெதுப்பானதும் எடுத்து, சிறு சிறு துண்டுகளாக வெட்டவும். கறி மசாலாத்தூளையும் சிறிதளவு உப்பையும் சேர்த்து இறைச்சித்துண்டுகளுடன் பிரட்டவும். இவற்றை ஒரு சோஸ்பானில் இட்டு அடுப்பில் வைத்து மெதுவான சூட்டில் கிளறவும். கொதிக்கும் பருவத்தில் தேங்காய்ப் பாலையும் சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட அன்னாசிப் பழத்துண்டுகளையும் துண்டுகளாக்கப்பட்ட பச்சை வாழைப்பழத்தையும் சேர்த்து 15 நிமிடம் வரை வேகவிடவும். சுவையைக் கூட்ட ஒரு பம்பாய் வெங்காயத்தை வட்டமாக அரிந்து சேர்த்துக் கொள்ளலாம். அடுப்பிலிருந்து இறக்குவதற்கு 3 நிமிடங்களுக்கு முன்னர் 3 ஏலக்காய் ஒரு சிறு துண்டு கறுவா ஆகியவற்றைப் பொடி செய்து ஒரு நெட்டி கறிவேப்பிலையும் போடவும். அரிசி சோற்றுடன் உண்ண இது 6 பேருக்கு ஏற்றது.

குறிப்பு: இறைச்சியை விரும்பாதவர்கள் சோயா மீற் பாவிக்கலாம்.

## ஆடிய ஆட்டம் என்ன? அடங்கிய வேகம் என்ன?

தலையிலே முடி இருப்பதால் மட்டுமே என்ன முடிவும் செய்யலாம் என்று ஆட்டம் போட்ட மன்னர்கள் வரிசையில் சார்ல்ஸ் மன்னனும் ஒருவர்.

இங்கிலாந்தை கட்டியாண்டபோது மக்களை பொட்டுப் பூச்சிகளாய் நடத்தினார்.

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நான்கு பாராளுமன்றங்களைக் கலைத்தார். வரி வராமல் பாராளுமன்றம் தடுக்கிறது. அதுதான் இது அடுக்காது என்று கலைத்தேன் என்று சொன்னார்.

பொறுத்தவர்கள் பொங்கியெழுந்தனர். ஒலிவர் குரோம்வெல் தலைமையில் வெடித்தது புரட்சி! அதிகாரப் போதையில் ஆடிய மன்னர் சிறைப் பிடிக்கப்பட்டார்.

உயர் நீதிமன்றம் கொற்றவன் செய்த குற்றங்களை விசாரித்தது. கொய்யுங்கள் தலையை என்று உத்தரவிட்டது. ஆதிக்க முடி தாங்கிய சிரம் அறுத்து வீசப்பட்டது.

இது பழைய கதைதான். ஆதிக்கமும் மக்களை மதியாமையும் நிலைக்காது என்பதற்கு இன்றும் பாடமாக இருக்க வேண்டிய கதை.



சார்ல்ஸ் மன்னரின் குடும்பப் படம். நடுவில் உள்ளவர்தான் பின்னர் இரண்டாவது சார்ல்ஸ் மன்னராக முடிசூட்டிக் கொண்டவர்.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பார, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.